



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI Volume- 3 Issue:179 13-01-2026 செவ்வாய்க்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

13.01.2026 மார்கழி 29
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று மாலை 5.36 வரை
தசமி பின்பு ஏகாதசி

நட்சத்திரம்:
இன்று முழுவதும் விசாகம்.

யோகம் :
இன்று இரவு 9.29 வரை
சூலம் பின்பு கண்டம்.

கரணம் :
இன்று அதிகாலை 4.45 வரை
வணிசை பின்பு மாலை 5.36
வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
யோகம் சரியில்லை.


சந்திராஷ்டமம்
இன்று முழுவதும் ரேவதி.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.
எமகண்டம்
காலை 9.00 – 10.30..

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## ராக்கெட்



ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து நேற்று (ஜனவரி 12) காலை 9:15 மணிக்கு பிஎஸ்எல்வி சி-62 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ராக்கெட், இந்தியாவின் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான இஓஎஸ்-என்1 மற்றும் அன்வேஷா உள்ளிட்ட 16 செயற்கைக்கோள்களுடன் விண்ணில் பாய்ந்தது.

# “மொழிக்காக உயிரையும் தந்த தியாக மறவர்களை கொண்ட இயக்கம் திமுக”

## முதல்வர் ஸ்டாலின் அயலக தமிழர் தின விழாவில் பேச்சு!

**சென்னை, ஜன.13:**
சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2026” விழாவில், அயலகத் தமிழர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் விருது வழங்கினார். பின்னர் அவர் பேசியபோது, “ நூற்றாண்டுகளுக்கு முன் தங்களின் தாய்மண்ணான தமிழ்நாட்டில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக, வாய்ப்புகளுக்காக பறந்து சென்றவர்கள் உங்கள் முன்னோர்கள்.

அவர்களை வாழ்க்கை தேடிப் சென்றவர்கள் என்று சொல்வதைவிட, அந்தந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு நன்மை செய்வதை போலவே, அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் சகோதரனாக இருந்து நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

உங்களுக்காகவே அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. வேறு நாட்டில் செட்டிலான சிட்டிசனாக இருந்தாலும், அயலகத்தில் உழைக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும், நீங்கள் எந்த குறையும் இல்லாமல் வளமாய் வாழ வேண்டும் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

* நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, ’அயலகத் தமிழர் நல வாரியம்’ என்று 15 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்தோம்.




* ஜனவரி 12 அயலகத் தமிழர் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழால் இணைவோம், உலகெங்கும் தமிழ், தமிழ் வெல்லும் என்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கிறது.

* தமிழ்நாட்டில் 105 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக, 7 ஆயிரத்து 469 வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு, படிப்படியாக கட்டப்பட்டு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

* வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவி மையம் துவக்கப்பட்டிருக்கிறது.

* “தமிழ் வேர்களைத் தேடி பயணம்” மூலமாக உங்களை எல்லாம் தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வருகிறோம்.

* புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் ‘எனது கிராமம்’ திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது.

* அயல்நாடுகளில் வேலைக்குச் சென்று அங்கு இறக்க நேரிடும் வாரிய உறுப்பினர் குடும்பத்திற்கு மாதந்தோறும் நிதியுதவி அளிக்கும் திட்டம் அமலில் இருக்கிறது.

* உக்ரைன், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர், இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில், 2 ஆயிரத்து 398 தமிழர்களை அயல்நாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் மீட்டுக் கொண்டு வந்திருக்கிறோம்.

* தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகவே, தமிழ்ப் பரப்புரைக் கழகம் என்ற ஒரு அமைப்பைச் செயல்பட வைத்திருக்கிறோம்.

* புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்காகப் பாடுபடும் தமிழ்ச் சங்கங்களுக்கு விருதுகள் மற்றும் அங்கீகாரம் அளிக்கிறோம். கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், வணிகம் ஆகிய துறைகளில் சாதனை படைக்கும் அயலகத் தமிழர்களைத் தேர்ந்தெடுத்து, கணியன் பூங்குன்றனார் விருது வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

* அயலகத்தமிழர்களில் பன்முகத்தன்மையோடு விளங்கும் ஒரு தமிழரைத் தேர்ந்தெடுத்து, “தமிழ்மாமணி” விருதும், பட்டயமும் வழங்கியிருக்கிறோம்.

* அயல்நாட்டுத்தமிழர்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே உறவுப் பாலமாக செயலாற்றும் அயலகத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு “சிறந்த பண்பாட்டுத் தூதுவர்” விருதையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்றார்.

# ‘மக்கள் மயக்கமடைந்தபோதும் பேச்சை நிறுத்தாதது ஏன்?’

## விஜய்யிடம் சிபிஐ கேள்வி

**புதுடெல்லி, ஜன.13:**
தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கடந்த ஆண்டு செப். 27ம் தேதி கரூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர். இது குறித்து வழக்குப் பதிவு செய்து சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது.

விசாரணையின் முக்கிய நடவடிக்கையாக, தவெக தலைவர் விஜய்யிடம் பல்வேறு கேள்விகளை எழுப்ப முடிவு செய்த சிபிஐ, அவரை இன்று விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பி இருந்தது. அதன் அடிப்படையில், சென்னையில் இருந்து தனி விமானத்தில் விஜய் இன்று காலை டெல்லி சென்றார். பின்னர், சிபிஐ தலைமையகத்துக்குச் சென்று விசாரணையில் நேரில் ஆஜரானார்.

இந்த விசாரணையின்போது மூன்று முக்கிய கேள்விகளை சிபிஐ, விஜய்யிடம் எழுப்பியதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த கேள்விகள் கடுமையானவை மற்றும் முக்கியமானவை என சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் கேள்வியான, ‘நீங்கள் ஒரு திறந்த வாகனத்தில் நின்று கொண்டிருந்தீர்கள், கூட்டத்தில் மக்கள் மயங்கி விழுவது தெளிவாகத் தெரிந்தும், நீங்கள் உங்கள் பேச்சைத் தொடர்ந்தது ஏன்?’ எனக் கேட்கப்பட்டது.

இரண்டாவது கேள்வியில், ‘சிலர் மயங்கி விழுந்தபோது, நீங்கள் கூட்டத்திற்குத் தண்ணீர் பாட்டில்களை விநியோகித்துக் கொண்டிருந்தீர்கள், அப்படியிருந்தும் இந்த விஷயத்தில் ஏன் எந்த உடனடி நடவடிக்கையும் எடுக்கவில்லை?’ எனக் கேட்டனர்.

மூன்றாவது மற்றும் மிக முக்கியமான கேள்வியாக, ‘நீங்கள் ஏன் சரியான நேரத்தில் கூட்ட இடத்திற்கு வரவில்லை? உங்கள் தாமதம் கூட்டத்தில் அமைதியின்மையையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தியது. இது உங்கள் அரசியல் அதிகாரத்தைக் காட்டும் செயலா?’ என கேட்கப்பட்டது.



கரூர் பேரணியின் ஏற்பாடுகள், திட்டமிடல், காவல்துறையுடனான ஒப்பந்தங்கள், கூட்டக்கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அவரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

பேரணியை ஏற்பாடு செய்தல் மற்றும் நிர்வகிப்பதில் ஏற்பட்டதாகக் கூறப்படும் அலட்சியம் குறித்தும் விஜய்யிடம் சிபிஐ விசாரணை நடத்துகிறது. முக்கியமாக, தவெக பேரணிக்கு முன்பு கட்சித் தலைவர்களுடன் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பற்றி சிபிஐ அறிய விரும்புகிறது.

கரூர் நிகழ்வின் போது என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டன? என்ன குறைபாடுகள் ஏற்பட்டன? என்பதை கண்டறிய சிபிஐ முயற்சிக்கிறது. பேரணியின் போது காவல்துறைக்கும் கட்சிக்கும் இடையே பேசப்பட்ட ஏற்பாடுகளும் சிபிஐயின் முக்கிய அம்சமாக உள்ளது. கூட்டக் கட்டுப்பாடு ஏன் முறையாகப் பின்பற்றப்படவில்லை? என்பது குறித்தும் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. இவ்வளவு பெரிய கூட்டத்திற்குத் தண்ணீர், பாதுகாப்பு மற்றும் அவசரகால மேலாண்மைக்கான ஏற்பாடுகள் போதுமான அளவில் ஏன் செய்யப்படவில்லை என்பது குறித்தும் சிபிஐ விசாரணை நடத்துகிறது.

மேலும், பேரணியின் செலவுகள், உள்கட்டமைப்பு, போக்குவரத்து, தன்னார்வலர்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆவணங்களின் உண்மைத்தன்மையை ஆராய சிபிஐ திட்டமிட்டுள்ளது.

# சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் ரவுடி வெட்டிக்கொலை - அதிர்ச்சி சம்பவம்

**சென்னை, ஜன.13:**
சென்னை கொளத்தூர் 6வது தெரு மகாத்மா காந்தி நகரை சேர்ந்த ரவுடி ஆதிகேசவன் (வயது 23). இவர் மீது கொலை, கொலை முயற்சி உள்பட 9 வழக்குகள் உள்ளன.

ரவுடி ஆதிக்கும் , சென்னை ஆவடி ஏரிக்கரை தாழம்பூ தெருவை சேர்ந்த நவீன்குமார் மனைவி சுசித்ரா (வயது 21) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே நிறைமாத கர்ப்பிணியாக இருந்த சுசித்ராவுக்கு கடந்த 18ம் தேதி கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை நேற்று இரவு உயிரிழந்தது. குழந்தை உயிரிழந்தது குறித்து ஆதியிடம் சுசித்ரா தெரிவித்துள்ளார். இதையடுத்து சுசித்ராவை பார்க்க ஆதி நேற்று இரவு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்துள்ளார். சுசித்ராவை பார்த்துவிட்டு நேற்று இரவு மருத்துவமனை வளாகத்திலேயே ஆதிகேசவன் படுத்து உறங்கியுள்ளார்.

இந்நிலையில், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு இன்று அதிகாலை ஹெல்மெட் அணிந்தபடி மர்ம நபர்கள் 3 பேர் அரிவாள், கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் வந்துள்ளனர். மருத்துவமனை வளாகத்தில் உறங்கிக்கொண்டிருந்த ஆதிகேசவனை அந்த கும்பல் சரமாரியாக வெட்டியது. இந்த கொடூர தாக்குதலில் படுகாயமடைந்த ஆதிகேசவன் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். இதையடுத்து, ஆதிகேசவனை வெட்டிக்கொன்ற கும்பல் அங்கிருந்து பைக்கில் தப்பிச்சென்றனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், ஆதிகேசவனின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், ரவுடி ஆதிகேசவனை வெட்டிக்கொன்றுவிட்டு தப்பியோடிய 3 பேர் கொண்ட கும்பலை தீவிரமாக தேடி வருகின்றனர். ரவுடி கொலையில் தொடர்புடையவர்கள் யார்? கள்ளக்காதல் விவகாரத்தில் கொலையா? வேறு சம்பவங்களில் பழிக்குப்பழியாக? ரவுடி ஆதிகேசவன் கொலை செய்யப்பட்டாரா? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# சட்டசபை தேர்தல் முன்னேற்பாடு பணிகள்: அடுத்த மாதம் இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தமிழகம் வருகை

**புதுடெல்லி, ஜன.13:**
தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய 5 மாநிலங்களில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது.

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் தேர்தல் பரீட்சைக்கு தயாராகும் வகையில், இப்போதே முழு வீச்சில் களம் இறங்கியுள்ளன. கூட்டணி பேச்சு வார்த்தைகள் திரை மறைவில் நடந்து வருகின்றன.

### தேர்தல் ஆணையம் நடவடிக்கை

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, மற்றொரு பக்கம் 5 மாநில தேர்தல்களையும் அமைதியாக நடத்தி முடிக்க இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.




தமிழகத்தில் நடைபெற்று வரும் திமுக ஆட்சியின் பதவிக்காலம் மே மாதம் 10-ந் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, அதற்கு முன்பு சட்டசபை தேர்தல் நடத்தி முடிக்கவேண்டும்.

### தமிழகத்தில் தேர்தல் எப்போது?

பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள மேற்கு வங்காளத்தில் 5 கட்டங்களாக சட்டசபை தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அங்கு 2-வது கட்ட தேர்தல் நடக்கும்போது, அத்துடன் தமிழகத்திலும் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

எனவே, அடுத்த மாதம் (பிப்ரவரி) இறுதியிலோ, மார்ச் முதல் வாரத்திலோ தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

### அடுத்த மாதம் தமிழகம் வருகை

ஏற்கனவே, தமிழகத்தில் வாக்காளர் பெயர் பட்டியலில் தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் 18-ந் தேதி வரை இந்தப் பணிகள் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 17-ந் தேதி வெளியிடப்பட உள்ளன. அப்போது, பட்டியலில் பெயர் உள்ளவர்கள்தான் சட்டசபை தேர்தலில் வாக்களிக்க முடியும்.

இந்த நிலையில், தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் அடுத்த மாதம் (பிப்ரவரி) தமிழகத்திற்கு வருகை தந்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

இந்த ஆலோசனையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளான கலெக்டர்கள் மற்றும் போலீஸ் டிஜிபி உள்பட காவல் துறை அதிகாரிகள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.



## திருக்குறள் குறள்-499

**சிறைநலனுஞ் சீரும் இலரெனினும் மாந்தர்**
**உறைநிலத்தோ டொட்ட லரிது**



அரணாகிய நன்மையும்
மற்றச் சிறப்பும்
இல்லாதவராயினும்
பகைவர் வாழ்கின்ற
இடத்திற்குச் சென்று
அவரைத் தாக்குதல் அரிது.

## சிந்திக்க ஒரு நொடி



அன்பு தரும்
உறவை மனதில்
வை....
அனுபவம்
தரும் உறவை
நினைவில் வை....

**உஷா முத்துராமன்**

## மேல்மலையனூரில் சமத்துவ பொங்கல் விழா





விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றியசேர்மன் கண்மணி நெடுஞ்செழியன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் துறை சார்ந்த அதிகாரிகள் ஒன்றி கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர், **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## பால் உற்பத்தியாளர் அங்கத்தினர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா




திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் சோமாசிபாடி கிராமத்தில் T.P.S. 66 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் சார்பில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டிடத்தை திறந்து வைத்து அங்கத்தினர்களுக்கு ஊக்கத்தொகைகளை மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் வழங்கினார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில்உயர்திரு.மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# சமத்துப் பொங்கல் திருவிழா மற்றும் கடம்ப மரம் நடும் விழா



**மதுரை, ஜன.13:**
தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மதுரை மாநகர் கிளையின் கீழடி ஐந்தாம் கட்ட அகழ்வாய்வு நடைபெற்ற இடத்தில் சமத்துப் பொங்கல் திருவிழா மற்றும் கடம்ப மரம் நடும் விழா என மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது .

குழந்தைகள் , பெற்றோர் , செயற்குழு உறுப்பினர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் . தசிஎகச தலைவர் ச.நஜுமுதீன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்க முனைவர் கீழடி கரு முருகேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

பரதம் , வில்லுப்பாட்டு, ஒயிலாட்டம், கதைசொல்லல் , சிலம்பம், சுருள் என பல்வேறு வகையான நிகழ்வுகளை சிறார்கள் நிகழ்த்தினர் . ஹுஸ்னாரா பானு வரவேற்புரையாற்ற மாணவி லிபி நேத்ரா நன்றியுரை கூறினார் . நிகழ்வில் பசுமை பாரதிதாசன், தமிழ்ச்செம்மல்இரா. இரவி, திருமதி சாந்தி, முனைவர் ஜோஸபின் மேரி , கவிஞர் துளிர் , விஸ்வநாத தாஸ் , அனுசுயா , அமுதா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தசிஎசக செயலாளர் மு.சுலைகா பானு செய்திருந்தார்.

# புகையில்லா போகி விழிப்புணர்வு




**காவேரிப்பட்டினம், ஜன.13:**
காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் கல்வி திட்டம் (EEP) சார்பில் புகையில்லா போகி விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் முத்து லட்சுமணன் தலைமை தாங்கினார். ஆசிரியர் மனோகரன் வரவேற்புரை ஆற்றினார். சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் கவிதா புகையில்லா போகி என்ற தலைப்பில் நெகிழி, பழையதுணிகள் மற்றும் பழைய பொருட்களை போகிப்பண்டிகையின்போது எரித்து சுற்றுச்சூழலில் மாசுக்கள் ஏற்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி பேசினார்.

மேலும் பிளாஸ்டிக் பொருள்களை எரிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். நிறைவாக தமிழாசிரியர் திருமலை நன்றி நவீல கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## 2026 ஆம் ஆண்டு காலண்டர் மற்றும் டைரிகளை வழங்கும் நிகழ்வு



**திருவாரூர், ஜன.13:**
வலங்கைமானில் வர்த்தக சங்கத்தினர் வர்த்தகர்களுக்கு 2026 ஆம் ஆண்டு காலண்டர் மற்றும் டைரிகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வர்த்தகர் சங்கத்தின் சார்பில் வருடந்தோறும் புத்தாண்டிற்கு காலண்டர் மற்றும் டைரிகளை வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுவது வழக்கம்.

அதேபோல் இந்த ஆண்டும் வர்த்தக சங்க தலைவர் கே.குணசேகரன், செயலாளர் ராயல் கோ.திருநாவுக்கரசு, பொருளாளர் எஸ்.புகேழந்தி, துணைத்தலைவர் என்.மாரிமுத்து, இணைச் செயலாளர்கள் எஸ். சிவசங்கர், ஒய்.யகூப்சலீம் மற்றும் நிர்வாக குழுவினர் வலங்கைமானில் உள்ள அனைத்து வர்த்தகருக்கும் வழங்கப்பட்டது.

வலங்கைமான் அருகே உள்ள விருப்பாச்சிபுரம் வர்த்தகர்கள் நீண்ட நாட்களாக தங்களை வலங்கைமான் வர்த்தக சங்கத்துடன் இணைத்து கொள்ளவேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தனர். அதனை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கோ.குணசேகரன் தலைமையில் நிர்வாகிகள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனைத் தொடர்ந்து அவர்களையும் முழு மனதோடு இணைத் கொண்டனர்.

## 7-ஆம் நாள் காலை உத்தராயண புண்ணியகால உற்சவம்



திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் உத்தராயண புண்ணியகால உற்சவம் 7-ஆம் நாள் காலை உற்சவர் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், அலங்காரங்களுடன் மாடவீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மயிலாடுதுறை சென்ட்ரல் லயன்ஸ் சங்கத்தின் சார்பாக பொங்கல் தின விழா




**மயிலாடுதுறை,ஜன, 13 :**
மயிலாடுதுறை சென்ட்ரல் லயன்ஸ் சங்கத்தின் சார்பாக பொங்கல் தின விழா பிஎம்ஜெஎப் லயன் எஸ். வீராசாமி இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

இன்றைய விழாவில் மாவட்ட ஆளுநர் தேர்வு பிஎம்ஜெஎப் லயன் என். மோகன்ராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தலைவர் லயன் கோபால் ராஜ், பொருளாளர் லயன் மணி, மண்டலநிர்வாக அலுவலர் லயன் மதியரசன், லயன் சிவராமன், லயன் பாண்டிய மன்னன், லயன் முத்துராமன்,லயன் மகாலிங்கம், லயன் சுப்பிரமணியன் லயன் ரமேஷ் சந்த் , ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## திருவம்பாவை ஊர்வலம்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்கழி 28-ஆம் நாள் திருவம்பாவை ஊர்வலம் நடந்தது.

## தேசிய இளைஞர் தின விழா



**தஞ்சாவூர், ஜன.13:**
தஞ்சாவூர் மாவட்டம் பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீபுஷ்பம் கல்லூரியில் நேற்று (12.01.2026) தேசிய இளைஞர் தின விழா காலை 10.30 மணியளவில் முனைவர் V.மணிராஜ் முதல்வர் (பொறுப்பு) அவர்கள் வரவேற்புரை வழங்க, சுவாமி விவேகானந்தர் யார்? ஒரு வாசிப்பு என சுவாமி விவேகானந்தர் பற்றி மாணவர்கள் ஒரு கருத்துரை வழங்க, ஸ்ரீமான் கல்விக்காவலர் து.கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் (செயலர் & தாளாளர் அ.வீ.வா.நி ஸ்ரீபுட்பம் கல்லூரி) தன்னாட்சி பூண்டி வாழ்த்துரை வழங்க, சுவாமி விமூர்த்தானந்தர் அவர்கள் (தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், தஞ்சாவூர்) ஆசியுரை நிகழ்த்தி அதனைத் தொடர்ந்து உறுதிமொழி ஏற்பும், முனைவர் M.மதன் மோகன் அவர்கள் துணை முதல்வர் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பூண்டி ஸ்ரீ புஷ்பம் கல்லூரி மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடம், தஞ்சாவூர் செய்து இருந்தனர்

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச் சாவடி, தஞ்சாவூர்**

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் திருமதி டாக்டர் எஸ். கவிதா பொறுப்பேற்பு



**திருவண்ணாமலை, ஜன.13**
திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் திருமதி டாக்டர் எஸ். கவிதா அவர்களை தமிழ் நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட வட்ட நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் நேற்று (12.01.26) சந்தித்து பேசினோம்.

அப்போது ஓய்வூதியர்களின் மருத்துவ காப்பீடு தொகை மீளப் பெறும் கருத்துக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டோம். அப்போது அலுவலர் தரப்பில் கருத்துருவில் கீழ் கண்ட ஆவணங்கள் அனைத்தும் விடுதலின்றி முழுமையாக வருவதில்லை என தெரிவிக்கப்பட்டது.

1) Discharge summary
2) Investigation Report
3) Consolidated Bill
4) Sub vouchers
5) ஓய்வூதிய புத்தக நகல்
6) மருத்துவ காப்பீடு அட்டைநகல்
7) வங்கி கணக்கு புத்தகம் முன் பக்கம் நகல்
8) இணைப்பு படிவம்

எனவே ஓய்வூதியர்கள் மருத்துவ காப்பீடு தொகை கோரும் கருத்துருவில் மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் விடுதலின்றி இணைத்து அனுப்ப வேண்டும் என தெரிவித்து கொள்கிறோம். மாவட்ட நிர்வாகிகள்.

# சமத்துவ பொங்கல்



அரியலூர் மாவட்டம்,ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்து கழக பணிமனையில், சமத்துவ பொங்கல் விழாவில் அமைச்சர் சிவசங்கர் பங்கேற்றார்.

# சமத்துவ பொங்கல் விழா




**விழுப்புரம்,ஜன.13:**
விழுப்புரம் மாவட்டம் காணை வட்டார வளமையத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது....

தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஆரோக்கிய அனிதா தலைமையில் ஆசிரியரியபயிற்றுனர்கள் சுபாஷ்...இவாஞ்சலின் கவிதா... அனிதா, எழிலரசி, ஈவாப்ரீத்தா.. லட்சுமி, கெஜலட்சுமி, கோபாலகிருஷ்ணன், ஒன்றிய பொறியாளர் மாதவன், அலுவலக பணியாளர்கள் குமார், மணிமாறன், கணக்காளர்கள் குபேரன், பிரேமா, சுதா, சிறப்பு பயிற்றுனர்கள் லியோனி, விஜயலட்சுமி, சரண்யா, பரமேஸ்வரி இயன்முறை மருத்துவர் தே.சௌந்தரராஜன்.. உதவியாளர் கிளாரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மெரினாவில் இரவில் அணிவகுத்து சென்ற பைக்குகள்: 600 இருசக்கர வாகனங்களில் சாலை பாதுகாப்பு பேரணி

**சென்னை, ஜன.13:**

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வின் ஒரு பகுதியாக, 600 பைக்குகள் மெரினாவில் அணிவகுத்து சென்றன. இந்த மாதம் ஜனவரி 1 முதல் 31-ம் தேதி வரை சாலை பாதுகாப்பு மாதம் கடைபிடிக்கப்படுகிறது.

இதையடுத்து இந்த ஜனவரி முழுவதும் பல்வேறு சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு சாலை பாதுகாப்பு சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நேப்பியர் பாலத்தில் நிறைவு இதன் ஒரு பகுதியாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் நேற்று முன்தினம் இரவு 'சூப்பர் பைக் பேரணி' மெரினா காமராஜர் சாலையில் நடைபெற்றது. இதை சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் கார்த்திகேயன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேரணியில் 600-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் போக்குவரத்து காவல் துறையினர் பாதுகாப்பு அம்சங்களுடன் பங்கேற்றனர். இந்த பேரணியானது அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தில் தொடங்கி காமராஜர் சாலை உழைப்பாளர் சிலை, காந்தி சிலை, ஆர்.கே.சாலை, அண்ணா ரோட்டரி, பெரியார் சிலை, கொடி மரச்சாலை வழியாக சென்று நேப்பியர் பாலத்தில் முடிவடைந்தது. இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் இணை ஆணையர் விஜயகுமார், துணை ஆணையர்கள் மேகலினா ஐடன், குமார், ஜெயகரண் (ஆயுதப்படை) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஓய்வுபெற்ற அதிகாரியிடம் ரூ.1.23 கோடி மோசடி: ஆன்லைன் பங்குச்சந்தை முதலீட்டு ஆசைகாட்டி ஏமாற்றியவர் கைது

**சென்னை, ஜன.13:**

வில்லிவாக்கத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மின்வாரிய அதிகாரி மகேந்திரன் (66). இவரை செல்போனில் அழைத்து பேசிய நபர் "ஆன்லைன் பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் அதிகலாபம் கிடைக்கும். இதற்கு தேவையான உதவிகளை செய்து தருகிறேன்" என ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதை நம்பிய மகேந்திரன் அந்த நபர் அறிவுறுத்திய பங்கில் முதலீடு செய்துள்ளார். அதன்படி அதிக லாபம் கிடைத்துள்ளது. அந்த லாப பணத்தை அவர் எடுக்க முயன்றபோது முடியவில்லை.

இதுகுறித்து கேட்டபோது, மேலும் பணத்தை முதலீடு செய்ய அறிவுறுத்தியுள்ளனர். இதையடுத்து மகேந்திரன் பல்வேறு தவணைகளாக அவர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளில் ரூ.1.23 கோடி செலுத்தியுள்ளார். ஆனால் அவர் செய்த முதலீடு, அதற்கான லாபம் எதுவும் கிடைக்கவில்லை. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மகேந்திரன், அளித்த புகாரின்பேரில் சைபர் க்ரைம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பண மோசடியில் ஈடுபட்டது ஈரோடு மூலப்பாளையத்தைச் சேர்ந்த செந்தில் குமார் (41) என்பது தெரியவந்தது. இவர் அங்குள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் மேலாளராகவும் பணி செய்து வந்துள்ளார். இதையடுத்து அவரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

## கேலோ இந்தியா அமைப்பு சார்பில் தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டி

**திருப்போரூர், ஜன.13:**

கேலோ இந்தியா அமைப்பு சார்பில் தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டிகள் திருப்போரூரில் கடந்த 2 நாட்களாக நடைபெற்றன. இதில், 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் பங்கேற்றனர். போட்டிகளில் வென்ற பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப் பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் பங்கேற்ற இப்போட்டிகளை கேலோ இந்தியா அமைப்பின் தென் மண்டலப் பிரிவு நடத்தியது. 14 வயது முதல் 16 வயதுக்கு உட்பட்டோர், 16 முதல் 18 வயதுக்கு உட்பட்டோர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டோர் என 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் கலந்து கொண்டனர்.

ரூ.1.38 லட்சம் பரிசு: இந்தப் போட்டிகளை தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகப் பதிவாளர் லில்லி புஷ்பம் கொடியசைத்து தொடங்கிவைத்தார். வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பொது மேலாளர் எல். சுஜிதா, கோட்டாட்சியர் மணிகண்டன் ஆகியோர் பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர். மொத்தம் ரூ.1.38 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

## சென்னையில் 'டபுள் டெக்கர்' பேருந்து: முதலமைச்சர் ஸ்டாலின் துவக்கினார்



**சென்னை, ஜன.13:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2026" விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள (டபுள் டெக்கர்) மின்சார பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் மற்றும் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் இணைந்து, ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் ஒரு இரட்டைத் தள மின்சார பேருந்தை ஹிந்துஜா அறக்கட்டளை, மும்பை மூலமாக தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை இயக்குவதற்காக வழங்கப்பட்ட இப்பேருந்தின் சேவையினை முதலமைச்சர் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

முதற்கட்டமாக சென்னையில், முன்மொழியப்பட்ட சுற்றுலா வழித்தடத்தின் படி, டிடிடிசி தலைமையகம் எல்ஐசி ஸ்பென்சர் பிளாசா மக்கா மஸ்ஜித் பி. ஓர் சன்ஸ் (வாட்ச் டவர்) பல்லவன் சாலை பாடிகார்டு முனீஸ்வரர் கோவில் ராஜா அண்ணாமலை மன்றம் சென்னை உயர்நீதிமன்றம் தலைமைச் செயலகம் ரிசர்வ் வங்கி சென்னை துறைமுகம் வெற்றி போர் நினைவுச்சின்னம் நேப்பியர் பாலம் அண்ணா, கலைஞர், முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்.,ஜெயலலிதா ஆகியோரது நினைவிடங்கள் மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் பட்டினப்பாக்கம் கடற்கரை சாந்தோம் தேவாலயம் அகில இந்திய வானொலி கலங்கரை விளக்கம் - காவல்துறை தலைமை அலுவலகம் குயின் மேரீஸ் கல்லூரி விவேகானந்தர் இல்லம் பிரெசிடென்சி கல்லூரி எழிலகம் சென்னை பல்கலைக்கழகம் தூர்தர்ஷன் கேந்திரா இராஜாஜி மண்டபம் ஓமந்தூரார் அரசு மருத்துவமனை டிடிடிசி தலைமையகம் ஆகிய வழித்தடங்களில், நகரின் முக்கிய சுற்றுலா மற்றும் பாரம்பரிய இடங்களை முழுமையாகக் காணும் வகையில் பனோரமிக் பார்வை வசதியுடன் இப்பேருந்தின் சேவை இயக்கப்பட உள்ளது.

## சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிரால் மக்கள் பாதிப்பு

**சென்னை, ஜன.13:**

சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் நிலவும் கடும் குளிரால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். இயல்புக்கு மாறான வானிலை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சென்னை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. பொதுமக்கள் ஸ்வெட்டர், மஃப்ளர் சகிதமாக காலை, மாலை வேளைகளில் வலம் வருகின்றனர்.

விடுமுறை தினத்தில்கூட குழந்தைகள் அதிகம் வெளியில் விளையாடுவதை பார்க்க முடியவில்லை. இருசக்கர வானங்களில் செல்லும்போது, குளிர் நடுங்கச் செய்கிறது. சென்னை, புறநகர் பகுதிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்று மாறியது.

மெரினா கடற்கரைக்கு மாலை நேரங்களில் ஸ்வெட்டர் அணிந்துதான் மக்கள் வருகின்றனர். வீடுகளில் தரை ஐஸ்கட்டிபோல ஜில் என இருக்கிறது. இந்த கடும் குளிரால் இருமல், காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இதுபோன்ற கடும் குளிர் நிலவுவதற்கான காரணம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா கூறியதாவது: கடந்த 1891 முதல் 2026 வரை ஜனவரி மாதத்தில் 21 முறை தான் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாகியுள்ளன. இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றது. இது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக மன்னார் வளைகுடா அருகே நீடித்து வருகிறது. ஏற்கெனவே வட மாநிலங்களில் குளிர் அலையின் தாக்கம் உள்ளது. மேலும், வளிமண்டல மேலடுக்குகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, வட மாநிலத்தில் நிலவும் குளிர் காற்று ஈர்க்கப்பட்டு வட தமிழகம் நோக்கி வருகிறது.

## த.வெ.க சார்பில் சமத்துவ பொங்கல் விழா



**ஆற்காடு,ஜன.13:**

தமிழக வெற்றி கழகம் ராணிப்பேட்டை மேற்கு மாவட்டம் ஆற்காடு மத்திய ஒன்றிய சார்பில் ஆற்காடு அடுத்தவேப்பூர் ஓசூர் அம்மன் கோவில் அருகே சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு ஒன்றிய செயலாளர் முத்து குமார் தலைமை தாங்கினார்.. மாவட்ட செயலாளர் பூக்கடை விஜய் மோகன் கலந்து கொண்டு பெண்களுக்கு சேலை, கரும்புகள் வழங்கி நரிக்குறவர் உள்ளிட்ட பொதுமக்களுடன் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடினார். இந்த விழாவில் நிர்வாகிகள்ராஜராஜன், சுரேஷ் ,வினோத், உட்பட கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

## 45 பவுன் நகையை ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் பத்மாவுக்கு ரூ.1 லட்சம் வழங்கி முதல்வர் பாராட்டு!

**சென்னை, ஜன.13:**

சென்னையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் பத்மாவை நேரில் அழைத்து பாராட்டிய முதல்வர் ஸ்டாலின், ரூ.1 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்.




இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர் பத்மா நேற்று (11.1.2026) சென்னை, தியாகராய நகர், வண்டிக்காரன் சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்து, பிறருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்ததை தமிழக முதல்வர் ஸ்டாலின் பாராட்டி, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை திருவல்லிக்கேணி, கிருஷ்ணாம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் பத்மா (50). இவர் சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த தூய்மைப் பணியாளராக பணி செய்து வருகிறார்.

இவர் நேற்று தி.நகரில் உள்ள மகாராஜா சந்தானம் தெருவில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்த போது, அங்கு குப்பையோடு கிடந்த கவர் ஒன்றை எடுத்து பார்த்தபோது, ஐஸ்கிரீம் டப்பாவுக்குள் 45 பவுன் தங்க நகைகள் இருப்பது தெரிந்தது.

உடனடியாக அதனை தனது மேற்பார்வையாளர் மூலமாக பாண்டி பஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். போலீசார் சோதனையில் அவை 45 பவுன் தங்க நகைகள் என்பது தெரியவந்தது.

இதையடுத்து, போலீசார் மேற்கொண்ட விசாரணையில், நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவரின் நகைகள் அவை என்பது தெரியவந்தது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### தண்ணீர் நம் வாழ்வின் முக்கிய பங்கு!



தண்ணீர் நம் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது. நமது ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் இதன் முக்கியத்துவத்தை நம்மில் பலர் உணர்வதில்லை. தண்ணீர் இல்லையென்றால் ஒரே நாளில் நமது மனித உடல் வாடி சோர்ந்து விடும்.

தண்ணீர் நம் தாகத்தைத் தணிக்கிறது. இத்துடன் மட்டுமல்லாமல், நமது பல்வேறு உடல் உறுப்புகளுக்கும் ஏராளமான நன்மைகளை வழங்குகிறது. தண்ணீர் நம் உடலில் நீரிழப்பைத் தடுத்தல், உடல் வெப்பநிலையை சீர்ப்படுத்துதல், செல்களுக்கு ஊட்டச்சத்துக்களையும் ஆக்சிஜனையும் கொண்டு செல்லுதல், சருமத்திற்கும் பிற திசுக்களுக்கும் ஈரப்பதத்தை அளித்தல், மலச்சிக்கலைப் போக்குதல், மூட்டு எலும்புகளுக்கு இடையிலான உராய்வினைத் தடுத்தல், தசையை வலுப்படுத்துதல், உடலில் நச்சுக்களையும் கழிவுகளையும் வெளியேற்றுதல், உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்தல், எடை இழப்பை ஊக்குவித்தல் ஆகிய உடல் செயல்பாடுகளுக்கும் பெரிதும் உதவியாக இருக்கிறது.

நம் நாட்டில் 75% க்கும் அதிகமான மக்கள் நாள்பட்ட நீரிழப்பால் தினமும் அவதிப்படுகின்றனர். பெரும்பாலான நேரங்களில் நமக்கு ஏற்படும் தாகம், பசி எனத் தவறாகக் கருதப்படுகிறது. லேசான நீரிழப்பு கூட ஒருவரின் வளர்சிதை மாற்றத்தை 3% வரை குறைக்கும் எனக் கூறப்படுகிறது.

வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், ஒரு கிளாஸ் அளவு தண்ணீரே 98% பேர்களின் பசியைக் குறைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நம் உடல் சோர்வுக்கும், மனச் சோர்வுக்கும் முக்கியக் காரணம் போதிய தண்ணீர் அருந்தாமல் இருப்பதே!

ஒரு நாளைக்கு 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடிப்பது முதுகு மற்றும் மூட்டு வலிக்கு ஒரு நல்லத் தீர்வாக அமையும் என ஓர் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. நாம் தினமும் குறைந்தது 8 கிளாஸ் தண்ணீர் குடிப்பது பெருங்குடல் புற்றுநோய், மார்பக புற்றுநோய் மற்றும் சிறுநீர்ப்பை புற்றுநோய் போன்றவை ஏற்படுவதற்கான அபாயத்தைக் குறைக்கிறது.

காலை எழுந்தவுடன் நாம் குடிக்கும் 2 கிளாஸ் தண்ணீர் நம் உள் உறுப்புகள் நன்கு செயல்பட உதவுகிறது.

உணவுக்கு 30 நிமிடங்களுக்கு முன் 1 கிளாஸ் தண்ணீர் குடிப்பது செரிமானத்திற்கு உதவுகிறது.

குளிப்பதற்கு முன் 1 கிளாஸ் தண்ணீர் குடிப்பது இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது.

படுக்கைக்குச் செல்லும் முன் 1 கிளாஸ் தண்ணீர் குடிப்பது பக்கவாதம் அல்லது மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கிறது.

நமது தண்ணீர் அருந்தும் பழக்கத்தை மேம்படுத்திக்கொள்ள, நமது மூளையில் உள்ள நீரின் அளவு 80%, நமது இரத்தத்தில் உள்ள நீரின் அளவு 90%, நம் எலும்புகளில் 22% என்னும் உண்மைகளை நினைவில் வைத்துக் கொள்ளுவது நல்லது.

உணவை ஆற்றலாக மாற்ற தண்ணீர் உதவுகிறது. மேலும், தண்ணீர் நம் உடல் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதை எளிதாக்குகிறது. நமது தசைகளில் உள்ள நீரின் அளவு 75%. நமது முகம் மற்றும் தோல் உட்பட அனைத்து திசுக்களின் ஆரோக்கியத்திற்கும் தண்ணீர் மிகவும் உதவுகிறது.

தினமும் எழுந்தவுடன் ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துவது, அலுவலகத்தில் தண்ணீர் குடிக்க இடைவேளை எடுத்துக் கொள்ளுதல், வேலைக்கு அல்லது கல்லூரிக்குச் செல்லும்போது தண்ணீர் பாட்டில்களை நம்முடன் எடுத்துச் செல்லுதல், நாம் பணி புரியும் இடங்களில் நம் எதிரே பணிகளுக்கு இடையே அவ்வப்போது அருந்துவதற்கு ஒரு கப் தண்ணீரை நமது மேஜையின்மேல் வைத்திருப்பது போன்ற நற்பழக்கங்கள் நாம் தினமும் போதிய அளவு குடிப்பதை ஊக்கப்படுத்தும். நாம் உடல் செயல்பாடுகளைச் செய்வதற்கு முன், செய்யும்போது மற்றும் செய்ததற்குப் பின் எப்போதும் தண்ணீர் அருந்தலாம்.

நாம் குடிக்கும் தண்ணீர் சுகாதாரமானதாக இருப்பதை குடிப்பதற்கு முன் உறுதி செய்து கொள்வது நல்லது. இதன் மூலம் அசுத்தமான நீரின் மூலம் நமக்கு ஏற்படும், காலரா, டைபாய்டு போன்ற அபாயகரமான நோய்கள் நமக்கு ஏற்படுவதை தவிர்க்க முடியும். நல்ல குடிநீர் நம் உடல் ஆரோக்கியத்திற்கு அடிப்படை என்பதை உணர்ந்து இனியாவது செயல்படுவோம். நலமான வாழ்வு வாழ்வோம்.

## இடைநிலை ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஜன.19 முதல் உடற்கல்வி ஆசிரியர்கள் போராட்டம்

**தஞ்சாவூர், ஜன.13:**
சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.சங்கரப் பெருமாள், பொதுச் செயலாளர் மா.மு.சதீஷ், பொருளாளர் ஆர்.சுரேஷ்குமார் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியான சம வேலைக்கு சம ஊதியம் என்ற ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி 17-வது நாளாக போராடி வரும் இடைநிலை ஆசிரியர்களை குற்றவாளிகளைப் போல அரசு கையாள்வது அனைவருக்கும் மன வேதனையை அளிக்கிறது.

போராட்டக் களத்தில் மாற்றுத் திறன் ஆசிரியர்கள், பெண் ஆசிரியர்களை போலீஸார் கைது செய்யும் விதம் கண்டு ஆசிரியர் சமூகம் கவலை கொள்கிறது. மேலும், போராட்டத்தை ஒடுக்கும் விதமாக சங்க நிர்வாகிகளை கைது செய்து, அவர்களின் செல்போன்களை பறிமுதல் செய்திருப்பது, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மீது வழக்குப் பதிவு செய்திருப்பது மிகவும் கண்டனத்துக்குரியது.

எனவே, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களை தமிழக அரசு உடனடியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, பொங்கல் பண்டிகைக்குள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இல்லையெனில், இடைநிலை ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஜன.19-ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் சங்கத்தினர் பணி புறக்கணிப்பு செய்து, தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு 7% இட ஒதுக்கீடு கோரி பொது நல வழக்கு

**சென்னை, ஜன.13:**
கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூரை சேர்ந்த மாற்றுத் திறனாளியான கே.மணிவண்ணன் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், '2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2 கோடியே 68 லட்சம் மாற்றுத் திறனாளிகள் நாட்டில் இருப்பதாக மத்திய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மாற்றுத் திறனாளிகளுக்கு முறையான கல்வி, உயர் கல்வி, அரசு வேலைவாய்ப்பு ஆகியவற்றில் 4 சதவீத இட ஒதுக்கிடு வழங்கியும் முறையாக கிடைக்கவில்லை. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு 7 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் கடந்த 2023, 2024-ஆம் ஆண்டுகளில் மனுக்கள் அனுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திலும், தொகுதி மறுவரையறை சட்டத்திலும் வழிவகை செய்யப்படவில்லை என கூறப்பட்டது.

எனவே, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் சட்டம் கொண்டுவர மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# கமலின் பெயர், புகைப்படங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த இடைக்கால தடை



**சென்னை, ஜன.13:**
நடிகர் கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த 'நீயே விடை' என்ற பெயருடைய நிறுவனம், தனது புகைப்படம், பெயர், உலக நாயகன் என்ற பட்டத்தையும், தனது பிரபல வசனத்தையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தி, டிசர்ட்களையும், சர்ட்களையும் விற்பனை செய்து வருவதாகக் கூறி, நடிகர் கமல்ஹாசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் விசாரணைக்கு வந்த போது, "தனி உரிமையை பாதுகாக்கும் வகையில், நீயே விடை நிறுவனம் மட்டுமல்லாமல், வேறு எந்த நிறுவனங்களும், தனது பெயர், புகைப்படம், பட்டங்களையும், வசனங்களையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டும்" என நடிகர் கமல்ஹாசன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன் மற்றும் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆகியோர் வாதிட்டனர்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அனுமதின்றி, வர்த்தக ரீதியில் நடிகர் கமலின் பெயர், புகைப் படங்களை பயன்படுத்த இடைக்கால தடை விதித்தும் மனுவுக்கு பதிலளிக்கும்படி, "நீயே விடை" நிறுவனத்துக்கு உத்தரவிட்டும் விசாரணையை பிப்ரவரி மாதத்துக்கு தள்ளிவைத்தார்.

அதே சமயம், கார்ட்டூன்களில் நடிகர் கமல் படத்தை பயன்படுத்த எந்த தடையும் இல்லை என்பதை விளக்கிய நீதிபதி, வேறு எவரும் அனுமதின்றி தனது புகைப்படம், பெயரை பயன்படுத்தக் கூடாது என்று நீதிமன்றத்தில் கிடைத்த உத்தரவு குறித்து தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிட கமல் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சேலத்தில் மாற்றுத்திறனாளிகள் 359 பேருக்கு ரூ.3 கோடி நலத்திட்ட உதவி: அமைச்சர் இரா.ராஜேந்திரன் வழங்கினார்



**சேலம், ஜன.13:**
சேலம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் 359 பேருக்கு ரூ.3 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் வழங்கினார்.

சேலம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையிலும், சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் முன்னிலையிலும் அமைச்சர் பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கினார்.

இதில், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு செல்போன்கள் உள்ளிட்ட உதவிகள் அடங்கும்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், முன்னாள் முதல்வர் கருணாநிதி மாற்றுத்திறனாளிகள் நலனில் தனிப்பட்ட அக்கறை கொண்டு பல திட்டங்களை செயல்படுத்தியதாகவும், தற்போதைய முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து பல்வேறு நலத்திட்டங்களை விரிவுபடுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நான்கு அரை ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில், 83,645 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள், 34,050 பேருக்கு தனித்துவ அடையாள அட்டைகள், 15,636 பேருக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை (ரூ.134.79 கோடி), உயர் ஆதரவு தேவைப்படுவோருக்கான கூடுதல் உதவித்தொகை (2,189 பேருக்கு ரூ.13.13 கோடி), மேலும் 2,039 பேருக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் என மொத்தம் 1,54,643 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.186.27 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், 289 பேருக்கு ரூ.2.94 கோடி மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 50 பேருக்கு ரூ.3.20 லட்சம் மதிப்பிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், 20 பேருக்கு ரூ.2.89 லட்சம் மதிப்பிலான சிறப்பு செல்போன்கள் என மொத்தம் 359 பேருக்கு ரூ.3 கோடி மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி, தன்னார்வலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# பாக்மதி விரைவு ரயில் விபத்தில் சாதுர்யமாக செயல்பட்ட ரயில் ஓட்டுநருக்கு விருது

**சென்னை, ஜன.13:**
கவரைப்பேட்டையில் பாக்மதி விரைவு ரயில் விபத்தின்போது, சாதுர்யமாக செயல்பட்ட ரயில் ஓட்டுநர் சுப்பிரமணி உட்பட 11 பேருக்கு விசிஷ்ட ரயில் சேவா விருதுகள் வழங்கப்பட்டன.

இந்திய ரயில்வேயில் கடந்த ஆண்டு சிறப்பாக பணியாற்றிய 100 அதிகாரிகள், ஊழியர்களுக்கு விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன.

டெல்லியில் கடந்த 9-ம் தேதி நடந்த நிகழ்ச்சியில், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் விருதுகளை வழங்கி கவுரவித்தார். நிதி, எலெக்ரிக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவுகளில் தெற்கு ரயில்வேக்கான 3 கேடயங்களை தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங்கிடம் அமைச்சர் வழங்கினார்.

தெற்கு ரயில்வேயின் துணை நிதி ஆலோசகர் ஆனந்த் பன்டியா, மதுரை கோட்டை மூத்த வணிக மேலாளர் கணேஷ், திருவனந்தபுரம் முதுநிலை டெலிகாம் பொறியாளர் ரஞ்சித், தலைமை சுகாதாரத் துறை ஆய்வாளர் பிரமோத், ரயில்பாதை பராமரிப்பாளர் பவன் குமார், ரயில் ஓட்டுநர் சுப்பிரமணி உட்பட 11 பேருக்கு விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன.

கர்நாடக மாநிலம் மைசூருவில் இருந்து பிஹார் மாநிலம் தர்பங்காவுக்கு புறப்பட்ட பாக்மதி அதிவிரைவு ரயில், கடந்த 2024-ம் ஆண்டு அக்டோபர் 11-ம் தேதி திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை ரயில் நிலையம் அருகே சென்றபோது, ஏற்கெனவே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது.

அந்த ரயிலின் 13 பெட்டிகள் தடம்புரண்டதில் 19 பேர் காயமடைந்தனர், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

இந்த விபத்து குறித்து, ஆய்வு மேற்கொண்ட தென் மண்டல ரயில்வே பாதுகாப்பு ஆணையரக அதிகாரிகள் குழு, பாக்மதி அதிவிரைவு ரயிலை இயக்கிய ஓட்டுநர் சுப்பிரமணி, துரிதமாக செயல்பட்டு அவசர கால பிரேக்கை பயன்படுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டதாக அறிக்கை அளித்தனர்.

இந்நிலையில் அவரை பாராட்டி விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.




## மேல்விஷாரத்தில் அம்பேத்கர்ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க துவக்க விழா



**ஆற்காடு, ஜன.13:**
ராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் நகராட்சி புரான்சாமேடு பகுதியில் அம்பேத்கர் ஆட்டோ ஓட்டுநர் நல சங்கம் துவக்க விழா நடைபெற்றது.

விழாவிற்கு சங்கத் தலைவர் எஸ் சங்கர் தலைமை வகித்தார் கௌரவத் தலைவர் ப.சசிகுமார் ஆலோசகர் முனைவர் அருணாசலம், காப்பாளர் சேராம்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ஆர் பூமிநாதன், வரவேற்றார். மேல்விஷாரம் நகர மன்ற தலைவர் குல்சார் அஹமது அம்பேத்கர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார், அப்துல் அக்கீம் கல்லூரி டீன் எஸ் ஏ சாஜித் பொதுமக்களுக்கு அன்னதானமும் நகர துணைத் தலைவர் எஸ் ஜபர் அஹமது இனிப்பும் வழங்கினார். இந்த விழாவில் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் சி பஞ்சாட்சரம், அதிமுக கிழக்கு பகுதி நகர செயலாளர் எம் எஸ் விஜி சித்தார்த்தன் விசிக தொண்டர் அணி அமைப்பாளர் முனியாண்டி, த நெ க நகர செயலாளர் ஆஸ்கர் அலி புரட்சி பாரதம் கட்சி மாவட்ட துணைத் தலைவர் குமரன், ஒருங்கிணைந்த இந்திய குடியரசு கட்சி நகர செயலாளர். ரமேஷ், தொழிற் செயலாளர் நீலமேகன், மக்கள் நீதி மையம் நகர செயலாளர் இக்பால், நாட்டாமைக்காரர்கள் மாரி பிச்சாண்டி ஆனந்தன் சிவகுமார் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பரமக்குடியில் இமானுவேல் சேகரன் மணிமண்டபம்: ஜன. 17-ல் முதல்வர் திறந்துவைக்கிறார்

**ராமேசுவரம், ஜன.13:**
பரமக்குடியில் நகராட்சி சந்தை வளாகத்தில் இமானுவேல் சேகரன் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரூ.3 கோடி மதிப்பில் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க 11.9.2023-ல் தமிழக அரசு உத்தரவிட்டது. மேலும், இமானுவேல் சேகரனின் பிறந்த நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமான சந்தை வளாகப் பகுதியில் மணிமண்டபம் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், வரும் 17-ம் தேதி மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்க வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அன்று பரமக்குடியில் இமானுவேல் சேகரனின் மணிமண்டபத்தை திறந்து வைக்க உள்ளார்.

# நிலவு நம்மோடு வருவது போல் தெரிகிறதே, அது ஏன்? வளர்பிறை - தேய்பிறை கண்டுபிடிப்பது எப்படி?

சந்திரனை நாம் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு சந்திரனின் இயக்கங்களை பற்றி அறிந்து கொள்ளவில்லை. அதன் இயக்கங்களை சார்ந்தவையே வளர்பிறை நிலவும், தேய்பிறை நிலவும். பிறைச்சந்திரனை நாம் பார்க்கிறோம்.

அதன் அழகிலேயே ஈடுபட்டு மகிழ்ந்து அதை போற்றுவதும், புகழ்வதுமாக இருக்கிறோம். நாம் பிறை சந்திரனின் ரசிகர்கள் என்பது உண்மையே. பிறையைப் பற்றியும் அதன் இலக்கணங்களை பற்றியும் நாம் தெரிந்துகொள்வதுதானே நமது அறிவு வளர்ச்சிக்கு தூண்டுதலாகும். அதைப் பற்றி தெரிந்து கொள்வோம் இப்பகுதியில்.

தேய்பிறையையும் பார்க்கிறோம்; வளர்பிறையையும் பார்க்கிறோம். இவற்றில் எது தேய்பிறை, எது வளர்பிறை என்றுஎவ்வாறுகண்டுபிடிப்பது? தேய்பிறையில் நல்ல காரியங்களை செய்யக்கூடாது. வளர்பிறையில் தான் நல்ல காரியங்களை செய்யலாம் என்று சொல்லிக் கொடுத்த பாடம் நமக்கு பசுமரத்தாணி போல் பதிந்து உள்ளது.

பிறை நிலவை நாம் பார்க்கிறோம். அதன் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தெரிந்து கொண்டால் தானே அவற்றை அடையாளம் காண முடியும்.

வளர்பிறை, தேய்பிறை இவற்றின் வளைவுகள் எதிர்த் திசைகளில் இருக்கும். பூமியின் வடபாதியில் வளர்பிறை தோன்றினால் பிறை முனைகளைச் சேர்க்கும் நேர்கோட்டுக்கு வலப்புறத்திலும் தேய்பிறையானால் இடது புறமும் இருக்கும்.

தேய்பிறை, வளர்பிறைகளின் வடிவங்களை அறிந்து கொள்வதற்கு பிரெஞ்சுக்காரர்களும், ஜெர்மனியரும் எழுத்துக்களுடன் தொடர்பு படுத்தும் நினைவுகுறிப்புகளை வைத்திருந்தனர். ஆனால் இந்த குறிப்புகள் எல்லா இடங்களுக்கும் பொருந்தாது. பூமியின் வடபாகத்திற்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது.



மேற்கூறிய நினைவு குறிப்புகளின் விதிகளுக்கு நேர்மாறான நிலையை ஆஸ்திரேலியாவிலும் டிரான்ஸ்வாலிலும் காண முடியும். பூமியின் வடபாதியையே எடுத்துக் கொள்வோம். அதன் தென் அட்சரேகைக்கு மேலே குறிப்பிட்ட விதிமுறைகள் பொருந்தாது.

கிரிபியாவிலும், ட்ரான்ஸ்கா சேஷியாவிலும் பிறையை நாம் பார்த்தால் அது மிகவும் சாய்ந்து இருப்பது புலப்படும். இன்னும் தெற்கே சென்றால் அங்கு பிறை தனது பக்கவாட்டில் படுத்து இருப்பது போல் தோன்றும். பூமத்திய ரேகை அருகில் அது படகை போல் தோன்றும்; ஒளிமிக்க ஆர்ச் போல இருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஆக, பிரெஞ்சுகாரர்களும், ஜெர்மனியரும் தயாரித்து வைத்திருந்த நினைவு குறிப்புகளின் விதிமுறைகள் இப்படி எல்லா இடங்களுக்கும் பயன்படாது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். வானவியல் அடையாளங்களைக் கொண்டே நாம் பிறை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பொதுவான இயற்கை விதியை நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளலாம்.

வளர்பிறை நிலவை மாலை வேளைகளில் மேலை வானத்தில் பார்க்கலாம். தேய்பிறை நிலவை அதிகாலை வேளையில் கீழ் வானத்தில் காணலாம். சூரியனிடமிருந்து தான் சந்திரன் ஒளியைப் பெறுகிறது. அந்த ஒளிக்கதிர்கள் பிறையின் முனைகளை சேர்க்கும் நேர்கோட்டுக்கு செங்குத்தாகவே இருக்கும். ஆனால் நாம் நேர்கோட்டைப் பார்க்கவில்லை. நாம் வளைவு கோட்டையே பார்க்கிறோம்.

அடுத்ததாக நாம் நடந்து கொண்டே நிலவைப் பார்க்கும் போது நிலவு நம்மோடு வருவது போல் தெரிகிறதே அது ஏன்? என்ற கேள்வி நமக்குள் எழுதுவது நியாயமே. அதற்கான காரணம் என்னவென்றால் பூமியிலிருந்து நிலவு வெகு தொலைவில் இருக்கிறது. உண்மையில் அது நகர்வதில்லை. வெகு தொலைவில் உள்ள பொருட்களை நாம் பார்க்கும் கோணம் நாம் நகர்வதால் மாறுவதில்லை. அதாவது நாம் நடந்தவாறு பார்த்தாலும் நிலவின் கோணம் மாறாது. எனவே அது நம்முடன் வருவது போல் தெரிகிறது.

# " முப்பதடி மனிதநேயம்"



இரண்டு கிராமங்களுக்கு நடுவே விரிந்திருந்தது ரங்கசாமி அய்யாவின் தோட்டம்.
தேக்கு மரங்கள், தென்னை மரங்களின் வரிசைகள், நடுவே நீளமாகப் பரந்த செம்மண்.

ஆனால் அந்த மண் இரண்டு ஊர்களுக்கிடையே இருந்த ஒரே நேரான வழியைக் கவ்விக் கொண்டிருந்தது.
அந்த வழி மூடப்பட்ட நாளிலிருந்து மேலூர் மக்கள் கீழூருக்கும், கீழூர் மக்கள் மேலூருக்கும் பத்து கிலோமீட்டர் சுற்றிப் போய் வர வேண்டிய நிலை.
“அய்யா தோட்டம்... வழி இல்லைன்னு கம்பி போட்டுட்டாரு” என்று சொல்லச் சொல்ல முதியவர்களின் மூச்சுத் திணறியது, பள்ளிக் குழந்தைகளின் கால்கள் வீங்கின.

மழைக்காலங்களில் சீருடைகள் சோகமாய் சேற்றில் தோய்ந்தன. வெயிலில் சிறு பிஞ்சுகளின் முகம் கருகியது.
“தாத்தா... இந்த வழி கொடுத்தா என்ன தப்பு?” என்று ஒருநாள் கேட்டான் கார்த்திக் ரங்கசாமி அய்யாவின் பேரன்.
“டேய்... அது என் அப்பன் வாங்கின நிலம்... நான் பாதுகாக்கலேன்னா அவரு ஆத்மா சாந்தி அடையுமாடா?” என்று கடுமையாய் முடித்தார் தாத்தா. அப்பாவும் அதே மொழி. "இது உரிமைடா... இரக்கம் காட்டி நிலத்தை இழந்த கதைகள் இங்க நெறைய இருக்கு.”
கார்த்திக் எதுவும் பேசவில்லை.
ஆனால் அவன் கண்களில் பள்ளிப்பைகளின் வலி விழுந்திருந்தது.
பெரிய அய்யாவும், சின்ன அய்யாவும் இறந்த பிறகு தோட்டத்தின் பொறுப்பு கார்த்திக்கிடம் வந்தது.
ஒரு நாள் காலை அவன் தோட்டத்திற்கு வெளியே வாக்கிங் சென்ற போது காலணி இல்லாமல் நடந்து செல்லும் மூன்று சிறுமிகளைப் பார்த்தான்.

“ஏய் ராசாத்தி... வேகமா நடையைப் போடுடி ஸ்கூலுக்கு லேட்டாச்சு... அந்த சிடுமூஞ்சி ஹெட் மாஸ்டர் லேட்டொ போனா முட்டி போடச் சொல்லிவாருடி” என்று சொல்லியபடி ஓட்டமும் நடையுமாகச் சென்றனர் அச்சிறுமிகள்.
அவர்களின் அந்த அவசரம் கார்த்திக்கின் மனதில் பல தலைமுறைகள் கட்டியிருந்த கம்பி வேலியை அறுத்தது.
ஒரு மாதத்திற்குள் தோட்டத்தின் நடுவே முப்பது அடி அகலத்தில் சரியான பாதை போட்டான். கற்கள், மண், தார் அனைத்தும் அவன் செலவில்.

விழுந்த கம்பிகள் பார்த்து இரண்டு ஊராரும் திகைத்தனர்.
“வழியா?” “நிஜமாவா?” “யாரு போடறாங்க?” நிதானமாய் பதில் கிடைத்தது.
“அய்யா பேரன்.”
அன்று பள்ளி மணி சத்தம் இரண்டு ஊர்களிலும் ஒரே நேரத்தில் கேட்டது.

முதியவர்கள் தடி ஊன்றியபடி புதுப் பாதையில் நின்று மௌனமாக தலை வணங்கினர்.
“நிலம் பெருசில்ல... அதைக் கொடுக்கற மனசு பெருசு” என்ற வார்த்தை எல்லோர் வாயிலிருந்தும் வந்தது.
கார்த்திக் மட்டும் தோட்டத்தின் ஓரத்தில் நின்று தான் அமைத்த பாதையில் பயணிக்கும் மனிதர்களைப் பார்த்தான்.

அவன் தாத்தா காப்பாற்றிய நிலத்தைக் காட்டிலும் அவன் காப்பாற்றிய மனிதநேயம் உலகத்தை விடப் பெரிது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# நிரந்தரப் பிரிவு

"அம்மா அப்பா பிரிந்து விட்டார்கள். சின்ன சின்ன சண்டையாக தினமும் நடந்து கொண்டிருக்கும். சமாதானம் ஆகிவிட்டார்கள் என்று நினைத்திருக்கிறேன்" மனோஜ் அழுது கொண்டே சொன்னான்.
"எதனால் சண்டை வரும் இருவருக்கும்?" சாந்திக் கேட்டாள்.
இவனுக்கும் பல நேரத்தில் புரிந்ததில்லை. பூடகமாகவே இருக்கும். தற்போது ப்ளஸ் டு படித்து வருகிறான். இந்த நேரத்தில் எப்படிப்பட்ட மன உளைச்சல் பாவம்.

"தெரியவில்லை சாந்தி. எனக்கு என்ன பண்ணனும்னு தெரில. அம்மா தனது சாமான்களை எடுத்துக் கொண்டு பாட்டி வீட்டிற்குப் போய்விட்டாள். அப்பா வெளிநாடு போகப் போவதாக சொல்கிறார். நான்?"
கேள்வி சற்றுக் கூர்மையானதுதான். "நான் விசா ப்ராசஸ் முடிஞ்சதும் கிளம்புவேன். அதுக்கப்புறம் நீ அம்மாவிடம் போயிடு" இது அப்பா.

"இங்கெல்லாம் வந்துடாத. எனக்கு என்னைப் பாத்துக்கறதே கஷ்டம். அம்மா வயசானவங்க. நீ அப்பாவோடயே இருந்துக்கோ" இது அம்மா.
மனோஜ் என்ன செய்வான்? எதுவும் செய்யவில்லை.
தனக்குள் பலமுறைக் கேட்டு ஒரு முடிவுக்கு வந்தான். அப்பா ப்ளைட் ஏறியதும் வீட்டிற்கு வந்தான். தனது சாமான்கள், புத்தகங்கள் என சிலவற்றை எடுத்துக் கொண்டு பள்ளித் தலைமையாசிரியர் வீட்டிற்கு வந்தான்.

பள்ளித் தேர்விற்கு இரண்டு மாதங்கள் இருக்கும் நிலையில் அவரிடம் நடந்தவற்றைக் கூறினான். அவருக்கு வியப்பாக இருந்தது. நன்கு படிக்கும் மாணவன் மனோஜ். உள்ளே வரச்சொல்லி சாப்பிட வைத்தார்.
"சொந்த வீடா?"
"ஆமாம் சார். அப்பாவோடது".
"பூட்டிட்டு வந்துருக்கியா"
"ஆமாம் சார். இன்னும் பர்னிச்சர்கள்லாம் இருக்கு.

"நா அம்மாகிட்ட பேசட்டுமா"
"வேண்டாம் சார். பரீட்சைகள் முடியட்டும். ரெண்டு பேருமே அவங்கள மட்டுமே நெனைச்சாங்க. நா என்ன பண்ணுவேன்னு யோசிக்கல. இப்போதைக்கு நா இங்க இருந்துக்கிறேன். பரீட்சைகள் முடிவதற்குள் உறவினர்கள் கேட்கும் கேள்விகள் என்னைத் துளைத்தெடுக்கும் சார். கொஞ்சம் உதவி பண்ணுங்க சார்" கிட்டத்தட்ட கெஞ்சினான் மனோஜ்.

பக்கத்து வீட்டு பத்தாங்கிளாஸ் படிக்கும் சாந்திக்கு போரடித்தது. சின்ன வயசிலேந்தே ஒன்னா விளையாடி, படிச்சு பாசத்துடன் பழகிய மனோஜ் தற்போது எங்கிருக்கிறான் தெரியவில்லை. வார விடுமுறை முடிந்து பள்ளிக்கு கிளம்பத் தயாரானான் மனோஜ்.
தலைமையாசிரியர் மனோஜின் வகுப்பு ஆசிரியர்களை அழைத்து நிலைமையை எடுத்துச் சொன்னார். பரீட்சைகள் முடிந்து விடுமுறையும் ஆரம்பமானது. இவனுக்கு அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது.



முதல்நாள் போனில் வாழ்த்தியப் பெற்றோர்களை வெறுத்தான். இரண்டு மாதங்களாக பூட்டிக் கிடக்கும் வீடு. அப்பா வெளிநாடு சென்றதைக் கூட அறியாத அம்மா. பிரைவேட் கம்பெனியில் வேலை பார்க்கும் அம்மாவைப் பிரிந்த தந்தை. என்ன செய்வான்?
தானே ஒரு முடிவுக்கு வந்தான். வாட்சாபில் மெசேஜ் அனுப்பினான்.

தான் மேற்படிப்பு படிக்க வேண்டும். அதற்கு பணம் வேண்டும். நல்ல நிலைமைக்கு வந்ததும் பணத்தைத் திருப்பித் தருவதாக சொல்லி எழுதினான்.
அம்மா அழுகை ஸ்மைலியும், அப்பா ஆச்சர்ய ஸ்மைலியும் அனுப்பினார்கள்.
தன் வீட்டிற்கு வந்து சுத்தம் செய்து சோபாவில் அமர்ந்து முட்டி நின்ற கண்ணீரைப் பிழிந்தான்.
சாந்தியின் அப்பா வந்தார். அருகில் அமர்ந்து பேசினார். சாப்பாடு கொண்டு தந்தார். சாந்தி பத்தாம் வகுப்பு பரீட்சையில் பிசியாக இருந்தாள்.

அவர் அவனை அழைத்துக் கொண்டு அவன் அம்மா வீட்டிற்கு சென்றார். ஒரு ஹால், ஒரு கிச்சன் தான். அம்மாவும் அம்மாச்சியும் இருந்தார்கள். "குழந்தையை ஒரு முறை கூட பார்க்க வரவில்லையே" என்றதும் கண்ணீர் பொலபொலவென வர கதறி அழுதாள். தானும் மனோஜின் அப்பாவும் ஒன்றாகப் படித்தவர்கள். படிக்கும் போது தான் காதலித்தவனை திருமணம் செய்ய முடியாமல் போனதையும், மனோஜின் அப்பா ஆறுதல் கூறி தன்னைத் திருமணம் செய்து கொண்டதையும் தெரிவித்தாள். இதுவே தாங்கள் பிரியவும் காரணம் என்றாள். ஒவ்வொரு நாளும் தான் வாழ்க்கைக் குடுத்ததாகவும், அந்த காதலித்து ஏமாற்றியவனை ஒப்பிட்டுப் பேசிப் பேசி மனதை ரணமாக்கியதும் தாங்க முடியாமல் பிரிந்ததைச் சொன்னாள்.
கணவனைப் பிடிக்காமல் போனதும், நாளை விபரம் தெரிந்ததும் மகனும் தன்னை ஒதுக்கி விடுவான், இல்லையேல் மதிக்க மாட்டான் என்ற முடிவில்தான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு பிரிந்து வந்து விட்டதாகக் கூறி அழுதாள்.

மனோஜ் அம்மாவைக் கட்டிக் கொண்டான். கண்களைத் துடைத்து அம்மாவையும் அம்மாச்சியையும் அழைத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்தான்.
அப்பாவிற்கு தலைமையாசிரியர், சாந்தியின் அப்பாவின் உதவியுடன் தன் அம்மாவிற்கு ஜீவனாம்சம் கேட்டும், முறைப்படி விவாகரத்துக் கேட்டும், தனக்கென அந்த வீடு வேண்டுமென்றும் கேட்டு நோட்டீஸ் அனுப்பினான்.
கோர்ட்டுக்கு வந்த அப்பாவிடம் பேசி, புரியவைத்து "உங்கள் அன்பு எங்கள் இருவருக்குமே வேணும்ப்பா" என்றான்.

இதோ விமான நிலையத்தில் மனோஜ் அப்பா அம்மாவுடன். அம்மாச்சி பொக்கைவாய்ச் சிரிப்புடன் வழியனுப்பி வைக்க வெளிநாட்டு வாழ்க்கைத் துவங்கப் போகிறது. கவலைகள், வருத்தங்களிலிருந்து நிரந்தரமாய் விலகி சந்தோஷமாய் வாழப் போகிறான்.

-வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

# அகத்தியனின் பயணம் 05



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

## தங்கும் விடுதியில் தனியே

“உங்களப் பத்தி சொல்லுங்க” என்று எதிரிலிருந்து பெண் அகத்தியனிடம் கேள்வியாகத் தொடுத்தவுடன், கேள்விக் கேட்பவரே இந்த நிறுவனத்தின் இயக்குநராக இருப்பார் என உருதிப்படுத்திக்கொண்டான். அகத்தியன் தன்னைப் பற்றிச் சுருக்கமாகவும் சுவையாகவும் சொன்னான். “நான் இருக்கிற இடம் ஒரு சிறிய கிராமம். எங்க சிற்றூரிலிருந்து சென்னைக்கும் 120 கிலோமீட்டர் இருக்கும். இந்த வருடம்தான் கல்லூரி படிப்ப முடிச்சேன். உங்க கம்பெனியோட விளம்பரத்தைப் பார்த்தன். சரி படிச்சு முடிச்ச சும்மா இருக்க கூடாது. ஏதாவது ஒரு வேலைக்குப் போயிடனும். அதன் மூலமா ஒரு அனுபவத்தைத் தேடிக்கணுமுன்னு வந்துட்டேன். உங்க கம்பெனில கண்டிப்பா எனக்கு வேல கிடைக்மிங்குற நம்பிக்கையிருக்கு. நீங்க எந்த வேலை கொடுத்தாலும் அதைச் சிறப்பா செய்வன்” என்று நம்பிக்கையோடு சொன்னவுடன் எதிரில் உட்கார்ந்த பெண்அழகுமாறன், “சரிங்க அகத்தியன், நீங்க எங்க தங்குவீங்க” என்று கேட்டார்.
சற்றும் யோசிக்காமல், அகத்தியன் “வேலை கிடைச்சதுன்னா தங்கறதுக்குண்டான சூழல நானே உருவாக்கிக்கொள்வேன் மேடம்” என்று சொன்னவுடன், “அது அவசியமில்லை. எங்க நிறுவனத்திலேயே, தொழிலாளர்கள் தங்கறதுக்கு அறைகளை நாங்கள் கட்டி வைத்திருக்கோம். அதற்குண்டான வாடகைய, மாச சம்பத்துல பிடித்தம் செய்வோம். அதற்கு நீங்கள் உடன்பட்டீங்கன்னா, நீங்க இன்னைக்கே வேலையில சேர்ந்திடலாம்” என்று அந்தப் பெண்அழகுமாறன் சொன்னவுடன்,
அகத்தியன் மனதிற்குள் மகிழ்ச்சி வெளிப்பட்டது. “சரிங்க மேடம். நான் இன்னைக்கே வேலைக்குச் சேர்ந்திடரன்” என்று சொல்லிவிட்டு எழுந்தான்.
அதற்குள் கம்பெனியின் இயக்குனர் தான் உட்கார்ந்திருந்த இடத்தில், மேசையின் வலது பக்கத்திலுள்ள பெல்லை அழுத்தினார்.
உதவியாளர் கதவைத் திறந்து உள்ளேவந்து நின்றார்.
“அழகுமாறன், நம்ம கம்பெனிக்குப் பின்னாடி இருக்கிற தொழிலாளர்கள் தங்குற இடத்தை அகத்தியனுக்கு காட்டுங்க. இவருக்கு உண்டான அறை எண், என்ன என்பதை அவருக்குச் சொல்லுங்க. அதுக்குண்டான சாவிய அவர்கிட்ட கொடுத்துடுங்க. அறைகள் சுத்தமாக இருக்கான்னு பார்த்துச் சரி பண்ணி கொடுத்துட்டு, எல்லா ஏற்பாடு செய்து முடித்துவிட்டு வாங்க” என்று சொன்னவுடன்,
அகத்தியன் கம்பெனியின் நிர்வாக இயக்குனரைக் கையெழுத்து கும்பிட்டுவிட்டு “வரங்க மேடம்” என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்து மகிழ்ச்சியாக வெளியே வந்தான்.
காவலாளி அழகுமாறன்யும், அகத்தியனும் அறையை விட்டு வெளியேவந்து கம்பெனிக்குப் பின்னால் உள்ள தங்கும் விடுதியை நோக்கிப் பேசிக்கொண்டே நடந்தார்கள்.
“இந்தக் கம்பெனி எப்ப ஆரம்பிச்சாங்க” என்று அகத்தியன் கேட்டவுடன்,
“ தம்பி உன்ன மாதிரிதான் நானும். ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் இங்க வேலையில சேர்ந்தேன். புது கம்பெனிதான் ஒன்னும் தப்புயில்ல. புதுசா ஆரம்பிக்கிற கம்பெனியில சேர்ந்துடலாம் தம்பி. நிறைய கத்துக்கலாம். ஆனால், பழைய கம்பெனிக்குள்ள போறதுதான் ரொம்ப கஷ்டம். ஏன் புது ஆட்களை எடுக்குறாங்க தெரியுங்களா ? அவங்கதான் ஈடுபாடோடும், புதுசா கத்துக்கணுமுங்கிற எண்ணத்தோடும் இருப்பாங்கன்னு இந்த நிறுவனத்தின் இயக்குநர் அம்மா என்கிட்ட சொன்னாங்க. படிச்சு முடிச்ச இளைஞர்களுக்கு வாய்ப்புகள உருவாக்குவதற்காகதான் இந்த நிறுவனத்த ஆரம்பிச்சாங்க. அவங்க ரொம்ப நல்லவங்க” என்று அழகுமாறன் சொன்னவுடன், அகத்தியனுக்கு அந்த அம்மாவின் மீது இருந்த நம்பிக்கை கூடியது. பேசிக் கொண்டே தொழிலாளர்கள் தங்குகின்ற குடியிருப்பிற்கு வந்தடைந்ததும்,
எண் 124 என்ற எண்ணுடைய அறையைத் திறந்த அழகுமாறன்,“தம்பி இதுதான் உங்க அறை. எல்லாம் சரியா இருக்கான்னு பாத்துக்குங்க. கழிவறை வசதி நல்லா இருக்கா, ஜன்னல் சரியா இருக்கா,



எல்லாத்தையும் பாத்துக்கங்க. ஏதாவது குறையிருந்தா என்கிட்ட சொல்லுங்க. அம்மாகிட்டச் சொல்லி உடனே சரிசெய்ய சொல்றன்” எனச் சொல்லிவிட்டு அழகுமாறன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.
புதிய அறையிலிருந்த சேரில் உட்கார்ந்து, அந்தச் சூழலுக்குத் தகுந்தார்போல் தன்னை மாற்றிக்கொள்ள, ஆழ்ந்த யோசனையில் இருந்தான். ஜன்னலைத் திறந்தான். எங்கும் கட்டிடங்கள். காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. சென்னையின் மக்கள் வாழ்கின்ற குடியிருப்பில் உள்ள வீடுகளைவிட, வாகனங்கள் செல்லுகின்ற சாலைகள்தான் அதிகமான இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றது என, அகத்தியன் ஜன்னல் வழியே சென்னையைப் பார்த்ததில் அவனுடைய சிந்தனைக்குள் இப்படிப்பட்ட கருத்து உருவானது. அகத்தியனுடைய நிறுவனம் கிண்டிக்கு அருகில் இருந்ததால், வானத்தில் பறக்கும் வானூர்தியின் சத்தம் தொந்தரவாக இருந்தது. சாலையில் செல்லும் வாகனங்களின் சத்தமும் அவனுக்கு எரிச்சலாகதான் இருந்தது. அமைதியைக் கெடுப்பதாகக் கருதினான். இருந்ததும் அறையிலிருந்த கட்டிலில் சாய்ந்தான். காற்று அவனுக்குத் தகுந்தார்போல் வேகமாக வீசியது. எப்படி தூங்கினான் என்பது தெரியாது. மாலையில் சூரியன் மேற்கில் மெல்ல மறைய ஆரம்பித்தான்.

(தொடரும்)

# தேசியத் திருவிழா பொங்கல்

தலைப்பைப் பார்த்ததும் சிலருக்கு மலைப்பு ஏற்படலாம் - தமிழர் திருநாள் பொங்கல் என்றுதானே கேள்விப்பட்டிருக்கிறோம், அவ்வாறிருக்க தேசியத் திருநாள் பொங்கல் என்று கூறப்பட்டுள்ளதே என்று. நமது பாரதத் திருநாடு, பன்னெடுங்காலம் முன்பாகவே பண்பாட்டால் ஒன்றுபட்ட தேசம். பண்பாட்டைப் பாரம்பரியமாய் வழிவழியாக அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதற்கான வாகனமே கொண்டாட்டங்கள் நிறைந்த பண்டிகைகள். அந்த வகையில் தமிழர் திருநாள் என்று சிறப்பித்துக் கூறப்படும் பொங்கல் தேசிய அளவில் கொண்டாடப்படும் மிக முக்கியமான பண்டிகை. சில மாநிலங்களில் வெவ்வேறு பெயர்கள் இருந்தாலும்கூட இதன் பொதுப் பெயர் மகர சங்கராந்தி.

பெயர்க் காரணம்: மகர மாதத்தில் கொண்டாடப்படுகின்ற சங்கராந்தித் திருநாள் என்பதால் இதற்கு மகர சங்கராந்தி என்று பெயர். நமது பண்டிகைகள், திருவிழாக்கள் எல்லாமே வானவியலோடு இணைந்த ஆன்மிக அடிப்படையில்தான் நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றன.

மகரம் என்றால் சுறா மீன் என்று பொருள். மகரம் என்பது 12 ராசிகளில் ஒன்று. நமது மாதங்கள் அனைத்துமே ராசி எனப்படும் இந்த நட்சத்திரக் கூட்டங்களின் அடிப்படையில்தான் கணக்கிடப்படுகின்றன. அந்த வகையில் வானிலே சுறா மீன் போன்று தோற்றமளிக்கும் மகர ராசியில் மகர மாதம் எனப்படும் தை மாதம் தொடங்குகிறது.

சங்கராந்தி என்ற சொல்லுக்கு மாற்றத்தின் தொடக்கம் என்று பொருள். சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் அன்றைய தினத்தில், இருள் மிகுந்த பனி நீண்டிருக்கும் ஆறு மாத காலம் முடிவடைந்து, வெயில் நீண்டிருக்கும் ஒளி மிகுந்த ஆறு மாத காலம் தொடங்குகிறது. இதனை உத்தராயணம் புண்யகாலத் தொடக்கம் என்பார்கள்.

உத்தர அயணம் என்றால் வடதிசைப் பயணம் என்று பொருள். இதுவரை தக்ஷிண அயணம் (தக்ஷிணாயணம்) எனப்படும் தென்திசை வழியாக நடைபெற்ற சூரியனின் சஞ்சாரம், தை தொடங்கி ஆனி மாதம் வரையான ஆறு மாத காலத்தில் வடக்கு வழியாக நடைபெறும். தட்சிணாயணக் காலத்தை தேவர்களின் இரவுப் பொழுது என்றும், உத்தராயணத்தை தேவர்களின் பகல் பொழுது என்றும் கூறுவர். சூரியனின் ஒளி மிகுந்த வடதிசைப் பயணம் தொடங்கும் நாளை வரவேற்கும் விதமாகவே மகர சங்கராந்திப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் மகிழ்ச்சி, வளம், மங்களம் ஆகியவை பொங்குவதன் அடையாளம் என்பதால் இதற்குத் தூய தமிழிலே பொங்கல் திருநாள் என்று பெயர் வந்தது. பொங்குகின்ற பாலைக் கொண்டு அன்றைய தினம் சமைக்கப்பட்டுப் படையல் இடப்படுகின்ற உணவுக்கும் பொங்கல் என்ற பெயர் ஏற்பட்டது. இதே இனிப்புப் பொங்கல், வட மாநிலங்களில் கிச்சடி, சக்ராத் என்ற பெயர்களில் படைக்கப்பட்டு பிரசாதமாக விநியோகிக்கப்படுகிறது.

பண்டிகையின் நோக்கம்: பொங்கல் எனப்படும் மகர சங்கராந்திப் பண்டிகை, அடிப்படையில் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் உன்னதத் திருநாளாகும். உணவின் மூலமே உலகில் உயிர்கள் வாழ்கின்றன. இயற்கையின் துணை கொண்டு, உணவுப் பொருளை மனிதன் உருவாக்கும் தொழிலே விவசாயம். மனிதன் தனது கடின உழைப்பான உழவின் மூலம் உணவை உற்பத்தி செய்தபோதிலும், அதற்கு உறுதுணை புரிந்த இறைவன், இயற்கை, சக தொழிலாளர்கள், இன்ன பிற உயிரினங்கள், கருவிகள் ஆகியவற்றுக்கு நன்றிக் கடன் தெரிவிக்கும் வகையில் கொண்டாடப்படுவதே இந்தப் பண்டிகை.

மகர சங்கராந்தி கொண்டாடப்படுவதன் உட்கருத்தை கீதையில் (3.14) ஸ்ரீகிருஷ்ணர் எடுத்துரைத்துள்ளார் :

அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாத் அன்னஸம்பவ: |
யக்ஞாத் பவதி பர்ஜன்யோ யக்ஞ: கர்மஸமுத்பவ: ||

இதன் பொருள்: அனைத்து உயிரினங்களும் உணவினால் ஜீவிக்கின்றன. உணவானது, மழையினால் உருவாகிறது. வேள்விகளைச் செய்வதால் மழை பெய்கிறது. உரிய கடமைகளைச் செய்வதால் வேள்விகள் நிறைவேற்றப்படுகின்றன.

யக்ஞம் எனப்படும் வேள்வியானது, யாகத் தீயை மூட்டிச் செய்யப்படுகின்ற சடங்குகள் மாத்திரம் அல்ல, மனிதர்கள் அவர்களுக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதும் ஆகும் என்பதைத்தான் யக்ஞ: கர்ம ஸம் உத்பவ: என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளார். இந்தக் கடமைகளில் தலையாயது நன்றிக்கடன் பாராட்டுவதையே மகர சங்கராந்தியாகக் கொண்டாடுகிறோம்.

நான்கு நாள் கொண்டாட்டம்: பெரும்பாலும் பாரதம் முழுவதிலும் நான்கு நாள் பண்டிகையாகக் கொண்டாடப்படும் மகர சங்கராந்தியின் முதல் நாள் பண்டிகையின் பெயர் போகி. போகம் என்பதற்கு அனுபவித்தல், விளைச்சல் என இரு பொருள்கள் உண்டு. விளைச்சலுக்கு உதவும் மழைக்குக் கடவுள் இந்திரன். அதனால்தான் வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதத் திணைக்கும் அவரே தெய்வம். இந்திரனுக்கு போகி என்ற மற்றொரு பெயரும் உண்டு. போகத்துக்கு உதவிய போகிக்கு நன்றிக்கடன் தெரிவிக்கும் பண்டிகையே மார்கழி மாதக் கடைசி தினத்தில் கொண்டாடப்படும் போகி. மேலும் தமிழிலே மற்றொரு சிறப்புப் பொருளும் இதற்கு உண்டு. வாட்டும் குளிர் காலத்தைப் போக்கும் தினம் என்பதாலும் போகி. 'இந்த நாளில் நம்மை வாட்டும் பழைய கசப்பான அனுபவங்களையும், தவறான எண்ணங்களையும் தூக்கிப் போட்டுப் பொசுக்குவோம்' என்பதன் அடையாளமாகத்தான் போகி இரவன்று குப்பைக்கூளங்களைக் குவித்து எரிக்கிறோம்.

தை முதல் நாளன்று கொண்டாடப்படும் இரண்டாவது நாள் பண்டிகை சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் 'சூரியப் பொங்கல்' ஆகும். உலகின் இயக்கமே சூரியனோடு தொடர்புடையது என்பதால், நமது முன்னோர்கள் சூரியனை பிரத்யட்ச அதாவது நேரடியாய் கண்ணுக்குத் தெரியும் தெய்வமாக வணங்கினர். மிகத் தொன்மையான ரிக் வேதத்திலேயே சூரிய வழிபாடும், அவருக்கு உரிய காயத்ரி மந்திரமும் உரைக்கப்பட்டுள்ளன. அறிவியல் ரீதியிலும் நாம் வாழும் பூமி, சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது. மேலும், தாவரங்களுக்குத் தேவையான ஊட்டச் சத்தைக்







கொடுப்பதும், மழைக்குத் தேவையான நீரை பூமியில் இருந்து உறிஞ்சி மேகத்துக்கு ஊட்டுவதும் சூரிய ஒளி அல்லவா! ஆகையால் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் ஒளியை வரவேற்கும் வகையிலும் சூரியப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இல்லங்களும் ஒளிவீசி பளிச்செனத் துலங்க வேண்டும் என்பதற்காகத்தான் பொங்கலின்போது வீடுகளுக்கு வெள்ளை அடிக்கப்படுகிறது. அத்துடன் வீட்டு வாசல்களில் வண்ணக்கோலங்களும் வரையப்படுகின்றன.

மூன்றாம் நாள் பண்டிகை, உழவுக்கு உறுதுணை புரியும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் 'மாட்டுப் பொங்கல்' ஆகும். மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டுதல், மாடுகளுக்கு பாரம்பரிய சமயச் சின்னங்களை அணிவித்தல் உள்ளிட்ட பல்வேறு அலங்காரங்களைச் செய்தும், விருப்பமான தீனிகளை வழங்கியும் உழவர்கள் வழிபடுவார்கள். உழவுக் கருவிகளும் வணங்கப்படும். தமிழகத்தில் மதுரை அலங்கா நல்லூர் உள்ளிட்ட இடங்களில், அன்றைய தினம் அடங்காத காளைகளை இளைஞர்கள் அடக்கும் ஜல்லிக்கட்டு எனப்படும் பாரம்பரிய வீர விளையாட்டு நடத்தப்படுவதும் வழக்கம். நான்காம் நாள் பண்டிகை 'காணும் பொங்கல்' ஆகும். வயல்களில் பல்வேறு களப்பணிகளிலும், அறுவடையிலும் உதவிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்நாளில் நன்றி தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சமூகப் பெரியவர்களையும், உறவினர்களையும் சந்தித்து வாழ்த்துகளைப் பெறுகின்ற, மகிழ்ச்சியுடன் அளவளாவுகின்ற நாளாகவும் இது திகழ்கிறது.

வெவ்வேறு பெயர்களில்: தமிழகத்தில் பொங்கல் என்ற பெயரில் கொண்டாடப்படும் இந்தப் பண்டிகை, அண்டை மாநிலமான கேரளத்தில் 'பொங்கலா' என்றும், கர்நாடகத்தில் 'மகர சங்கரமணா', 'சுக்கி ஹப்பா' என்றும், ஆந்திரம், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் 'சங்கராந்தி', 'பெத்த பண்டுகா' என்றும் அழைக்கப்படுகிறது. கோவாவில் 'சங்கராந்த்' என்றும், குஜராத்தில் 'வாசி உத்தராயண்' என்றும், உத்தராகண்டில் 'உத்தராயணா', 'குகுதி' என்றும், மகாராஷ்டிரத்தில் 'மகி சங்கராந்தி', 'ஹல்தி குங்கும்' என்றும், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்கு பீகாரில் 'கிச்சடி பர்வ்' என்றும், பீகாரின் பல பகுதிகள், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட இடங்களில் 'தஹி சுரா' மற்றும் 'தில் சங்கராந்தி' என்றும் இதற்குப் பெயர்.

பஞ்சாப், ஹரியானா, ஹிமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 'மகி' என்றும், ஜம்மு மற்றும் சிக்கிமில் 'மகி சங்கராந்தி' என்றும், காஷ்மீரில் 'ஸிஸுர் சங்க்ராத்' என்றும், மேற்கு வங்கத்தில் 'பௌஷ் சங்கராந்தி' என்றும், ஒடிஷாவில் 'மகர சௌலா' என்றும், மேகாலயாவில் 'புஷ்னா' என்றும், அஸ்ஸாமில் 'மக் பிஹு' என்றும், திரிபுராவில் 'ஹங்க்ராய்' என்றும், அருணாசலப்பிரதேசத்தில் 'பரசுராம் குண்ட் மேளா' என்றும் இந்தப் பண்டிகை அழைக்கப்படுகிறது.

இதேபோல் ஹிந்துப் பண்பாடு நிலவிய அண்டை நாடுகளான பாகிஸ்தானில் 'திர்மூரி' என்றும், வங்க தேசத்தில், 'பௌஷ் சங்கராந்தி' என்றும், நேபாளத்தில் 'மகே சங்க்ராந்த்' என்றும், தாய்லாந்தில் 'சோங்க்ராம்' என்றும், கம்போடியாவில் மோகன் 'சோங்க்ராம்' என்றும் மகர சங்கராந்தி கொண்டாடப்படுகிறது. மேலும் ஹிந்துத் தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளிலும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

புராணங்களில்: ராமபிரானின் முன்னோரும் சூரிய குல இட்சுவாகு வம்சத்தைச் சேர்ந்தவருமான பகீரதன் கடும் தவம் புரிந்து, ஆகாயத்தில் இருந்து சிவபெருமானின் சடைமுடி வழியாக பூமிக்கு கங்கை நதியைக் கொண்டு வந்த தினமாக மகர சங்கராந்தி போற்றப்படுகிறது. மகாபாரதத்தின் முக்கிய நாயகர்களில் ஒருவரான பீஷ்ம பிதாமகர், அம்புப் படுக்கையிலிருந்தபோது தனது உயிரை விடுவதற்கு முடிவெடுத்த நாள் மகர சங்கராந்தி தினம் ஆகும். மகாபாரதத்தில் மகர சங்கராந்திப் பண்டிகை, மக மேளா என்ற பெயரிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதும்கூட மகர சங்கராந்தி தினத்தன்றுதான், கங்கை நதிக்கரையில் கும்ப மேளா எனப்படும் புனித நீராடல் தொடங்குகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில்: சூரியனின் வடதிசைப் பயணமான உத்தராயணப் புண்ய காலத் தொடக்கமே தமிழகத்தில் பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது என்பதற்கு, சங்க இலக்கியங்களிலேயே சான்றுகள் உள்ளன. அந்தக் காலத்தில் பல தவசீலர்களும், சான்றோர்களும் மார்கழி மாதம் முழுவதிலும் கடுமையான உண்ணா நோன்பிருந்து, சூரியன் மகர ராசியில் நுழையும் தை முதல் நாளன்றுதான் புனித நீராடி உணவு உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில், பெயர் தெரியாத புலவர் ஒருவர் இயற்றியிருக்கும் 22.6-7 ஆவது பாடல் கூறுகிறது:

வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையில் தோன்று நாடன்

'திடீரெனப் பெய்த மழையால் புறத்தே நனைந்து விட்ட, நோன்பிருந்த தவசீலர்கள், தங்களது நோன்பை நிறைவு செய்யும் வகையில், தை முதல் நாளில் புனித நீராடிவிட்டு படையல் உணவை உண்டபோது, அவ்விடத்துக்கு வந்த மலைநாட்டுத் தலைவன்' என்று இந்த வரிகளுக்குப் பொருள்.

இதே நற்றிணையில் (80. 6-8) மார்கழி மாதம் முழுவதிலும் நோன்பிருக்கும் பெண்கள், தை பிறக்கும் நாளில் அதிகாலையில் குளத்தில் புனித நீராடுவது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலவர் பூதன் தேவனார் பாடிய 80-ஆவது பாடலின் வரிகள்:

இழைஅணி ஆயமொடு தகுநாண் தடைஇ,
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்

பொருள்: 'நோன்புச் சரடு அணிந்த தம்மை ஒத்த பாவையர் கூட்டத்தோடு சேர்ந்து, தகுதியுடைய நாணத்தால் வளைக்கப்பட்டு, நோன்பை நிறைவும் செய்யும் விதமாக, தைத் திங்கள் தொடங்கும் நாளில் குளிர்ந்த குளத்திலே நீராடுகின்ற, பெரியதோள்களை உடைய இந்த இளவயதுப் பெண்'.

இதேபோல் கலித்தொகை (பாடல் 59), ஐங்குறுநூறு (84), பரிபாடல் (11) ஆகிய சங்க இலக்கியங்களிலும் தை நீராடுதல் பற்றிய குறிப்புகள் உள்ளன.

திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் கோவிலில் பொ.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் குலோத்துங்கச் சோழ மன்னனின் கல்வெட்டு ஒன்றில், இக்கோவிலில் பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக நன்கொடையாக நிலம் வழங்கப்பட்டதைப் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சர்வம் கல்விதம் பிரும்மம்' என்கிறது சாந்தோக்ய உபநிஷதம். உலகில் உள்ள அனைத்துமே இறைவடிவே என்பது இதன் பொருள். அனைத்திலும் இறைவனைக் காணும் நமது ஆன்மிகப் பார்வையின் உச்சத்தால் எழுந்த பண்பாட்டின் வெளிப்பாடே இயற்கை, மாடுகள், மனிதர்கள், கருவிகள் ஆகிய அனைத்தையும் கடவுளாய் மதித்து நன்றி தெரிவிக்கும் மகர சங்கராந்திப் பண்டிகை. இதனை உளப்பூர்வமான, அறிவுபூர்வமான, ஆன்மிகபூர்வமான உணர்ச்சிப் பொங்கலுடன் பொங்கலோ பொங்கல் என்று முழங்கி, காலந்தோறும் கொண்டாடுவோம்!




-பத்மன் எழுத்தாளர்

# நான்தான் சென்சார் போர்டின் பிராண்ட் அம்பாசிடர் - ஜீவா



கடந்த 2024-ம் ஆண்டு ஜீவா நடிப்பில் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது 'ப்ளாக்' திரைப்படம். இப்படத்தை பாலசுப்பிரமணி கேஜி இயக்கியிருந்தார். ஜீவாவின் ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்க சாம்.சி எஸ் இசையமைத்திருந்தார். திரைப்படம் ஒரு டைம் லூப் கதையம்சத்தில் உருவாகி மக்களின் ஆதரவை பெற்றது.

இதனை தொடர்ந்து, ஜீவாவின் 45 ஆவது படமாக 'தலைவர் தம்பி தலைமையில்' உருவாகி உள்ளது. 'Falimy' படத்தை இயக்கி புகழ்பெற்ற இயக்குனர் நிதிஷ் சகாதேவ் இப்படத்தை இயக்கி உள்ளார். ராவண கோட்டம் படத்தை தயாரித்த கண்ணன் ரவி இப்படத்தை தயாரித்துள்ளார்.



அரசியல் கலந்த நகைச்சுவை படமாக உருவாகி உள்ள 'தலைவர் தம்பி தலைமையில்' படம் வருகிற 30-ந்தேதி உலகமெங்கும் வெளியாக உள்ளதாக படக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில், வருகிற 15-ந்தேதி பொங்கலன்று வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

விஜயின் ஜனா நாயகன் படம் தணிக்கை சான்றிதழ் பிரச்சினையாக நேற்று வெளியாகவில்லை. இது தொடர்பான வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் வருகிற 21-ந்தேதி வரை ஒத்திவைத்துள்ளது. இந்த நிலையில்தான் ஜீவா படம் முன்னதாகவே ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று தலைவர் தம்பி தலைமையில்' பட ட்ரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் பேசிய ஜீவா, "நான்தான் சென்சார் போர்டின் பிராண்ட் அம்பாசிடர். ஜிப்ஸி திரைப்படத்தில் 48 கட்கள் கொடுத்தனர். என்னைதான் சென்சார் போர்டு முதலில் செய்தார்கள் அவர்களோடு சேர்த்து கொரோனாவும் என்னை செய்தது" என்று கிண்டலாக தெரிவித்தார்.



சின்னத்திரையில் தனக்கென்று தனி இடத்தை பிடித்துள்ள தொகுப்பாளினிகளில் ஒருவர் திவ்யதர்ஷினி. இவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மிகவும் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலம் ஆவார்.

தனது போட்டோஷூட் புகைப்படங்களை தொடர்ந்து இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டு வரும் திவ்யதர்ஷினி, தனது சகோதரரின் திருமணத்தில் பட்டுப்புடவையில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தற்போது வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.

# பராசக்தி படத்தின் முதல் நாள் வசூல்




சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' படம் உலகம் முழுவதும் நேற்று வெளியானது. இதனால் திரையரங்குகள் முன்பு ரசிகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

திரையரங்குகள் முன்பு குவிந்த ரசிகர்கள் சிவகார்த்திகேயனின் பேனருக்கு பாலாபிஷேகம், இனிப்பு, பட்டாசு வெடித்து கொண்டாடினர். 'பராசக்தி' படத்தை பார்க்க அப்படத்தில் நடித்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் மற்ற நடிகர்கள் திரையரங்குகளில் குவிந்ததால் ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

முன்னதாக 'பராசக்தி' படத்திற்கு தணிக்கை சான்று வழங்க தாமதம் ஆனதால் திட்டமிட்டபடி இப்படம் வெளியாகுமா? என்ற கேள்வி எழுந்த நிலையில், நேற்று உலகம் முழுவதும் 'பராசக்தி' வெளியானது.

இந்நிலையில், பராசக்தி படம் வெளியான முதல் நாளில் உலகம் முழுவதும் ரூ.27 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# ஜனநாயகன் படம் 'பகவந்த் கேசரி' ரீமேக் தான்..



ஹெச். வினோத் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் 'ஜன நாயகன்' ஜனவரி 9 ஆம் தேதி உலகம் முழுவதும் வெளியாக இருந்த நிலையில் தணிக்கை சான்று வழங்கப்படாததால் கடைசி நேரத்தில் ரிலீஸ் தேதி ஒத்திவைக்கப்பட்டது. இதனால் விஜய் ரசிகர்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர். மேலும் 'ஜன நாயகன்' படத்திற்கு தணிக்கை சான்று வழங்கப்படாததற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

'ஜனநாயகன்' திரைப்படத்தின் டிரெய்லரின் பல காட்சிகள் பகவந்த் கேசரி படத்துடன் ஒத்துப்போனது. இதனையடுத்து 'ஜனநாயகன்' படம் சுமார் 80% 'பகவந்த் கேசரி' படத்தின் ரீமேக் எனும் கருத்து சமூக வலைதளங்களில் வைரலானது

இதனால் பாலகிருஷ்ணா நடிப்பில் தெலுங்கில் மாபெரும் வெற்றியை பெற்ற பகவந்த் கேசரி Amazon Prime OTT தளத்தில் டிரெண்டிங்கில் முதல் இடத்தை பிடித்து அசத்தியது.

இந்நிலையில், 'பகவந்த் கேசரி' படத்தின் அடிப்படை கருவை மட்டும் வைத்துக்கொண்டு 'ஜனநாயகன்' படத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்று 'பகவந்த் கேசரி' இயக்குநர் அனில் ரவிபுடி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடுத்த நேர்காணலில் பேசிய அனில் ரவிபுடி, "'பகவந்த் கேசரி' படத்தின் முதல் 20 நிமிடங்கள், இடைவேளை மற்றும் இரண்டாம் பாதியின் சில பகுதிகள் என சில விஷயங்கள் மட்டுமே ஜன நாயகன் படத்தில் அப்படியே இருக்கும். மற்றபடி வில்லன் கதாபாத்திரத்தை முழுமையாக மாற்றி, ரோபோ மற்றும் Sci-Fi அம்சங்களைச் சேர்த்துள்ளனர். தமிழ் ரசிகர்களுக்கு அது கண்டிப்பாக ஒரு புதுமையான அனுபவமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

# 'மரியான்' படப்பிடிப்பில் மோசமான அனுபவம்




தனுஷின் 'மரியான்' படப்பிடிப்பில் தான் மோசமான அனுபவத்தைச் சந்தித்ததாக நடிகை பார்வதி தெரிவித்துள்ளார்.

மலையாள நடிகையான பார்வதி, தமிழில் வெளியான 'பூ', 'மரியான்', உத்தம வில்லன்', 'தங்கலான்' உள்பட சில தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார். அவர் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில், தனுஷின் 'மரியான்' பட ஷூட்டிங்கின் போது தன்னை உடை மாற்ற அனுமதிக்கவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டியில், "'மரியான்' படத்தின் ஒரு காட்சியில் தண்ணீரில் முழுவதுமாக நனைந்தபடி நடித்தேன். அது கதாநாயகனுடன் வரும் காதல் காட்சி. அப்போது மாற்றுவதற்கு நான் உடைகள் கொண்டு வரவில்லை.

என் தேவைகளைக் கவனித்துக்கொள்ள அங்கும் யாரும் இல்லை. ஒரு கட்டத்தில், உடை மாற்றுவதற்காக நான் என் ஓட்டல் அறைக்குச் செல்ல வேண்டும் என்று சொல்ல வேண்டியிருந்தது. அதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை.

எனக்கு 'பீரியட்' என்றும், நான் கண்டிப்பாகச் செல்ல வேண்டும் என்றும் சத்தமாகச் சொன்னேன்" என்ற பார்வதி, 'மரியான்' படப்பிடிப்புத் தளத்தில், தன்னைச் சேர்த்து மொத்தம் 3 பெண்கள் மட்டுமே பணிபுரிந்ததாகவும் அது தனக்கு கடினமாக இருந்ததாகவும் தனக்கு ஆதரவாக அங்குயாருமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2023-ம் ஆண்டு வெளியான 'மரியான்' படத்தை பரத் பாலா இயக்கி இருந்தார். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்திருந்தார்.



நடிகை மாளவிகா மோகனன் தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வருகிறார். சமீபத்தில் ரிலீஸ் ஆகி இருக்கும் ராஜா சாப் படத்தில் ஹீரோயினாக மாளவிகா தான் நடித்து இருக்கிறார்.

தற்போது மாளவிகா பிரபல இதழின் அட்டைப்படத்திற்கு மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

பல விதமான ஹாட் உடைகளில் அவர் இருகும் அந்த ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# ரஜினி, அமிதாப் வரிசையில் நீதிமன்றம் சென்ற கமல்!

நடிகர் கமல்ஹாசன் தனது பெயர், புகைப்படம், குரல் மற்றும் 'உலகநாயகன்' என்ற பட்டத்தையும் அனுமதி இல்லாமல் வணிக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். நடிகர் கமல்ஹாசன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கையும், இடைக்காலத் தடையுத்தரவு கோரும் அவரது மனுவையும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி நாளை (ஜனவரி 12, ) விசாரிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'நீயே விடை' என்ற நிறுவனம் அனுமதியின்றி கமலின் புகைப்படங்களையும், வசனங்களையும் டி-சர்ட்டுகளில் பயன்படுத்துவதை சுட்டிக்காட்டி உரிமையியல் வழக்குத் தொடர்ந்துள்ளார். சிறுவயதிலிருந்தே திரையுலகில் இருந்து வருவதாகவும், பல்வேறு கலை வடிவங்களில் தனக்கிருக்கும் நிபுணத்துவத்தின் மூலம் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சமீப நாட்களாகவே பிரபல நடிகர், நடிகைகளின் பெயரைப் பயன்படுத்தி, சில நிறுவனங்கள் உரிய அனுமதி இன்றி தங்களது உற்பத்தி பொருட்களை விளம்பரம் செய்து வருவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்துவருகிறது. அண்மையில் கூட நடிகர் விஜய்யின் பெயரைக்கூறி, சிறுவர் ஒருவர் மோசடியில் ஈடுப்பட்டிருந்தார். நடிகை ஐஸ்வர்யா ராய் தொடங்கி அபிஷேக் பச்சன், அமிதாப் பச்சன், சல்மான் கான், நடிகர் மாதவன் என பல பிரபலங்களும் நீதிமன்றத்தை நாடி உரிமையியல் வழக்கு தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# 'வா வாத்தியார்' பிரச்சினைக்கு முடிவு: ஜன.14-ம் தேதி வெளியீடு



'வா வாத்தியார்' பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட்டு ஜனவரி 14-ம் தேதி வெளியிடும் வகையில் வெளியீட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## DAKSHAN PROPERTIES
Khushal Gardens
GUDUVANCHERY
KAYARAMBEDU
ASTHINAPURAM
- On Road Site Rs.3999 /- Per Sq.Ft
- DTCP & RERA Approved
- Plot Size: 600 to 1200 sf

84385 85986 / 72000 49411

## அய்யப்பன்தாங்கல்
மெட்ரோ ரயில் நிலையம் அருகில்
(PRE - LAUNCH)
1800SQ.FT
3BHK -1FLOOR 1FLAT
TOTAL 4 FLATS CCP LIFT
ஒரு சதுரடியின் விலை
ரூ.5500/-
90929 93599

## வாடகைக்கு
Poonamallee
1800 Sq.ft. 40HP
Shed with Building
9629276108

## சென்னையில்
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597

## தனி வீடு விற்பனைக்கு
NEMILICHERY, CHROMPET
Duplex Villa with CCP
Land area - 1080 sqft
Buildup area - 2400 sqft
contact:-
98414 83333 / 96000 69222

## 2 கடை
வாடகைக்கு
பழைய வண்ணை
தெலுங்கு செட்டி தெரு,
Near Thiyagaraya Metro
94444 13395
044-48609138

## COMMERCIAL COMPLEX FOR RENT

3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road,
Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

## சென்னை
GNT ROAD
சோழவரம் BY PASS
25000 சதுர அடி
&
300 HP பவருடன்
INDUSTRIAL /
COMMERCIAL
SHED வாடகைக்கு உள்ளது
9841420151

## Space available on OMR for RENT!
Fully Furnished Amenities
Ideal for:
Coaching / Tuition Classes,
Govt. / Competitive Examinations,
Workshops, Conferences,
Seminars, etc.
Film shooting & Advt. shoots
Video/ Audio Editing or Recording
Facilities include Ample Parking,
Cafeteria, and Power Backup.
Available on Weekends and Holidays
Contact +91 99406 94545
to know more!

## குடோன் வாடகைக்கு
3000 சதுர அடி
இடம்: காஞ்சிபுரம்,
பொன்னேரிக்கரை
Tata Car சர்வீஸ்
சென்டர் அருகில்.
Double Side
Road Access.
தொடர்புக்கு:
9840436193

## OFFICE SPACE FOR RENT
AVADI PARUTHIPATTU

12000 SFT
Each Flr 4000 Sft
Tailor Made
1st, 2nd &
3rd FLOORS
Building With
Lift Facility
98713 10022 / 91768 00400

## அம்பத்தூர்
விஜயராகவாசாரியார் தெரு
துலுகாத்தம்மன் கோவில் அருகில்
KALPAVRIKSHA - 3BHK FLATS
3BHK 1200 sq.ft | 4 FLATS ₹5500 Per sft.
with CCP + LIFT
90929 93599

## CREST THE BEST
@ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS

1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site
www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

## Commercial Building for Rent
THIRUNINDRAVUR
Main Road 3000Sft, 2nd Floor
Suit for Gym, Restaurant, Etc.,
REDHILLS MAIN ROAD
Main Road 2500Sft, Ground Floor,
(Via Redhills to Thiruvallur)
Suits for Showroom, Restaurant.
98412 38854

## AMBATTUR ESTATE
Nr. BSNL
7200 Sft. Each Floor
1st & 2nd Floor
Lift, Parking.
Looking for Banks &
Corporate Clients.
Ct : 98846 35932

## பிரபல TYRE கம்பெனி
Staff தங்குவதற்கு
மாதவரம், புழல்,
திருவொற்றியூர்
அருகில் பில்டிங்
வாடகைக்கு தேவை.
97899 74898 / 91765 21641

## MADIPAKKAM

NEAR PONNIAMMAN
KOIL &
PRINCE SCHOOL
| OFF. MAIN ROAD |
1300 Sq.ft
₹1.49 Cr
NORTH FACING
SRI SAI HOUSING
98411 36844

## WANTED
A Running Hospital
for LEASE / RENT /
PURCHASE
in and Around
Chennai.
Ct: 98430 64009

## VEMPATI REALTORS
25years of Exp. in Construction
seek JOINT VENTURE PARTNERS
for our upcoming projects
in and around Chennai.
Interested Land Owners Contact:
VEMPATI REALTORS
94441 70437 | 96772 59869

## COMMERCIAL SPACE FOR RENT
WAREHOUSE @
GERUGAMBAKKAM
12500 Sq.ft.
40 Feet Road, 12 Mtr Ht,
3 Phase EB, ACC Flooring
Call : 98408 93117
82202 20444

## NEW FLAT FOR SALE
@ KEELKATTALAI

Near
JAYACHANDRAN TEXTILES
| 200ft Radial Road |
Opp.Metro &
Keelkattalai Bus Terminus
Ready to Occupy
2 BHK & 3 BHK
| CCP, LIFT, CCTV |
SRI SAI HOUSING
98411 36844


## சென்னையில்
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597


## Approved Layouts Wanted
Our Co-operative
society requires
LAYOUTs approved
by CMDA/DTCP
in and around
Chennai,Tiruvallur
Kanchipuram,
Chengalpet, etc.
for Joint Venture
THE ROYAL LANDS & NEST
CO-OPERATIVE HOUSING SOCIETY
Plot No.1722, 6th Avenue,
Anna Nagar, Chennai - 40.
96000 43333

## வாடகைக்கு
ஒரு ஏக்கர் நிலம் தேவை
சிமெண்ட் கான்கிரீட் கலவை
ஆலை (Ready Mix
Concrete Plant)
அமைப்பதற்குதொழில்துறை மற்றும் வகைப்படுத்தப்படாத நிலம் 1 ஏக்கருக்கு (43,560 சதுர அடி) குறைவில்லாத காலி இடம் மாசுகட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி கீழ்கண்ட பகுதிகளில் 10 வருட குத்தகையுடன் கூடிய மாத வாடகைக்கு தேவை.
சென்னை படப்பை To
ஒரக்கடம் மற்றும்
பெருங்களத்தூர் To
மதுரவாயல்
பைபாஸ் அருகில்
உள்ள பகுதிகளில்
காலி இடம் தேவை.
தொடர்புக்கு:
9940641555
website: www.amix.in

## தனி வீட்டுமனை தேவை
7 கிரவுண்டுக்கு மேல்
போயஸ் கார்டன், அடையாறு,
பெசன்ட் நகர், போட் கிளப்,
ரேஸ் கோர்ஸ், பாலவாக்கம்,
நீலாங்கரை
உரிமையாளர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்
75500 00680

## கமர்ஷியல் பில்டிங் வாடகைக்கு
Commercial Building Available for Rent on
GST road, near Ford Car
Factory, Maraimalai Nagar,
Total 10000sft (3 Floors) with
Lift, Power back up &
Car Parking
Suitable for Office, Furniture
Showroom, Hospitals,
Hostel and Banks.
Long Lease preferable.
Contact: 9840961251
Email: uandicars@gmail.com
Call: Monday to Saturday
9am to 7pm




### தேசியப் பாதுகாப்பு!

நேரிசை வெண்பா!

தொழிலாளர் பாதுகாப்பு
தோற்றுவித்தெல்லாம்

அழகாக வாழவும்
அன்புப்..பழக்க

வழக்கங்கள் காணவும்
வண்ணம் நிறைந்தே

ஒழுங்காக வாழ உணர்!

தேசியப்பாதுகாப்பு
தேர்ந்த நன்னாளையே

பாசமுடன் காண்பமே!
பாங்காக.. ஆசையுடன்

நாட்டையே காத்திடல்
நன்றாகும் எந்நாளும்

கேட்டைத்தவிர்த்திடக்கேள்.

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



### தாய்


பத்து மாதம்சுமந்தாலும்..
மீதி நாட்கள் அத்தனையும்
தன்னுடைய... கண்
பார்வையிலேயே...
வளர்க ஆசைப்படுகிறாள்
மற்றவர்கள்.. தன்
குழந்தையின் வளர்ப்பை..
குறை கூறாமல் இருக்க.

சுரேஷ்
திருச்சிற்றம்பலம்

### தினசரி நாள்காட்டிப் பேசுகிறேன்..

இன்றோடு நிறுத்திகொள்.. நீ
கிழித்தது போதுமென்பேன்.!
என்ன செய்து கிழித்து
விட்டாய்?சென்றஆண்டில்.!
என்னை மட்டும்
கிழித்தெறிந்தாய்!
போகட்டும்.. போ.!
புதிதாக ஒருவன் வருவான்..
அழகாய் அடர்த்தியாய்..
நம்பிக்கைத் தர.. நாட்களை
எண்ண.. அவனுக்கும்
என்நிலைதான்! காகிதத்தை
காலங்களை கவனித்துப்பார்..
சில கணிப்புகள் உனக்கு
ஒளியூட்டும்! நினைவூட்டும்!
கனவுகளை கடத்தும்..
காகிதப்பதிவுகள்.. காலத்தின்
கண்ணாடிகள்! கடவுள்
படங்கள்.. கருத்துப்படங்கள்..
சுமந்துவந்து புன்னகைக்கும்.!
எதைமறந்தாலும் என்னை
மறவாதே.. கிழி.. மறப்பது
என் இயல்பு! மறுபடியும்
புதிய நம்பிக்கை ஊட்டுவது
என் கடமை! விடை
பெறுகின்றேன்... உன்வீட்டு
ஓரத்தில் வீசிவிடாதே..
உன் மகளுக்கு மகனுக்கு..
பரிட்சை எழுத அட்டையாய்
என்னைக்கொடு..
ஆசீர்வதிப்பேன்.
இப்படிக்கு..
சென்றவருட
தினசரிக்நாள்காட்டி.


வே.கல்யாணகுமார்.
பெங்களூரு.




### சிதறல்கள்...

மின்விசிறியில் பல்லி //
துடித்துக் கொண்டே
இருக்கிறது //
துண்டிக்கப்பட்ட வால் //
--------------------
விட்டில் பூச்சி //
விளக்கில் பாய்ந்து
மாய்கிறது// தீக்குளிப்பு //
--------------------
காதலன் வருகைக்காக //
விடியலை நோக்கி
விரதமிருக்கிறது //
சூரியகாந்தி பூ //
--------------------
வரிக்குதிரைகள் //
வரிசைக்கட்டி நிற்கின்றன //
சாலைத் தடுப்புகள் //
--------------------
கோவில் வாசல் //
சாதி, மத பேதங்கள்
ஏதுமில்லை //
மிதியடி வைக்குமிடம் //
--------------------
தொலைத்தூரப் பயணம் //
தொடர்ந்து செல்ல விருப்பம் //
இனிய பாடல்கள் //
--------------------
யாசிக்க மனமில்லை //
கூட்டையும் சுமந்தே
செல்கிறது // நத்தை //
--------------------
பூக்கள் மட்டுமல்ல //
புட்கள் கூட அழகுதான் //
மிதிபடாத வரையில் //
--------------------
தெருவோர உணவகம் //
மூன்று வேளையும்
பசியாற்றுகிறது //
விலை குறைவு //
--------------------
பிரம்பை பார்த்ததும் //
நினைவுக்கு வருகிறார் //
கணக்கு வாத்தியார் //

பா. செந்தில்குமார்
கோவை



### ஒரே அழகி

என்னவளே...
உன் ஒற்றை ஜடை
உன் தலையில் இருக்கும்
ஒற்றை ரோஜா
உன் ஒற்றை மூக்குத்தி
உன் நெற்றியில் ஒற்றை



கோபுரம்
பொட்டு
உன் கை
ஒற்றை
வளையல்
உன் ஒற்றைப்
பார்வைக்காக
காத்திருக்கிறேன்

"போய்ஸ் கார்டன்"
பொன்விழி
அன்னூர்

1. நாயிடம் கேட்டேன் கடைசி
வரை என்னுடன் இருப்பாயா
என்று அதற்கு நாய் கூறியது
நான் ஒன்றும்
மனிதன் இல்லை பாதியில்
விட்டு விட்டு செல்வதற்கு

2. அடுத்தவர்களை
அடக்குவதில் ஆண் பலசாலி
அந்த ஆணையே
அடக்குவதில் பெண் பலசாலி

3. பூமிக்கு முக்கால் பாகம்
தண்ணீர் ஒரு பாகம் நிலம்
வாழ்க்கைக்கு முக்கால்
பாகம் கண்ணீர் ஒரு பாகம்
நிம்மதி

4. கற்றுத் தெளிவது கல்வி
பட்டு தெளிவது அனுபவம்
கற்றது மறந்தாலும்
பட்டது மறக்காது

5. எளிமை ஒருவகை
செல்வம் பொறுமை
ஒருவகை ஆயுதம்

6.உன் வாழ்க்கையில்
உறக்கம் இரக்கம்
இரண்டும் அளவோடு
இருக்க வேண்டும் உறக்கம்
அளவுக்கு மீறினால்



சோம்பேறி
என்பார்கள்
இரக்கம்
அளவுக்கு
மீறினால்
ஏமாளி
என்பார்கள்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

### உன்னாலே....

நிலவும் காலநிலை...
உன்னைத் தேடுதே...

உலவும் தென்றலும்...
நினைவை நாடுதே...

நுரையீரல் கடந்தும்...
உன்னை சுவாசிக்கிறேன்...

அலைகடல் ஏட்டிலும்..
உன்னை வாசிக்கிறேன்....

மகிழ்ச்சியின் திசை நீ...
உயிரில் உறைந்த...இசை..நீ...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



### உன்னுல் எத்தனை... எத்தனை

உன் கருங்கூந்தல் அலை
வரிசை நடனம் ஆட
கண்டேன்...!

நடனமாடும் கூந்தல் நடுவே
வெள்ளையாய்
மலர்ந்த மல்லி
பூவை கண்டேன்...!

உன் மலந்த முகம்
நடுவே
மங்களாக சிரிய
பொட்டு இருக்க



கண்டேன்...!
தங்கம்மான உன் முகத்தில்
மின்னலாய்
சின்ன மூக்குத்தியை
கண்டேன்...!

நெளிந்த உன் கைகளிலே
வளையல்கள் இசையை
இசைக்க கண்டேன்...!

செம்பருத்தி மலர் இதழ் உன்
வாய்மேல் உதடாய் இருக்க
கண்டேன்...!

நீ சிரிக்கும்போது வெள்ளை
நிற அனை சுவரைபோல் உன்
பல் அழகை கண்டேன்...!

மெத்தை வேண்டாம் உன்
மடி போதும் களைப்பார உன்
கருணையை கண்டேன்...!

காலில் இரண்டு கொழுசு
கவிதைகள் பல சொல்ல
கண்டேன்...!

நீ கட்டியிருந்த கண்டாங்கி
சேலைக்குள்ளே நான்
கள்ளனாக மறைந்து
நின்றேன்....!

உன்னை வர்ணிக்க இது
போதாது....
உன்னை இழக்க யாருக்கும்
மனம் தாங்காது....!!

பொன்.கருணா,
நவி மும்பை

### இனவெழுச்சிக் கும்மி.!

கும்மியடித்தே..
குலவைகளிட்டே..
கொட்டுங்கடி கும்மி
கொட்டுங்கடி..!
நம்மைப் பிடித்த..
துன்பங்கள் போயின..
தைப் பிறந்ததெனக்
கும்மியடி..!

எங்களினம் தமிழ்ப் பொங்கு
மினமென.. இங்கு வந்துப்
பெண்கள் கும்மியடி!
சங்கத் தமிழ்த் தந்த
மன்றத்திலே இன்று.. எங்கும்
முழங்கிடக் கும்மியடி..!

தூங்கிக் கிடப்பதோ.?
ஏங்கித் தவிப்பதோ..?
துள்ளி வந்தோமெனக்
கும்மியடி..!
தேங்கிக் கிடக்கிற..
நீர்நிலை அல்லவே..



கொட்டும் அருவி நாம்
கும்மியடி..!
ஆண்ட இனம் இன்று..
அடிமைப் படுவதோ..?
ஆர்த் தெழுந்தோமென்று
கும்மியடி..!
இந்தப் பொங்கலிலே..
ஒன்று பட்டோமென்று
இனவெழுச்சிப் பொங்கக்
கும்மியடி..!

கட்டு கரையில்லை..
கொட்டும் மழையென..
ஓட்டிவந்தே நின்றுக்
கும்மியடி..!
எட்டி நட இன்றே..
எங்கள் தமிழினம்..
எங்கள் தமிழினம்.. என்றுப்
பெருமிதக் கும்மியடி..!
முட்டுகின்ற காளை..
வாடி வாசல் மீறி.. பாய்ந்து
வந்ததென்றுக் கும்மியடி!
ஒற்றுமையாய் நின்று.. எங்கள்
தமிழ்க்கொடி.. பட்டொளி
வீசிடக் கும்மியடி..!

வே.கல்யாண்குமார்.

## நூல் விமர்சனம்

**ஒரு நீதியரசரின் நெடிய பயணம்!**
**(நீதியரசர் மு. கற்பக விநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு)**
**நூலாசிரியர் : ராணிமைந்தன் !**
**நூல் விமர்சனம் :**
**கவிஞர் இரா. இரவி**
**வானதி பதிப்பகம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை– 600 017. விலை : ரூ. 200 பக்கம் : 244**

அட்டைப்பட வடிவமைப்பு, உள் அச்சு, பதிப்பாளர் உரை என யாவும் மிக நேர்த்தியாக உள்ளன. வானதி பதிப்பகத்திற்கு பாராட்டுக்கள். உலகப்பொதுமறை படைத்த திருவள்ளுவரின் திருக்குறள் போல வாழ்வாங்கு வாழ்ந்து வரும் மாமனிதர் நீதியரசர் மு. கற்பக விநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு, இன்றைய இளைய தலுமுறையினர் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய அற்புத நூல்.

நீதியரசர் டி.எஸ். அருணாசலம் அவர்களின் அணிந்துரை மிக நன்று. அதிலிருந்து ஒரு துளி.

“மின்சாரம் ஷாக் அடிக்கும் என்பதில் அனுபவம் உண்டு. ஆனால் மின் தீர்ப்பாயத் தலைவர் இவ்வளவு இன்ப அதிர்வுகளைத் தந்திருக்கிறார் என்று இப்பொழுது புரிந்து கொண்டேன்”.

கவிதை உறவு ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் டிசம்பர் 2014 இதழில் மனத்தில் பதிந்தவர்கள் பகுதியில் நீதியரசர் கற்பகவிநாயகம் பற்றி மிகச் சிறப்பாக பதிவு செய்து இருந்தார். நீதியரசரின் அலைபேசி எண் தந்து உதவி, அந்த இதழ் வர, நான் ஒரு காரணமாக இருந்ததில் மகிழ்ச்சி. கவிதை உறவில் படித்து முடித்தவுடன் இந்த நூலும் படிக்க வேண்டும் என்ற ஆவல் மிகுதியில் வானதி பதிப்பகம் பதிப்புத்திலகம் திருமிகு. திருநாவுக்கரசு அவர்களுக்கு தகவல் தந்து நூலை அனுப்பி வைக்க வேண்டி படித்து மகிழ்ந்தேன். பரவசம் அடைந்தேன்.

எனது இல்ல நூலகத்தில் முதல் நூலாக இந்த நூலை வைத்துள்ளேன். மனச்சோர்வு வரும் போது எடுத்து வாசித்தால் தன்னம்பிக்கை பிறக்கும். இந்த நூல் பற்றி நீதியரசர் கற்பகவிநாயகம் அவர்களின் வைர வரிகளில் காண்போம்.

“எனது முழு உருவத்தையும் முதன் முதலாக நானே பார்த்துக் கொள்ளும் அற்புதக் கண்ணாடியாக” இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார் ராணிமைந்தன்.

தேவகோட்டையில் விநாயக சதுர்த்தி அன்று பிறந்ததால் கற்பகவிநாயகம் என்று பெயர் சூட்டப்பெற்றவர். திரைப்படத்தின் வாய்ப்புகளுக்காக தேடி அலைந்தவர். உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர், உயர்நீதிமன்ற நீதியரசர், ஜார்க்கண்ட் உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர், டில்லி உச்சநீதிமன்ற நீதியரசருக்கு இணையான அகில இந்திய மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் என படிப்படியாக உயர்ந்து உச்சம் தொட்டவரின் உண்மை வரலாறு. ஜார்க்கண்டில் அரசு அறிவித்த பந்த வாபஸ் வாங்க வைத்தவர். காரின் கண்ணாடியில் உள்ள கருப்பு காகித்தை கிழிக்க வைத்தவர்.

இந்த நூல் படித்த போது அவரின் உயர்ந்த பண்பை பறைசாற்றும் மலரும் நினைவுகள் மலர்ந்தன. மதுரை காலேஜ் ஹவுஸ் விடுதி அரங்கில் 15 வருடங்களுக்கு முன்பு மிகச்சிறப்பாக உரையாற்றினார். உடன் அவ்வுரையைப் பாராட்டி மடல் அனுப்பினேன். சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தார். அம்மடல் மிகவும் பிடித்து, மதுரை வந்த போது என்னை அழைத்துப் பாராட்டினார்.

சமீபத்தில் மதுரை விமான நிலையம் வந்திருந்த போது அறிமுகமாகி எனது ஆயிரம் ஹைக்கூ நூல் தந்தேன். டில்லி சென்ற பின் படித்து முடித்து விட்டு அலைபேசியில் அழைத்துப் பாராட்டினார்கள். மதிப்புரையும் அனுப்பினார்கள். அதனை “புத்தகம் போற்றுதும்” நூலிலும் இடம்பெறச் செய்தேன். நீதியரசர் என்ற கர்வம் துளியும் இல்லாதவர். என் போன்ற சாமானியனுடனும் அன்பு செலுத்தும் ஆளுமையாளர். அவர் வரலாற்றை படித்து அசந்து போனேன். பிரமிப்பாக இருந்தது. தோன்றின் புகழோடு தோன்றுக என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வரும் மாண்பாளர். நூலின் பின் அட்டையில் உள்ள நீதியரசர் கவிதை மிக நன்று. பத்திர எழுத்தரின் பிள்ளையாக பிறந்து நீதியரசராக உயர்ந்தவர்.

நூல் என்ன செய்யும்? என்று கேட்பவர்களுக்கு நீதியரசர் மு. கற்பக விநாயகம் அவர்களின் வாழ்க்கையே எடுத்துக்காட்டு. S.S.L.C தேர்வில் தோல்வி கண்டதும் திங்கள்கிழமை இறப்பதென்று தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தார். வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களும் சத்தியசோதனை நூலைப் படித்தார். தற்கொலை செய்யும் முடிவை மூடி வைத்தார். இன்று வையகம் போற்றிட வாழ்ந்து வருகிறார். இன்றைய இளைஞர்கள் பலரும் தற்கொலை செய்து கொள்வதை தினசரி செய்தித்தாளில் பார்க்கிறோம். தற்கொலை செய்யும் எண்ணம் உள்ளவர்கள் இந்த நூலைப் படித்தால் எண்ணத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று உறுதி கூறலாம்.

கல்லூரி நாடகங்களில் நடிப்பது என்று கலை ஆர்வத்துடன் வாழ்ந்தவர். கலைத்துறையிலிருந்து நீதித்துறைக்கு மடைமாற்றம் ஆகின்றார். பல சமயங்களில் எழும்பூரிலிருந்து திருவல்லிக்கேணிக்கு நடந்தே வந்து இருக்கிறார். பல கஷ்டங்கள் அடைந்தே முன்னேறி இருக்கிறார். நம்மில் பலர் திரைப்படம் போல உடனே ஏற்றம் வர வேண்டும் என்று நினைக்கின்றோம். படிப்படியாக வரும் ஏற்றமே நிலைக்கும்.

நீதியரசர் கற்பகவிநாயகம் வாலிபராக இருந்த போது ரத்ததானம் செய்து அரசு பொது மருத்துவமனையில் தந்த ரூ. 151 அன்பளிப்பை வாங்கி காசோலையாக மாறிய் ‘இரத்த தானம் செய்து பெற்ற பணம் நெசவாளர்களுக்காக எனது நன்கொடை’ என்று எழுதி எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கி இருக்கிறார். கடிதத்தைப் படித்த எம்.ஜி.ஆர். கண்கலங்கி ‘நீங்க பெரிய மனுஷன்’ என்று பாராட்டி இருக்கிறார். அவர் வாழ்த்தியது போலவே பெரிய மனிதராக உயர்ந்து விட்டார்.

எம்.ஜி.ஆரை தேவகோட்டையில் தன் இல்லத்தில் உணவு உண்ண அழைத்ததும். அன்போடு அவர் சாப்பிட்டதை கட்சியினர் சிலர் எதிர்த்த போது அவர்களிடம், “இந்தத் தம்பி எனக்காக ஜெயிலுக்குப் போனவன் அவங்க வீட்டில் சாப்பிடாவிட்டால் எப்படி?” என்றார் எம்.ஜி.ஆர். எதிர்த்தவர்கள் அமைதி ஆனார்கள், இப்படி பல நிகழ்வுகள் நூலில் உள்ளன.

ஆங்கிலம் சரளமாக பேச வரவில்லையே என்று தயங்கியவர், பயிற்சி, முயற்சி காரணமாக, சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும் வந்தது என்ற தகவல் நூலில் உள்ளது. நமது இளைஞர்கள் பலருக்கும் இந்த தயக்கம் உள்ளது. முயற்சி செய்தால் முத்திரை பதிக்கலாம். அசிஸ்டன்ட் பி.பி. வேலையை ராஜினாமா செய்து விட்டு வாருங்கள் என்று சொன்ன நண்பரே அந்தப் பதவியில் இருந்தது கண்டு மனம் நொந்து போகிறார். வாழ்க்கையில் பல துன்பங்கள் சந்தித்து உள்ளார். ஆனாலும் நேர்மையிலிருந்து சற்றும் விலகாதவர்.

திறமையாக பல வழக்குகளில் வழக்கறிஞராக வாதாடி முத்திரை பதித்து நீதியரசராகிறார். இலக்கியக் கழகத்திலும் உரை நிகழ்த்துகின்றார். நீதியரசராகி உரையாற்றும் போது மறக்காமல் கற்றுத்தந்த ஆசிரியர் அரு. சோமசுந்தரம் என்று நினைவு கூறுகின்றார். நீதியரசர் மு .கற்பக விநாயகம் அவர்கள் வழக்கறிஞர்களுக்கு இருக்க வேண்டிய திறமைகள் எவை என்பதை கல்வெட்டு போல சொல்லி உள்ளார்கள் .

ஒன்று பிரபரேசன் (PREPARATION) இரண்டு பிரசன்டேசன் ( PRESENTATION ) மூன்று பெர்சுவேசன் ( PERSUASTION )விளக்கம் தேவையில்லாத வார்த்தைகள் இவை . இந்தத் திறமைகளை வளர்த்துக் கொண்டால் வழக்கறிஞர்கள் வாழ்வில் மிளிரலாம் . நீதியரசர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கும் விளக்கம் தந்து உள்ளார்கள்.

" அவருக்கும் மூன்று உண்டு .ஒன்று ( ABSOLUTE INTEGRITY ) ,இரண்டாவது ( AVARAGE INTELLIGENCE ) மூன்றாவது ( ANXIETY TO DO JUSTICE ) அதாவது ஒரு நீதிபதிக்கு சராசரியான அறிவுக் கூர்மை இருந்தாலும் போதும் .ஆனால் சரியான நீதி வழங்க வேண்டும் என்ற பேரார்வமும் ,அதற்கும் மேலாக முழுமையான நேர்மையும் அவசியம் என்பதுதான் இந்த மூன்றின் அர்த்தம் .. இந்தத் திறமைகளை வளர்த்துக் கொண்டால் நீதியரசர்கள் வாழ்வில் மிளிரலாம் .

வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்புகள் வழங்கி நீதித்துறையின் வரலாற்றில் இடம் பெற்றுள்ள நீதியரசரின் வரலாறு மிக நன்று .சோதனைகளைச் சாதனையாக்கி உள்ளார்கள் .கலைத்துறையின் மீது விருப்பம் இருந்த போதும் சட்டத்துறை விரும்பி வர இன்முகத்துடன் ஏற்று முத்திரை பதித்து உள்ளார் . தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழியிலும் எழுத்து பேச்சு இரண்டிலும் தனி முத்திரை பதித்து வருகிறார் .நேர்மையான நீதியரசருக்கு இலக்கணமாக வாழ்ந்து வருபவர். காந்தியசிந்தனையாளர் . சராசரியாக வாழ்க்கையைத் தொடங்கி தோல்விகள், ஏமாற்றங்கள், துன்பங்கள் பல சந்தித்து உச்சம் தொட்ட வரலாறு. இந்த நூல் படிக்கும் வாசகர்களுக்கும் உத்வேகம் தருகின்றது .

நீதியரசர்கள் பலர் பாராட்டி உள்ளனர் .நூலின் இறுதியில் நீதியரசர்கள் பாராட்டிய ஆங்கில மடல்களும் உள்ளன . வரலாற்று சிறப்புமிக்க பல நல்ல தீர்ப்புகளை வழங்குகிறார். நேர்மையான நீதியரசர் என்ற பெயர் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனால் இந்த மாமனிதருக்கு கிடைத்துள்ளது. நல்ல பண்பாளர், அன்பாளர் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறும் நூல். நினைத்தது கிடைக்காவிடில் கிடைத்ததை நினை என்று வலியுறுத்தும் நூல். நீதியரசர் மு. கற்பக விநாயகத்திற்கும் நூல் ஆசிரியர் ராணிமைந்தன் அவர்களுக்கு பாராட்டுக்கள்.



அந்த பொல்லாத வரம் வேண்டாம்
அணு,அணுவாய் உன் நிலைவலைகளில்
துடித்து,துடித்து செத்த பிறகு
மீண்டும்,மீண்டும் பிறக்கும் மறு ஜென்மமெல்லாம்
வேண்டாமடி போதும் நிறுத்து
என்னால் இந்த பூமிக்கு வேண்டாம் பாரமடி!

அவள் அழகாகவோ, தேவதையாகவோ
இருக்க வேண்டிய அவசியமில்லை அன்பு
இருந்தாலே போதும் அணைத்து கொள்ளும்
ஆண் மனசு!

அக்கறையாய் விசாரிப்பு இல்லாத அன்பு
மனங்களை பெறாத வாழ்க்கை அர்த்தமற்றது!

உலவு வரும் நிலவு கூட எனைப் பார்த்து
பரிகாசம் செய்கிறது நிலவுக்கு துணையாய்
நட்சத்திரங்கள் துப்பிப் போடும் நகங்கள்
சொல்லும்–என் வெறுமையின் தனிமையை!

இரவெல்லாம் இம்சை தான் உணர்வாய்
தனிமையில்!

பாலைவனம் தான்–இந்த பாழாய் போன வாழ்க்கை

என் மனசு என்னும் புத்தகத்தினை படித்தும் கூட
ஏனடி புரியாமலே போனாய்?!



நீ புரியாமலே போனதால் வலி
மட்டுமே மிச்சம்.
மீதமிருக்கும் சொச்சக் கதையையும்
சொல்லி
உங்களை சோகப்படுத்த
விரும்பவில்லை!

லி.நௌஷாத் கான்




## "அன்றாட வாழ்வே ஆன்மீகம்"

அதிகாலை விழி திறக்கையில்
கண்ணில் விழும் வெளிச்சம்
கோவில் மணி அல்ல,
உள்ளத்தின் விழிப்பு?

அம்மா சுடும் சாதத்தின்
வாசனையில் மந்திரம் இல்லை
ஆனால் பசி தீர்க்கும்
கருணை உள்ளது
அதுவே முதல் ஜபம்!

பேருந்தில் இடம்
கொடுத்த யாரோ!
சாலையில் புன்னகைத்த
யாரோ முகம்! விலை பேசாமல்
அளந்த மனம்!
இவையெல்லாம்
வழிபாட்டின் வேறு
வடிவங்கள்!

கோபம் வந்த
தருணத்தில்
வார்த்தையை விழுங்கிக்
கொள்ளும் தைரியம்!
பழி வந்த போதும் மௌனம்
காக்கும் பொறுமை!
அங்கேதான் ஆன்மீகம்
நடந்து செல்கிறது!

கண்ணீர் துடைக்கும்
துணியில் தேவனின் சின்னம்
இல்லை! ஆனால் துடைத்த
கையில் மனிதம் இருக்கிறது!

விளக்கேற்றாத இரவுகளிலும்
நேர்மையின் தீபம் எரிந்தால்,
அன்றாட வாழ்வே
அழகான ஆலயம்.

ஆன்மீகம் என்பது
வானத்தைத் தேடுவதல்ல!



நம்மைச் சுற்றிய
மனிதர் மத்தியில்
நம்மை நாம் மனிதனாக
வைத்திருப்பதே!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



குழந்தைப் பாடல்!

## ஊஞ்சல் ஆடுவோம்!

ஊஞ்சல் ஆடுவோம் தம்பி
ஊஞ்சல் ஆடுவோம்
ஊஞ்சல் ஆடுவோம்
பாப்பா
ஊஞ்சல் ஆடுவோம்!
(ஊஞ்சல்)

சோம்பல் போகும்
சுறுசுறுப்பு ஆகும் ஊஞ்சல்
ஆடுவோம் தம்பி/பாப்பா
ஊஞ்சல் ஆடுவோம்!

உடலும் உள்ளமும்
உன்னத மாகும் ஊஞ்சல்
ஆடுவோம் தம்பி/பாப்பா
ஊஞ்சல் ஆடுவோம்!

முன்னும் பின்னும்
மேன்மையாய்ப் போகும்
ஊஞ்சல் ஆடுவோம்
தம்பி/பாப்பா
ஊஞ்சல் ஆடுவோம்!

ஆரோக்கியம் காணலாம்
அன்பையும் காணலாம்
ஊஞ்சல் ஆடலாம் தம்பி/
பாப்பா ஊஞ்சல்
ஆடலாம்!
(ஊஞ்சல்)



**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## ஹைக்கூ !

தந்தது இன்பம்
உள்ளத்திற்கும் உடலுக்கும்
கோடை மழை !

விலங்கிலிருந்து வந்த
மனிதன் விலங்காகிறான்
பாலியல் குற்றம் !

மனிதாபிமானமற்றது
மனிதனை மனிதன் சுமப்பது
பல்லக்கில் அர்ச்சகர் !

முரண்பாடு
பெருகியது
பக்தர்கள் கூட்டம்
பெருகவில்லை
நல்லவர்கள் !

நண்பன் எதிரி
நிரந்தரமன்று
அரசியல் நிரந்தரம்
பித்தலாட்டம் !

விரும்பினர் ரசிகர்கள்
ஓட்டம் நான்கு ,ஆறு
அழகிகளின் ஆட்டம் !

ரொட்டித்திருடன் சிறையில்
கோடிகள் திருடன் குளு குளு
அறையில் மக்களாட்சி !

விலை ஏற ஏற ஏறும் கவலை
பெருகும் குற்றங்கள் தங்கம் !

சங்கம் வைத்துத் தமிழ்
வளர்த்த மதுரையில்
சங்கம் இல்லா சாதி இல்லை !

நோக்கம் விபத்துத் தடுக்க
நடந்தது விபத்து
வேகத்தடை!

நம்பினோர்
கைவிடப் பட்டார்
யாத்திரை விபத்து !



**கவிஞர் இரா .இரவி !**

1.ஆறுதல் என்பது உன்
காயத்திற்கு தற்காலிக தீர்வு
மாறுதல் என்பது உன்
காயத்திற்கு நிரந்தர தீர்வு
எப்பொழுதும் ஆறுதல்
தேடாதே மாறுதல் தேடு

2. ஆண்களின் அன்பு
கணக்கில் வராத கருப்பு
பணத்தை போன்றது
எப்படி செலுத்துவது என்று
தெரியவில்லைஆனால்
அளவுக்கு அதிகமாக
சேமித்து வைத்திருப்பார்

3.நிம்மதியாக இருக்கும்
வயதில் மனைவியை
தேடுவதும் மனைவி
வந்தபின் நிம்மதியை
தேடுவதும் ஆண்களின்
வாழ்க்கை

4. கேட்பவை
எல்லாம் கிடைத்துவிட்டால்
வாழ்க்கையில் ரசனை
இருக்காது
கிடைத்தவை எல்லாம்
நிலைத்து விட்டால்
கேட்பதற்கு எதுவும்
இருக்காது

5.அதிகம் பேசாத அழகான
உறவு நடிக்கவே தெரியாத
நிஜ கதாநாயகன்
இவர் பெயர் தான் அப்பா

6.பணக்கார மகன் செலவாளி
செலவாளி மகன் கடனாளி
கடனாளி மகன் பொறுப்பாளி
பொறுப்பாளி மகன்
பணக்காரன்
இதுதான் பணத்தின்
சுழற்சி



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



ஈரக் காலடி
பதித்துப் போகிறாய்
சவால் விட்டு.
காய்வதற்குள்
அதற்கு ஒத்தாற்போல்
என் காலடியைப்
பதிக்கச் சொல்லி.
பரிசாய்த் தருவதாய்
ஆசை
காட்டுவது
கைக்கெட்டியும்
வாய்க்கெட்டா
வலம்புரி
முத்தங்கள் !



**ரிஷபன்**

## கர்ம வினை !

நிஜம் இல்லாத வாழ்வினில்
நமக்கென்ன கவலை !

சாலையில் விபத்தில் சிக்கி
கீழே விழுகிறவனை நான்
ஏன் காப்பாற்ற வேண்டும்....
யாரோ ஒருவன் மீது எனக்கு
என்ன கவலை....

பி .பாசிட்டிவ் ரத்தம்
அவசரமாய் வேண்டும் என
செல்போனில் வந்த தகவலை
டிலைட் செய்து நீக்குகிறேன்
என் வகை இரத்தமாக
இருந்தாலும் எனக்கு என்ன
கவலை !

பக்கத்தில் யாரோ ஒருவர்
வீட்டில் அடிதடி நடக்கிறது.
நான் ஏன் தடுக்க சொல்ல
வேண்டும் அவர்களைப் பற்றி
எனக்கு என்ன கவலை !

சாலையில் மார்பை பிடித்துக்
கொண்டு ஒருவன் உதவி
கேட்கிறான் அவனுக்கு
நான் ஏன் உதவி செய்ய
வேண்டும்... யாரோ
ஒருவர்மீது எனக்கு என்ன
கவலை....

அன்று... சாலையில்
வாகனத்தில் வந்த ஒருவன்
என்னை தள்ளிவிட்டு
செல்போனை பிடுங்கி
சென்றான்... தடுமாறி
விழுந்தேன் நான்... உதவி
கேட்டு கை நீட்டுகின்றேன்.
யாரும் உதவி செய்ய முன்
வருவதாய் தெரியவில்லை...
எப்படியோமருத்துவமனையில்
சேர்க்கப்பட்ட எனக்கு ரத்தம்
தேவைப்பட்டது யாரும் உதவ
முன் வரவில்லை.... 'கர்மா !
என்பது இதுதானோ
என்று
இப்போது
கவலைப்பட
ஆரம்பித்தேன்!



**எம்.பி. தினேஷ்.**
கோவை

## இரவின் வெறுமை

இரவு மெதுவாய்
இயங்குகிறது,
ஒளிகள் அணைந்து போக
மனம் மட்டும்
விழித்திருக்கிறது
யாரும் இல்லாத அறையில்!

மனதோடு விழித்திருக்கும்
நிழல்கள் வெறுமையின்
மார்பில் விழுகிறது
கடிகாரம் என்னை துரத்த,
நொடியே குத்துகின்றது

பேசாத நினைவுகள் எல்லாம்,
வரிசை கட்டி நிற்கின்றன
யாரும் இல்லாத அறையில்
என் சுவாசமே சுமையாகிறது!

சுவர்கள் என்னைப் பார்க்க,
நான் என்னையே
மறைக்கிறேன்
தனிமை பயமல்ல இரவின்
வெறுமையில்
தான்
என் உண்மை
முகம்
தெரிகிறது.



**நா.சதீஸ்குமார்**
தேவகோட்டை



## தாகம் தீர்க்கும் மதுவா?

எங்களைச் சாகடிக்கும்
நஞ்சா? அந்தி சாய்ந்தால்
ஊருக்குத் திருவிழா –
எங்கள் அடுக்களைக்கோ
அதுதான் மரண விழா!
உன் வருகைக்காகக்
காத்திருந்த கண்கள்–
இன்று உன் உருவம்
கண்டாலே அஞ்சி ஓடி
ஒளிகிறது! பூ முடித்த
கூந்தலில் – இன்று
ரத்தக் காயம் ஏன் அப்பா?
பசி முடிக்கும் தட்டில் –
இன்று வெறும் காற்று மட்டும்
ஏன் அப்பா? அம்மா விற்ற
கொலுசின் சத்தம் – உன்
புட்டியில் விழுந்து
உடையுதோ? நாங்கள் சுமக்க
வேண்டிய புத்தகப் பை –
உன் போதையில் ஏனோ
கசங்கிப் போனதோ?
நீ குடிப்பது திராட்சை
ரசமல்ல... உன் பிள்ளையின்
பால்கிண்ணத்தில் திருடிய
ரத்தம்! நீ ஆடுவது
ஆனந்த நடனமல்ல...
உன் மனைவியின்
மாங்கல்யக் கயிற்றில் ஆடும்
தூக்குக்கயிறு!
ஊரார் சிரிக்கும்
சிரிப்பொலியில் – எங்கள்
மானம் தெருவில் சிதறுதே!
உன் கல்லீரல் கருகும்
முன்னே – எங்கள்
கருணை இல்லா வாழ்வு
கருகிப்போகிறதே!
கண்ணீரில் நனைந்த
சோற்றை – இன்னும்
எத்தனை நாள் நாங்கள்
உண்பது? குப்பியில்
அடைத்த சாத்தானை
விட்டுவிட்டு – உன்
குட்டி
தேவதைகளின்
கரம் பிடிக்க
வருவாயா?



**ப.நந்தகுமார்**
காங்கேயம்



## எது தான் ரகசியம்

" சிற்பியின் கற்பனை திறனா
கைவண்ணமா
கலை நயமா ....."

கல்லின் வாகா குணமா
இலகுவான வடிவா வகையா
உள்ளடக்கமா .... "

எத்தனையோ கேள்வி
எழுகிறது செதுக்கிய
சிலையில் மட்டும் அழகு
வடிகிறது ....."

ஈர்த்து அழைக்கிறது
ஜொலிக்கிறது கண்கொள்ளா
காட்சியாக திகழ்கிறது..."

எல்லாவற்றிக்கும் மேலாக
உருவான இறைவனின்
இறைவியின்
அருள் பார்வையா ...."

உளி கொடுத்த இதமான
வலியா கலைஞனின்
ஞான ஒளியின்
எதிரொலியா ...?".

பார்த்த இடத்தில் கண்ணில்
நீர் வழிகிறது ஆனந்தக்
கண்ணீரா இறை தரும்
மருந்தா ....?"

வானவரும் வேற்று
கிரகத்தவரும்
வந்து நிழலாய்
தொடர்ந்து
நின்று
தாலாட்டி
வழிபடும்
அற்புதம்
கண்காட்சியே..."



**ஆர் . சீதாராமன்,** சீர்காழி



## தமிழர் திருநாள்

விதை விதைக்கிறவனுக்கும்
அறுப்பு காலத்தில்
அரிவாளை
பிடிக்கிறவனுக்கும்
பொங்கலோ பொங்கல்!

சூரியனுக்கும்
கால்நடைகளுக்கும்
மதிப்பளிக்கும் பொங்கலோ
பொங்கல்!

பண்பாட்டை பறைசாற்றும்
பொங்கலோ பொங்கல்!

நாட்டின் முதுகெலும்பு
விவசாயத்தை இளைய
தலைமுறைக்கு
நினைவூட்டும் பொங்கலோ
பொங்கல்!

சாதி மத பேதமின்றி
அனைவரும் கொண்டாடும்
பொங்கலோ பொங்கல்!

உழைப்பால் உலகம் காக்கும்
உழவர் கொண்டாடும்
பொங்கலோ பொங்கல்!

தை பிறந்தால் வழி பிறக்கும்
பொங்கலோ பொங்கல்!

உங்கள் இல்லங்களில்
மகிழ்ச்சி செல்வம்
பொங்கட்டும் பொங்கலோ
பொங்கல்!

இறைவனுக்கும்
இயற்கைக்கும் நன்றி கூறும்
பொங்கலோ பொங்கல்!

தமிழரின் வீரத்தையும்
பண்பாட்டையும்
போற்றும்
பொங்கலோ
பொங்கல்!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## வேண்டாதவை

அச்சமும் அழுகையும்
கூடாது ஆத்திரப் படுவதும்
கூடாது இகழ்ச்சி பேசவும்
கூடாது ஈனமான செயல்
கூடாது உழைப்பை மறுக்கக்
கூடாது ஊக்கம் இழக்கக்
கூடாது எதிலும் அலட்சியம்
கூடாது ஏமாற்றுவதும்
கூடாது ஐயம்
இரக்கக்
கூடாது
ஒழுக்கம்
தவறக் கூடாது
ஓய்ந்து
கிடப்பதும்
கூடாது
ஔடதம் பழிக்கக் கூடாது.




**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

யாருடைய மனதிலோ நாம்
ஏற்படுத்திவிடும் சிறு நிம்மதி,
என்றோ
ஒரு நாள்
பலன் தந்து
எளிதாக்குகிறது
வாழ்வை.



**கே. பி. ஜனார்த்தனன்**



மழை நீரில் நிலம்
குளிர்ந்து நம் மனதையும்
சிறியோர் பெரியோர்
என்ற பேதமில்லாமல்
குளிர்விக்கிறது ! குதித்துக்
கும்மாளமிடும் தன்
அன்பு மகனை கண்டு
அன்னை சந்தோஷத்தில்
பூரிப்படைகிறாள் !
அப்பாடா இந்த வருடம்
மாரி பொய்க்கவில்லை !
தண்ணீர் கஷ்டம் இருக்காது
என்ற சந்தோஷக்களிப்பு
வேறு அன்னையின்
முகத்தில் !

**உமா வெங்கடேசன்**



## மனிதநேயப் பொங்கலிடு!

தை மகளின் வரவு – நல்
தமிழர் பண்பாட்டின் உறவு!
புத்தரிசி பொங்கலிட்டு
புத்தாடை அணிந்து
மண்ணின் மணம் கமழ
பாடுகின்ற நாளிது!
உழைப்போரின் உளம் மகிழ
உன்னத இயற்கையின்
இறையருள் நாளிது!
பொங்கலிடு பொங்கலிடு !
புதிய வாழ்வின் பூமணக்கும்
பொங்கலிடு!
மனிதநேயமுடன்
பொங்கட்டும்!
தமிழர்தம் வாழ்வு
உலகளவில்
தழைக்கட்டும்!
பொங்கலிடு பொங்கலிடு !
மனிதநேயப் பொங்கலிடு!
தமிழ்ப் புத்தாண்டின் வரவு
கண்டு தமிழ் கூறும் நல்லுலகு
செழிக்க பொங்கலிடு!
பொங்கலிடு பொங்கலிடு !
மனிதநேயப் பொங்கலிடு!

**கா.ந.கல்யாணசுந்தரம்.**



## ஜல்லிக்கட்டு !

அவனியாபுரம்... பாலமேடு....
அலங்காநல்லூர்...
என வாடிவாசலில் அவிழ்த்து
விடப்படும் கொம்பு வைத்த
சிங்கங்களான ஜல்லிக்கட்டு
காளைகளுக்கும்
காளையர்களும்
மல்லு கட்டி மோதும்
விளையாட்டே ஜல்லிக்கட்டு !

அன்று கன்னியரை
கரம் பிடிக்க ' ஏறு தழுவிய '
காளையர்க்கு இன்று
ஜல்லிக்கட்டில்கிடைக்கின்றன
பம்பர் பரிசுகள் !

மீசை வைத்த காளையர்க்கு,
காளைகளின் திமிலை
பிடித்து அடக்குவதில் தான்
எவ்வளவு ஆவேசம், தன்
உயிர் போனாலும் வீரத்தை
நிலைநாட்ட முயற்சிக்கும்,
காளையர்களையும்,
காளைகளையும்
வாழ்த்துவோம் !

**எம்.பி.தினேஷ்.**கோவை



## சமத்துவ பொங்கல்

ஆதவனை வணங்கும்
அறுவடை திருநாளில்
புது அரிசி
புது வெல்லம்



பழைய கதையாகி
விலையில்லா
அரிசி வெல்லம் என
கொண்டாடும்
பொங்கலே
சமத்துவ பொங்கல்

**ராஜகோபாலன் J**
பெங்களூரு



## இனவெழுச்சிப் பொங்கல் பொங்குவோம்.!

கும்மியடித்தே..
குலவைகளிட்டே..
கொட்டுங்கடி கும்மி
கொட்டுங்கடி.!
நம்மைப் பிடித்த..
துன்பங்கள் போயின..
தைப் பிறந்ததெனக்
கும்மியடி.!

எங்களினம் தமிழ்ப் பொங்கு
மினமென.. இங்கு வந்துப்
பெண்கள் கும்மியடி!
சங்கத் தமிழ்த் தந்த
மன்றத்திலே இன்று.. எங்கும்
முழங்கிடக் கும்மியடி.!

தூங்கிக் கிடப்பதோ.?
ஏங்கித் தவிப்பதோ..?
துள்ளி வந்தோமெனக்
கும்மியடி.!
தேங்கிக் கிடக்கிற..
நீர்நிலை அல்லவே..
கொட்டும் அருவி நாம்
கும்மியடி.!
ஆண்ட இனம் இன்று..
அடிமைப் படுவதோ..?
ஆர்த் தெழுந்தோமென்று
கும்மியடி.!
இந்தப் பொங்கலிலே..
ஒன்று பட்டோமென்று
இனவெழுச்சிப் பொங்கக்
கும்மியடி.!

கட்டு கரையில்லை..
கொட்டும் மழையென..
ஒட்டிவந்தே நின்றுக்
கும்மியடி.!
எட்டி நட இன்றே..
எங்கள் தமிழினம்..
எங்கள் தமிழினம்.. என்றுப்
பெருமிதக் கும்மியடி.!
முட்டுகின்ற காளை..
வாடி வாசல் மீறி.. பாய்ந்து
வந்ததென்றுக் கும்மியடி!
ஒற்றுமையாய் நின்று.. எங்கள்
தமிழ்க்கொடி.. பட்டொளி
வீசிடக் கும்மியடி.!

**வே.கல்யாண்குமார்.**







உடன்குடியில்
ஸ்ரீவேல்முருகன்
டெக்ஸ்டைல்ஸ்
ஜவுளி, நகைக்கடையில்
வேலைக்கு ஆண்கள்,
பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.
Ph: 81442 27771







ஆட்கள் தேவை
1.Supervisor
with any post graduate degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்
தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
Cell : 6382807831







தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில் உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)
8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும், முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்
படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி செய்து தரப்படும்
98949 99422
99941 34169
81109 77577







ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005
support@enthunai.com
7789941009


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹ 999 ONLY


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots
PlayGroup
Nursery
EuroJunior
EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com



தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com



# பல்சுவை களஞ்சியம்




## கருப்பு உளுந்து

உங்களில் எத்தனை பேர் கருப்பு உளுந்து அடிக்கடி சமையலில் பயன்படுத்துகிறீர்கள்

பயன்படுத்துவது இல்லை என்றால் இந்த கருப்பு உளுந்து சட்னி அடிக்கடி செய்யவும்

தேவையான பொருட்கள்

ஐம்பது கிராம் கருப்பு உளுந்து
இரண்டு தக்காளி பழம்
மூணு வர மிளகாய்
ஆறு பல் பூண்டு
கறிவேப்பிலை சிறிதளவு
தேங்காய் துருவல் இரண்டு ஸ்பூன்
எண்ணெய்
உப்பு
பெருங்காயம்
கடுகு



செய்முறை

கடாயில் சிறிதளவு எண்ணெய் சேர்த்து கருப்பு உளுந்து சேர்த்து ஐந்து நிமிடம் வறுத்துக் கொள்ளவும்

கருப்பு உளுந்து வறுத்தவுடன் பூண்டு கருவேப்பிலை தக்காளி பழம் சேர்த்து தக்காளி பழம் மசியும் வரை வதக்கிக் கொள்ளவும்

தக்காளி பழம் வதங்கிய பின் தேங்காய் துருவல் தேவையான அளவு உப்பு சேர்த்து வதக்கிக்

இரண்டு நிமிடம் வதக்கி ஆறவிடவும்

ஆறியபின் மிக்ஸி ஜாரில் சேர்த்து நைசாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்

தாளிப்பதற்கு கடாயில் எண்ணெய் கடுகு பெருங்காயம் கருவேப்பிலை சேர்த்து தாளித்து கருப்பு சட்னியில் சேர்த்தால் கருப்ப வந்து சட்னி தயார்

**ரேணுகா நாராயணன்**
மாம்பாக்கம் சென்னை
செங்கல்பட்டு மாவட்டம்

## பருப்பும் புளியும் இல்லாமல் சாம்பாரா?



ஆம். முருங்கைக்காய், கேரட், முள்ளங்கி, குடைமிளகாய், கத்தரிக்காய், பரங்கிக்காய், சின்னவெங்காயம் இதுபோன்ற எந்தக் காய் போட்டு சாம்பார் செய்தாலும் சரி, எல்லா காய்களும் போட்டு கதம்ப சாம்பார் வைப்பதானாலும் சரி மிகவும் சுலபமாக செய்யலாம் வாங்க.

ஒரு பாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, பெருங்காயம், வாசனைக்கு இரண்டு மிளகாய் வற்றல், கறிவேப்பிலை தாளித்து அதில் காய்கறிகளை போட்டு ஒரு முறை கலந்து கொடுங்கள். இதில் வெங்காயம், பூண்டு மற்றும் தக்காளி உங்கள் விருப்பம் போல சேர்த்துக் கொள்ளலாம்.

காய்கறிகள் மூழ்கும் அளவிற்கு மேல் தண்ணீர் ஊற்றி, சாம்பார் தூள், உப்பு, பெருங்காயம் போட்டு நன்கு கலந்து கொடுத்து வேகவைக்கவும்.

அவ்வப்போது அடிப்பிடிக்காமல் கொஞ்சம் தண்ணீர் சேர்க்கலாம்.

ஒரு மிக்ஸி ஜாரில் ஒரு பத்தை பரங்கிக்காயை துண்டுகளாக்கி சேர்க்கவும். இதனுடனேயே ஒரு மாங்காயை துண்டுகளாக்கி சேர்க்கவும். ஒரு பழுத்த தக்காளியை விதை பகுதியில் காணப்படும் வெள்ளை பகுதியை எடுத்துவிட்டு சேர்க்கவும்.

இதனை ரொம்ப பேஸ்டாக இல்லாமல் அரைத்தெடுக்கவும்.

அரைத்த விழுதை கொதிக்கும் குழம்பில் மிக்ஸி ஜாரை அலம்பிய தண்ணீருடன் சேரத்துக் கரைத்து கொஞ்சம் கொஞ்சமாக சேர்க்கவும். ஒரு இரண்டு மூன்று நிமிடம் கொதித்த பின் இறக்கவும்.

சாம்பாரின் பதம் பார்த்துக் கொள்ளுங்கள். ரொம்ப கெட்டியாக இருந்தால் சிறிது தண்ணீர் சேர்க்கவும். தற்போது மணமும் ருசியும் நிறைந்த பருப்பும் புளியும் இல்லாத சாம்பார் ரெடி.

இட்லி, தோசை, பொங்கல், உப்புமா, சப்பாத்தி பூரி அனைத்திற்கும் ஏற்ற சைடு டிஷ் இது. சாதத்தில் பிசைந்து சாப்பிடும்போது அமிர்தமாக இருக்கும். நீங்களும் செஞ்சு அசத்துங்க.



**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

# மீம்ஸ்


எந்த விரல் மூலம் விபூதி பூசவேண்டும்

விபூதியை எந்த விரல்களில் பூச வேண்டும், எந்த விரல்களில் பூசக்கூடாது. அவ்வாறு விரல்களின் மூலம் பூசினால் என்ன பலன் என்பதையும் நமது முன்னோர்கள் அழகாக கூறியுள்ளனர்.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன் படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பி ட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

கட்டை விரல்: கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

ஆள் காட்டி விரல்: ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட் கள் நாசம்.

நடுவிரல்: நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தா ல் நிம்மதியின்மை.

மோதிர விரல்: மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

சுண்டு விரல்: சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் ஏற்படும்.

மோதிர விரல் கட்டை விரல்

மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொணடால் உலகமே வசப்படும். எடுக்கும் முயற்சி வெற்றி பெரும்.






# விடுகதை

| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



# ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்
பெண்: இலையை மடிக்க வேண்டாம்.
விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?
பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?
விருந்தினர்: ???

---

எதிர்பதம்
Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me

---

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"
"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"



---

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"
காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"
காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

---

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ லவ் யூ' சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"
கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

---

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"
பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

---

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .
பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"
பெண் : "ஊஹூம். . ."
பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?
பெண் : ஊஹூம். . .
பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"
பெண் : ?!?!?!



# சமையல் அறை ஸ்பெஷல்





## புரதச் சத்து நிறைந்த மல்டி கிரைன் சுண்டல்



| | |
|---|---|
| பச்சைப் பயறு | கால் கப் |
| காராமணி | கால் கப் |
| கொண்டைக்கடலை | கால் கப் |
| பட்டாணி | கால் கப் |
| கொள்ளு | கால் கப் |
| வேர்க்கடலை | கால் கப் |
| உப்பு | தேவையானது |
| தனியா | ரெண்டு ஸ்பூன் |
| கடலைப்பருப்பு | ஒரு ஸ்பூன் |
| மிளகாய் | ரெண்டு |
| பெருங்காயம் | சிறு துண்டு |
| கொத்தமல்லி | சிறிது |
| தேங்காய் துருவல் | சிறிது |

பயிறு வகைகள் அனைத்தையும் களைந்து தனித் தனியாக முளை கட்டவும். முளை வந்த பருப்புகளை சேர்த்து உப்பு போட்டு குக்கரில் இரண்டு விசில் விட்டு எடுக்கவும்.

வாணலியில் தனியா, கடலைப்பருப்பு, மிளகாய், பெருங்காயத் துண்டு ஆகியவற்றை வறுத்து சிறிது ஆறியதும் கரகரப்பாக பொடித்து வைக்கவும்.

வாணலியில் கடுகு, கருவேப்பிலை தாளித்து வெந்த பயறு வகையை நீரை வடித்து சேர்த்து கிளறவும். அத்துடன் பொடித்து வைத்துள்ள தனியா பொடியையும் சேர்த்து நன்கு கலந்து தேங்காய் துருவல் பொடியா நறுக்கிய கொத்தமல்லி கலந்து விட சத்தான சுண்டல் தயார்.

**பச்சைப்பயிறு இனிப்பு சுண்டல்:**

| | |
|---|---|
| பச்சைபயிறு | 200 கிராம் |
| வெல்லம் | 150 கிராம் |
| ஏலக்காய் | 4 |
| தேங்காய் | துருவல் அரை கப் |
| உப்பு | ஒரு சிட்டிகை |

பச்சை பயறை இருமுறை நன்கு கழுவி முங்கும் அளவு தண்ணீர் விட்டு குக்கரில் நான்கு விசில் விட்டு எடுக்கவும். வெல்லத்தை பொடித்து வாணலியில் அரை கப் தண்ணீர் விட்டு வெல்லத்தையும் சேர்த்து வெல்லம் கரைந்ததும் வடிகட்டி திரும்பவும் வாணலியில் விட்டு கொதிக்க விடவும். ஏலக்காயை பொடித்து வைக்கவும்.

வெந்த பச்சை பயறை சிறிது கரண்டியால் மசித்துக்கொண்டு வெல்லக் கரைசலில் சேர்த்து கலந்து கிளறவும்.

அடுப்பை நிதானமான தீயில் வைத்து கிளறவும். நன்கு சேர்ந்து வரும்போது பொடித்த ஏலக்காய், தேங்காய் துருவல் சேர்த்து இறக்க ருசியான பச்சை பயறு இனிப்பு சுண்டல் ரெடி.

## சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற சத்தான உணவு: மூக்குத்தி அவரை பொரியல்!



காம்பு கத்தரி, மூக்குத்தி அவரை எனப்படும் ஒரு வகை கொடி காய்கறியில், பச்சை மூக்குத்தி, சிவப்பு மூக்குத்தி எனமொத்தம் இரண்டு வகை உள்ளது.

இது கிராமப் புறங்களில் தானாகவே முளைக்கும் காய்கறியாகும். நமது பாரம்பரிய காய்கறிகளில் ஒன்றான இந்த மூக்குத்தி அவரையை காலப்போக்கில் மக்கள் பயன்படுத்துவதை குறைத்துக் கொண்டதால், இதைப்பற்றி பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை.

ஆனால், தற்போது அதன் மகத்துவத்தை மீண்டும் உணர்ந்த மக்கள் தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர். மூக்குத்தி அவரையில் ஏகப்பட்ட மருத்துவகுணங்கள் உள்ளது. குறிப்பாக நமது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் அற்புத சக்தி இதற்கு உண்டு. இந்த பதிவில் மூக்குத்தி அவரையை பயன்படுத்தி பொரியல் எப்படி செய்வது என்பது பற்றி பார்க்கலாம்.

தேவையான பொருட்கள்

மூக்குத்தி அவரை - 1 கப்.
சின்ன வெங்காயம் - 15.
பச்சை மிளகாய் - 2.
சீரகத்தூள் - ½ டீஸ்பூன்.
தேங்காய் - துருவியது சிறிதளவு.
எண்ணெய் - தேவையான அளவு.
உப்பு - சிறிதளவு.
கடுகு - ½ டீஸ்பூன்.
உளுந்து - ½ டீஸ்பூன்.
மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன்.
கருவேப்பிலை - சிறிதளவு.

**செய்முறை:**

முதலில் மூக்குத்தி அவரைக்காயை தண்ணீரில் நன்றாக கழுவிக்கொள்ளவும். பின்னர் அதை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் சிறிய கடாய் வைத்து தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும் உளுந்து, கடுகு, கருவேப்பிலை சேர்த்து வதக்கவும். பின்னர் அதில் நறுக்கி வைத்த வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதங்கியதும், அதில் பொடியாக நறுக்கிய மூக்குத்தி அவரைக்காய் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து கிளறவும். அதன் பிறகு மஞ்சள் தூள், சீரகத்தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகக் கிளறவும். இறுதியில் மூக்குத்தி அவரை நன்றாக வெந்ததும், அதில் துருவி வைத்துள்ள தேங்காயை தூவி மெதுவாக கிளறி அடுப்பை அணைத்தால் மூக்குத்தி அவரை பொரியல் ரெடி.

## அடுப்பங்கரை டிப்ஸ்: சமையல் வல்லுநர்கள் போல் மிளிரலாம்!



ஊறுகாய் வகைகளை மரக்கரண்டியால் எடுத்து உபயோகிக்க நீண்ட நாள் கெடாமல் இருப்பதுபோல் உப்பிற்கும் மரக்கரண்டி அல்லது பீங்கான் கரண்டி உபயோகிக்க துருப்பிடிக்காமல் நீண்ட நாள் அப்படியே இருக்கும்.

சிகப்பு மிளகாய் தாளிக்க மிளகாயை இரண்டாக வெட்டி டப்பாவில் வைத்துக்கொள்ள தாளிக்கும்போது சுலபமாக இருக்கும்.

வாழைக்காய், வாழைப்பூ நறுக்கும்போது கையிலும், கட்டிங் போர்டிலும் எண்ணெய் தடவிக்கொண்டு பின் நறுக்க கறை ஏற்படாது.

சமையலின்போது பயன்படுத்தும் கரண்டி, ஸ்பூன்களை அப்படியே பரிமாற உபயோகிக்காமல் கழுவிய பின் உபயோகிக்க பார்க்க நீட்டாக இருக்கும்.

கேசரி, அல்வா போன்றவற்றை பரிமாறும்போது குழி கரண்டியில் உள்பக்கம் எண்ணெய் அல்லது நெய் தடவிக்கொண்டு பின் எடுத்து பரிமாற அழகாக குழியாக வரும்.

பாத்திரங்களை சூடாக இருக்கும்போது கழுவாதீர்கள். பாத்திரத்தின் வடிவம் மாறிவிடும். சற்று சூடு ஆறியதும் கழுவ வடிவம், நான்ஸ்டிக் எனில் கோட்டிங் மாறாமல் இருக்கும்.

பாத்திரம் துலக்க தரமான வாசிங்பவுடர், லிக்விடை உபயோகிக்க கை சொரசொரப்பு, கீறல் இல்லாமல் நன்றாக இருக்கும்.

வரும் பண்டிகை சீசனில் இனிப்பு செய்வோம். அதற்கு வெல்லப்பாகு, சர்க்கரை பாகு தேவைப்படும். ஒரு கம்பி பதத்தில் சர்க்கரை, வெல்லப்பாகை செய்து ஃப்ரிட்ஜில் வைத்துகொள்ள சட்டென செய்ய சுலபமாக இருக்கும்.
சர்க்கரை கேரமல் செய்து வைத்துக்கொண்டு பாயஸம், புட்டிங் போன்றவை செய்ய கலரும், சுவையும் நன்றாக இருக்கும்.

நட்ஸ், வறுத்த கடலை, முளைவிட்ட பயறு வகைகளை சமைக்கும் போதே இல்லத்தரசிகள் சாப்பிட்டுக்கொள்ள சத்து சேருவதோடு, அசிடிட்டி பிரச்னைகள் வராது.

சுண்டல் வகைகளை அப்படியே தாளித்து வைக்காமல், முதல் நாள் ஊறி, முளைகட்டிய பயறு வகைகளாக செய்ய சுவையோடு சத்தும் சேரும்.
புட்டும் வழக்கமான அரிசிமாவில் செய்யாமல் பருப்பு வகைகளில் செய்வதோடு சிறுதானிய மாவு, சிறுதானிய வரையில் செய்ய சுவையோடு சத்தும் சேரும்.

பருப்பு பாயசம் வைக்கும்போது பருப்பை வறுத்துவிட்டு ரவையாக்கி இரண்டாம் பாலில் வேகவிட்டு வெந்ததும், மில்க் மெய்ட், வறுத்த நட்ஸ், தேவையெனில் வெல்லம், ஏலத்தூள், நெய்யில் வறுத்த தேங்காய் துண்டுகள் சேர்த்து கலந்து இறக்க ரிச்சான பருப்பு பாயசம் சுவையாக இருக்கும்.

இனிப்பு பலகாரங்கள் செய்யும்போது சுக்கு, ஜாதிக்காய் ஏலக்காய் கிராம்பு சேர்த்து பொடி செய்து சேர்த்துக் கொள்ள சுவை அதிகரிக்கும்.

## ஆவியில் வேகவைத்த வாழைப்பூ வடை!



**தேவையான பொருட்கள்:**

சிறிய வாழைப் பூ - ஒன்று
பெரிய வெங்காயம் - ஒன்று
பச்சை மிளகாய்- 5
சோம்பு - அரை ஸ்பூன்
பட்டாணிப் பருப்பு - 200 கிராம்
உப்பு தேவையான அளவு
கருவேப்பிலை, மல்லித்தழை சிறிதளவு


**செய்முறை:**

பட்டாணிப் பருப்பை கழுவி விட்டு, 2 மணி நேரங்களுக்கு நீரில் ஊறவைக்கவும். வாழைப்பூவை சுத்தம் செய்து நரம்பு, மற்றும் வெள்ளையாக இருக்கும் களைகளை நீக்கி பொடியாக அரிந்து மோர் கலந்த நீரில் போடவும். பட்டாணி பருப்பை மிக்ஸி ஜாரில் போட்டு, சிறிதளவு உப்பு, சோம்பையும் சேர்த்து கொரகொரப்பாக அரைத்து எடுக்கவும். வாழைப்பூவை நீரின்றி பிழிந்துவிட்டு பருப்புடன் போட்டு ஒரே ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும். பச்சை மிளகாயையும் பொடியாக அரிந்து, கருவேப்பிலை கொத்தமல்லி தலையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இவை அனைத்தையும் அரைத்த மாவில் கலந்து கொள்ளவும். துளி பெருங்காயம் சேர்த்துக் கொள்ளவும்.
இவற்றை வடைகளாக தட்டி இட்லிப் பானைத் தட்டுகளில் லேசாக எண்ணெய் ஊற்றி அதன் மேல் இந்த வடைகளை வைக்க வேண்டும். 15 நிமிடம் ஆவியில் வேகவைத்து எடுத்தால் மிகச்சுவையான வாழைப்பூ வடை ரெடி. ஆவியில் வேக வைப்பதனால் இதன் சத்து அப்படியே நமக்கு கிடைக்கும். ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள் என யார் வேண்டுமானாலும் இதை விரும்பி சாப்பிடலாம்.

### உங்கள் வீட்டு சமையல் அறையில் இதை மட்டும் செய்யுங்கள்..

## உணவுப்பஞ்சம் வராது

நாம் உண்ணும் உணவு ருசியோடு இருப்பதோடு ஆரோக்கியத்தை தருவதாகவும் இருக்க வேண்டும். எத்தனையோ நாடுகளில் ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் வறுமையில் வாடுகிறார்கள். இந்தியாவில் இலவச அரிசி, கோதுமை உள்ளிட்ட பல திட்டங்களாலும் பள்ளிகளில் வழங்கப்படும் இலவச உணவுகளாலும் பலரும் பசியாறுகின்றனர். நம்முடைய வீட்டில் உணவு பஞ்சம் வராமல் இருக்க குறைவில்லாமல் பொருட்கள் இருக்க என்ன செய்ய வேண்டும் எனறு பார்க்கலாம்.



**சமையல் அறை வாஸ்து:** நம்முடைய வீட்டில் எத்தனையோ அறைகள் இருந்தாலும் சமையல் அறை முக்கியமானது. அங்குதான் நம்முடைய எல்லோருடைய ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகிறது. அம்மாவின் கை பக்குவ ருசியை மட்டும் கொடுப்பதில்லை நம்முடைய ஆரோக்கியத்தையும் நிர்ணயம் செய்கிறது. பொதுவாக வீடுகளில் வாஸ்து படி சமையல் அறை அக்னி மூலை எனப்படும் தென்கிழக்கு மூலையில்தான் இருக்க வேண்டும் அதுதான் சிறப்பானது.

**கிச்சன் மேடை:** கேஸ் ஸ்டவ் அல்லது அடுப்பு வைக்கும் மேடை தென்கிழக்கு மூலையில் தெற்கு கிழக்கு சுவரை ஒட்டி அமைக்க வேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் சமையல் அறைக்குள் வரும் வகையில் ஜன்னல் அமைப்பது சிறப்பானது. சமைப்பவர் கிழக்கு நோக்கியே சமைக்க வேண்டும். சமையலறையில் பாத்திரம் கழுவும் குழாய் வடகிழக்கில் அமைப்பது நல்லது. வடகிழக்கு மூலை மட்டுமே தண்ணீர் குழாய் அமைக்க நல்ல இடம் இல்லாவிட்டால் பெண்களுக்கு ஆரோக்கிய குறைபாடு ஏற்படும்.

**சரியான திசை:** எந்த திசையில் சமையல் அறை வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது போல எந்த திசையில் சமையல் அறை கண்டிப்பாக இருக்கக்கூடாது என்றும் வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. வடகிழக்கில் சமையலறை வைத்தால் குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கும். வடகிழக்கு எனப்படும் ஈசான்ய மூலையில் சமையல் அறை வரவே கூடாது. இது தண்ணீருக்கு மட்டும் ஏற்ற இடம். இங்கே அக்னி வைக்க கூடாது. சமையலறை இருப்பது தோஷத்தை கொடுக்கும். குடும்பத்தலைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அக்னியில் தண்ணீர் எப்படி கொதிக்குமோ அதுபோல இங்கே சமையலறை அமைத்துவிட்டால் அந்த குடும்பத்தின் பொருளாதார நிலையில் பாதிப்பு ஏற்படும்.


**உடல் நல பாதிப்பு:** தென்மேற்கு எனப்படும் கன்னி மூலையில் சமையலறை வைக்கவே கூடாது. உடல் நல பாதிப்பு வரும். துஷ்ட சக்திகளால் பாதிப்பு வரும் கடன் பிரச்சினை திருமண தடை, திருமண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படும். அதே போல மேற்கு சமையலறையும் வரவு செலவு சரியாக போகும். நண்பர்கள் கூட விரோதிகளாவார்கள். நல்ல வாய்ப்புகள் கூட தட்டிப்போகும். தென்கிழக்கு பகுதிக்கு எதிர் மூலையான வடமேற்கு வாயுமூலலை பகுதியில் சமையல் அறை வைக்கலாம் ஆனால் அவ்வப்போது லேசாக உடல் நல பாதிப்பு ஏற்படும். தொழில் முன்னேற்றம் வரும் வாஸ்துபடி கட்டிடம் அமைந்தால் தோஷம் வர வாய்ப்பு இல்லை.

சமையலறையில் இதை மட்டும் வைக்காதீங்க..கிச்சனில் இந்த பொருள் இருந்தாலே வீட்டில் பணக்கஷ்டம் வந்துருமாம்

**வாஸ்து தோஷம் நீங்க:** வீட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு பகுதிக்கு சமையலறையை மாற்ற இயலாத பட்சத்தில், இருக்கிற சமையலறைக்குள் சின்ன சின்ன மாற்றங்களை செய்யலாம். குறிப்பாக அடுப்பு மேடை கிழக்கு நோக்கி தென்கிழக்கு மூலையில் இருக்க வேண்டும். தவறான சமையல் அறை அமைப்பில் குடியிருப்பவர்கள் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுக்கலாம். குடும்பத்தில் வறுமை ஏற்படாது. இரவு நேரத்தில் உணவு கொஞ்சமாவது வைக்க வேண்டும்.

**உப்பு பாத்திரம்:** நம்முடைய உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் உப்பு மகாலட்சுமியின் அம்சம் நிறைந்தது. அந்த உப்பினை நாம் தினமும் கைகளால் எடுத்துதான் வணங்கி விட்டு சமையலுக்கு போட வேண்டும். அந்த உப்பினை நாம் சரியான இடத்தில் வைக்க வேண்டும். அப்போதுதான் உணவுப்பொருட்கள் நம்முடைய வீட்டில் குறைவில்லாமல் இருக்கும். பொதுவாக சமையல் அறையில் உப்பு போட்டு வைக்கும் பாத்திரத்தை மேலே செல்பில் வைக்கவே கூடாது. சமையல் செய்யும் மேடைக்கு கீழே குனிந்து எடுக்கும் வகையிலோ, கைக்கு எட்டும் இடத்திலோதான் வலது கை பக்கத்தில்தான் உப்பு வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் கல் உப்பு வாங்கி கொட்டி வைப்பது செல்வ வளத்தை அதிகரிக்கும்.

**அன்னபூரணி:** நம்முடைய உணவில் ருசி கூடவும் ஆரோக்கியம் அதிகரிக்கவும் நாம் அன்னபூரணி தாயாரின் படத்தை சமையல் அறையில் மாட்டி வைப்பது சிறப்பானது. இதன் மூலம் வாஸ்து தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். காசி அன்னபூரணி உலகிற்கே உணவு கொடுப்பவள் எனவே நாம் அன்னபூரணியின் படத்தினை மாட்டி வைப்பதன் மூலம் உணவு தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். செல்வ செழிப்பு அதிகரிக்கும். எதையும் நம்பிக்கையோடு செய்தால் நல்லவை தேடி வரும்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No
8122664699

## பொங்கல் விழா கொண்டாடிய மாணவிகள்



காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நேற்று பொங்கல் விழா கொண்டாடிய மாணவிகள்.

## சமத்துவ பொங்கல் விழா



நாகை அருகே உள்ள அழிஞ்சமங்கலம் அரசு ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

## கும்மியடித்து போராட்டம்



தூத்துக்குடி கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் கும்மியடித்து போராட்டம் நடத்தினர்.

## இருசக்கர வாகன பேரணி



தென்காசியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை கலெக்டர் கமல் கிஷோர் தொடங்கிவைத்தார்.

## கிரிக்கெட் போட்டியில் வெற்றி



கோவை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய போட்டியில் ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அணி வெற்றி பெற்றது.

## ரவுசு மணி

வசதியான வாழ்க்கை தவறல்ல வசதிதான் வாழ்க்கை என்பது தான் தவறு



ராஜகோபாலன்.J சென்னை 18

## பொங்கல் விழா



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில், நேற்று கே.கே.நகர் பகுதியில் நடந்த தைத்திருநாள் பொங்கல் விழாவில் கனிமொழி எம்.பி., கலந்து கொண்டார். தமிழச்சி எம்பி., தனசேகரன் எம்சி உடன் உள்ளனர்.

## சமத்துவ பொங்கல் விழா



சோளிங்கர் அடுத்த கரடிகுப்பத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமத்துவ பொங்கல் விழா நேற்று நடந்தது

## பள்ளியில் பொங்கல் விழா



கோவை சச்சிதானந்தஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியில் பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

## அமைச்சர் ரகுபதி மாட்டு வண்டி ஓட்டினார்



புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நடந்த திராவிட பொங்கல் விழாவை அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்து மாட்டு வண்டி ஓட்டினார்.

## கோலப் போட்டி



திருமயம் சட்டமன்றத் தொகுதி அரிமளம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கோலப் போட்டியை அமைச்சர் ரகுபதி பார்வையிட்டு, பரிசு வழங்கினார்.

## சமத்துவப் பொங்கல்



குன்னத்தில் நேற்று நடந்த 'சமத்துவப் பொங்கல்' விழாவை திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து அமைச்சர் சிவசங்கர் கொண்டாடினார்.

## கோலப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



சென்னை தியாகராயநகரில் நடந்த கோலப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் பரிசு வழங்கினார்.

## வீடு வீடாக சென்று பிரசாரம்



அதிமுக வேட்பாளர் பட்டியல் வெளியாகாத நிலையில், கரூரில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் நேற்று முதல் வீடு வீடாக சென்று பிரசாரத்தை துவக்கினார்.

## அங்காளம்மன் கோவிலில் குத்து விளக்கு பூஜை



வேடசந்தூர் - காளணம்பட்டி பகுதியில் உள்ள அங்காளம்மன் கோவிலில் நேற்று குத்து விளக்கு பூஜையில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.

## ஆலோசனை



பிரதமர் மோடி தமிழகம் வருவதை முன்னிட்டு மதுரையில் கூட்டணி கட்சித் தலைவர்கள், அதிமுக மாவட்டச் செயலாளர்கள், பாஜக முக்கிய நிர்வாகிகளுடன் மாநில பாஜகதலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

## மகளிர் உரிமை மீட்புப் பயணம்




செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற, தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணத்தில் சவுமியா அன்புமணி பேசினார்.

## தமிழக சட்டசபைத் தேர்தலில் பாமக சார்பில் போட்டியிட விருப்ப மனு



தமிழக சட்டசபைத் தேர்தலில் பாமக சார்பில் போட்டியிட விரும்புவோர் தைலாபுரத்தில் கட்சியின் நிறுவனர் ராமதாசிடம் விருப்ப மனு அளித்தனர்.

## கயிறு இழுக்கும் போட்டி



மருத்துவர் அய்யா அறக்கட்டளையின் சார்பில் சரஸ்வதி சட்டக் கல்லூரியில் நடந்த பொங்கல் விழா கயிறு இழுக்கும் போட்டியில் ஜிகே மணி எம்எல்ஏ பங்கேற்றார்.

## கல்லூரியில் பொங்கல் விழா



சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில் நுட்ப கல்லூரியில் நடந்த பொங்கல் விழாவில் ஜிகே மணி எம்எல்ஏ பங்கேற்றார்.

## போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பை



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் நடந்த திராவிட பொங்கல் - மாபெரும் விளையாட்டு விழாவில் இறுதி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கீதா ஜீவன் பரிசு கோப்பை மற்றும் பரிசுத்தொகையினை வழங்கினார்.

## சமத்துவ பொங்கல் விழா



திருச்சியில் காங்கிரஸ் சார்பில் நேற்று சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

## திராவிட பொங்கல் விழா



திராவிடர் கழக மகளிரணி சார்பில், நெய்வேலி ஆர்ச் கேட் எதிரில் வடக்குத்து அண்ணா கிராமம் பெரியார் படிப்பக வளாகத்தில் திராவிட பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

## பூசாரிகளுக்கு புத்தாடைகள்



திருவண்ணாமலை மாவட்டத்தில் 1079 அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் திட்டத்தை துணை சபாநாயகர் பிச்சாண்டி நேற்று தொடங்கிவைத்தார்.

## திருக்குறள் புத்தகத்தினை வழங்கி, வாழ்த்து



நீலகிரி மாவட்டத்தில், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில், நடைபெற்ற எழுத்து தேர்வில் , தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு திருக்குறள் புத்தகத்தினை கலெக்டர் லட்சுமி பவ்யா வழங்கி, வாழ்த்து தெரிவித்தார்.

## பணிநியமன ஆணை



தஞ்சையில் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு கலெக்டர் பிரியங்கா பங்கஜம், பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

## பயனாளிகளுக்கு உதவி



பெரம்பலூரில் நேற்று கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் அரசு மானியத்துடன் 3 பயனாளிகளுக்கு ரூ.77,808 மதிப்பிலான நலதிட்ட உதவிகளை கலெக்டர் மிருணாளினி வழங்கினார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### அஞ்சல் துறையில் வேலைவாய்ப்பு அறிவிப்பு மொத்தம் 30,000 பணியிடங்கள் ..!

இந்திய அஞ்சல் துறையில் வேலைவாய்ப்புக்காக முக்கிய அறிவிப்பு வெளியாகி உள்ளது. 2026 ஜனவரி மாதம் 15ம் தேதி அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இதில் கிராம அஞ்சல் பணியாளர்கள், கிளை போஸ்ட் மாஸ்டர் உள்ளிட்ட பதவிகள் நிரப்பப்படுகிறது.இதில் மொத்தம் 30,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கிராம அஞ்சல் பணியாளர்களுக்கான (GDS) அறிவிப்பும் வெளியாகி உள்ளது. அதாவது, கிளை போஸ்ட் மாஸ்டர் (BPM), உதவிக் கிளை போஸ்ட் மாஸ்ர் (ABPM), அஞ்சல் பணியாளர் ஆகிய பணிகளுக்கு ஆட்கள் நிரப்பப்படுகிறது.

வயது வரம்பு: குறைந்தபட்ச வயது - 18 (விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளன்று பூர்த்தியடைத்திருக்க வேண்டும்)

அதிகபட்ச வயது - 40 (விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளன்று பூர்த்தியடைத்திருக்க வேண்டும்)

பட்டியல் சாதிகள் (5 ஆண்டுகள்), பட்டியல் பழங்குடியினர் (5 ஆண்டுகள்) பிரிவினருக்கும், இடஒதுக்கீடு சலுகை பெற தகுதியுடைய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் (3 ஆண்டுகள்), மாற்றுத் திறனாளிகள்(10 ஆண்டுகள்) நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் வயது வரம்புச் சலுகை அளிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் 10-ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் தேர்ச்சி அவசியம்.அதேபோன்று, மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருப்பது கட்டாயமாகும்.

இந்த பணிக்கு விண்ணப்பிப்பவர்ளுக்கு உள்ளூர் மொழி தெரிந்திருக்க வேண்டும். இருசக்கர வாகனம் அல்லது மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருப்பது அவசியம்.

விண்ணப்பிக்கும் முறை மற்றும் கட்டணம்:

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://indiapostgdsonline.gov.in/என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம்: பொது மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ. 100.

முக்கிய நாட்கள்: 2026 ஜனவரி மாதம் 15ம் தேதி அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்.

## சுற்றுலா: ஷீரடியில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள்

பொதுவாக எல்லோரும் சீரடி சென்றால் பாபாவின் தரிசனத்தையும், ஆரத்தியையும் தரிசித்துவிட்டு வருவது வழக்கம். ஆனால் சீரடிக்கு அருகிலேயே அமைந்துள்ள அவரது காலடிபட்ட இடங்களை அதாவது தினசரி அவர் சென்றுவந்த இடங்களைப்பற்றி நிறைய பேர் அறிந்திருக்க மாட்டார்கள். சீரடி செல்பவர்களுக்கு இது ஒரு சிறந்த கைடாக இருக்கும். சீரடியை சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள் பல உள்ளன. முக்கியமாக துவாரகாமாயி மசூதி, சமாதி மந்திர், குருஸ்தான், சாய் பாரம்பரிய அருங்காட்சியகம் போன்றவை. அத்துடன் தீக்ஷித் வாடா அருங்காட்சியகம், ஸ்ரீ கண்டோபா மந்திர் போன்ற இடங்களும் உள்ளன.




1) துவாரகாமாயி மசூதி:

துவாரகாமாயி என்பது பாபா தனது இறுதிவரை தங்கியிருந்த ஒரு பழைய மசூதி ஆகும். இந்த மசூதியில் உள்ள புனித துனி 24 மணிநேரமும் ஒளிர்கிறது. இது சமாதி மந்திரின் நுழைவாயிலுக்கு மிகவும் அருகில் உள்ளது. இங்கு அமர்ந்திருக்கும் திருக்கோலத்தில் பாபாவின் பெரிய உருவப்படமும், அவர் அமர்ந்திருந்த ஒரு பெரிய கல்லும் வைக்கப்பட்டுள்ளது.

பாபாவின் ஊர்வலத்துக்கு பயன்படுத்தப்படும் ஒரு பல்லக்கும் இங்கு வைக்கப்பட்டுள்ளது. சீரடி கிராமத்தில் 60 ஆண்டுகள் பாபா வசித்த இந்த மசூதியே துவாரகா மாயி எனப்படும். இங்கு விபூதி பிரசாதமாக வழங்கப்படுகிறது.

கிருஷ்ணரை தரிசிக்க துவாரகா செல்ல ஆசைப்பட்ட ஒருபக்தர் சீரடிக்குச் சென்று பாபாவை தரிசித்து அவரிடம் துவாரகா செல்ல அனுமதி கேட்டார். அதற்கு பாபாவோ "துவாரகாவிற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீ அமர்ந்திருக்கும் இடமே துவாரகா. இந்த மசூதி மாயி (அன்னை) மிகவும் அன்புள்ளம் கொண்டவள். இவள் குழந்தைகளின் ஆபத்துகளையும், கவலைகளையும் போக்குபவள்" என்று கூறினார். இந்த மசூதி பாபாவினால் துவாரகாமாயிஎன்றுகுறிப்பிடப்பட்டதால் அந்நாளில் இருந்து இம்மசூதி 'துவாரகா மாயி' என்று அழைக்கப்படுகிறது.

2) சாவடி:

சீரடியில் உள்ள 'சாவடி' சீரடிசாய்பாபா தனது பெரும்பாலான நேரத்தை செலவிடும் இடங்களில் ஒன்றாகும். ஒரு காலத்தில் மழைக்காலங்களில் துவாரகா மாயின் கூரை, சுவர்கள் கசிந்து தங்குவதற்கு ஏற்ற இடமாக இல்லாததால் மக்கள் சாய்பாபாவை சாவடிக்கு குடிபெயருமாறு கேட்டுக் கொள்ள, சாவடியில் தங்கி அவருக்கு வழங்கப்பட்ட ஆரத்தியை ஏற்றுக் கொள்வதும், ஆன்மீகசொற்பொழிவுகள் நடத்துவதுமாக இருந்தார்.

காலப்போக்கில் சாவடிக்கு அவர் வரும் சடங்கு ஒரு பிரம்மாண்டமான நிகழ்வாக மாறியது. சாய்பாபாவின் உருவப்படத்துடன் கூடிய ஊர்வலம் இன்றும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் துவாரகா மாயிலிருந்து பக்தர்களால் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த இடம் இப்பொழுது ஒரு சந்நிதியாகவும், அருங்காட்சியகமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் நம்மால் பாபாவின் சக்தியை நன்கு உணர முடிகிறது. அவர் தியானம் செய்த இடத்தை இங்கு காண முடியும். அவர் கடைசியாக குளித்ததாக கூறப்படும் ஒரு மரப்படுக்கையும் இங்கு வைக்கப்பட்டுள்ளது.

சீரடியில் உள்ள சாவடி ஒருகாலத்தில் வரி வசூலிக்கவும், கிராம வணிகத்தை கண்காணிக்க கூடும் இடமாகவும், நீதிமன்றமாகவும், அலுவலகமாகவும் செயல்பட்டது. பாபாவின் மறைவிற்குப் பிறகு இது ஒரு கிடங்காகவும், விருந்தினர் மாளிகையாகவும் செயல்பட்டது.

1930 களிலிருந்து சாவடி பாபாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பொது ஆலயமாக உருவெடுத்துள்ளது. இங்கு அறையின் ஒரு பக்கம் ஆண்கள் உள்ளே நுழைந்து பிரார்த்தனை செய்யவும், மறுபுறம் பெண்கள் உள்ளே நுழைந்து தனித்தனியாக பிரார்த்தனை செய்யவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகவும் அமைதி ததும்பும் இடமாக உள்ளது.

3) குருஸ்தான்:

இது சாய்பாபாவின் குரு இருந்த இடம். சாய்பாபா சீரடிக்கு வந்த பொழுது அவர் தனது பெரும்பாலான நேரத்தை ஒரு வேப்ப மரத்தின் கீழ் கழித்தார். அது இப்பொழுது 'குருஸ்தான்' என்று அழைக்கப்படுகிறது. மரத்திலிருந்து விழும் வேப்ப இலையை ருசிக்க வாய்ப்பு கிடைத்தால் அதை சுவைத்து பார்த்தாலே தெரியும்... கசக்காது இனிக்கும்! இந்த வேப்ப இலையை பெறுபவர்கள் எந்த நோய்களும் அண்டாமல் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்பது நம்பிக்கை. சீரடி சாய்பாபா கோவிலில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் இதுவும் ஒன்று. பிரதான கோவிலுக்கு அருகில் உள்ள வேப்ப மரத்தின் கீழ் உள்ள ஒரு புனிதமான இடம் இது.

புராணத்தின் படி சாய்பாபாவின் குருவின் எச்சங்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டன என்றும், இவர் குழந்தையாக தியானத்தில் முதன் முதலில் இருந்த இடமும் இதுதான் என்றும் கூறப்படுகிறது. இங்கு சாய்பாபாவின் உருவப்படம், சிவலிங்கம் மற்றும் நந்தி ஆகியவை ஒரு சிறிய சன்னிதியில் காணப்படுகிறது. இங்கு மக்கள் தூபம் ஏற்றி வணங்கி வழிபடுகிறார்கள்.

4) லெண்டி பாக்:

சீரடி கோயிலுக்கு அருகில் உள்ள ஒரு அமைதியான தோட்டமாகும். சாய்பாபா இங்கு தியானம் செய்யவும், தாவரங்களுக்கு தண்ணீர் ஊற்றவும் இந்த சோலைக்கு வருகை தந்ததாக கூறப்படுகிறது. பாபா லெண்டி பாக் என்னும் தோட்டத்தைப் பராமரித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த தோட்டத்திற்கு அருகில் ஓடும் லெண்டி நதியின் பெயரால் இந்தப் பெயர் வழங்கப்படுகிறது. இந்த தோட்டத்தில் பாபாவின் வாழ்க்கையுடன் தொடர்புடைய விலங்குகள் மற்றும் மக்களை நினைவு கூறும் கோவில்கள் உள்ளன.

5) தீக்ஷித் வாடா அருங்காட்சியகம்:

சாய்பாபாவின் வாழ்க்கை பற்றிய தகவல்களை தெரிவிக்கும் அருமையான அருங்காட்சியகம் இது. பாபாவின் அன்றாட வாழ்க்கை மற்றும் உடைமைகள் பற்றிய ஒரு வசீகரிக்கும் நுண்ணறிவை வழங்குகிறது. தனிப்பட்ட பொருட்கள் முதல் வரலாற்று கலைப் பொருட்கள் வரை அருங்காட்சியகத்தில் உள்ளன.

## திமுக கூட்டணியில் இணைகிறீர்களா? - டாக்டர் ராமதாஸ் பதில்

**சென்னை, ஜன.13:**

சென்னையில் பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தேர்தல் நேரத்தில் பலவிதமான யூகங்கள்; பலவிதமான பேச்சுகள், உண்மையும் இருக்கும், பொய்யும் இருக்கும். அதை நீங்கள் (ஊடக நண்பர்கள்) எப்படி எடுத்துக்கொள்வீர் என்பதை பொறுத்து. பாஜக, திமுக, அதிமுக உள்ளிட்ட எந்த அரசியல் கட்சியும் என்னிடம் தேர்தல் கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை.

கேள்வி:- உங்களுடைய விருப்பம் என்ன?, தே.ஜ.கூட்டணியில் இருந்து இல்லை என்பது குறித்து நீங்கள் முடிவு எடுத்துவிட்டீர்களா..?..

பதில்:- இது இன்னும் முடிவு எடுக்கவில்லை. நாட்கள் வேகமாக போய்க்கொண்டிருக்கிறது; விரைவில் முடிவு எடுப்போம்.

கேள்வி:- புதிய கூட்டணிக்கு போவதற்கான சூழல் உருவாகியுள்ளதா?

பதில்:- நீங்கள் என்ன சொல்கிறீர்கள் (பத்திரிகையாளர்களை நோக்கி). தேர்தல் நேரத்தில் எதுவும் நடக்கலாம்; நடக்காமலும் போகலாம். தேர்தல் நேரத்தில் எதையும் உறுதிபட சொல்ல முடியாது.

கேள்வி:- திமுக கூட்டணி பேச்சுவார்த்தை பரிசீலனையில் உள்ளதா?

பதில்:- ஆமாம். இவ்வாறு அவர் கூறினார்.

## எம்ஜிஆர் பிறந்தநாள்: ஜன. 18, 19 தேதிகளில் தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் - அதிமுக அறிவிப்பு

**சென்னை, ஜன.13:**

அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும்; கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன.

கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தாங்கள் சார்ந்த மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ள இடங்கள்; அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியலை அதிமுக வெளியிட்டுள்ளது. அதன்படி, வரும் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தென் சென்னையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்ற உள்ளார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கே.பி. முனுசாமியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் திண்டுக்கல் சீனிவாசனும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் மு. தம்பிதுரையும், கோவை புறநகர் தெற்கு மாவட்டத்தில் எஸ். பி. வேலுமணியும் உரையாற்ற உள்ளனர்.

இதேபோல், வரும் 19ம் தேதி திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நத்தம் விஸ்வநாதனும், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சி. பொன்னையனும், நாமக்கல் மாவட்டத்தில் பி. தங்கமணியும், திருப்பூர் மாநகர் மாவட்டத்தில் பொள்ளாச்சி ஜெயராமனும், வட சென்னை கிழக்கு மாவட்டத்தில் டி. ஜெயக்குமாரும், விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகமும் உரையாற்ற உள்ளனர்.

## தமிழகத்தில் ஜன.15 முதல் வறண்ட வானிலை!

**சென்னை, ஜன.13:**

தமிழகத்தில் ஜனவரி 15-ம் தேதி முதல் வறண்ட வானிலை நிலவக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஜன.13) தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

14-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 15 முதல் 18-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை. குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி நிலவக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

## ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம்: புகார் அளிக்க உதவி எண்கள் அறிவிப்பு

**சென்னை, ஜன.13:**



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம் வசூலித்தால், பொதுமக்கள் புகாரளிக்க உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (12.01.2026 முதல் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க வேண்டும்.

இதனையடுத்து, தமிழ்நாடு முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப்புறம்பாக இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கைகளடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் அதிக அளவில் தங்களது சொந்த ஊருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதால் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக புகார் வருவதை தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொதுமக்கள் கீழ்காணும் எண்கள் மூலம் தொலைப்பேசி வாயிலாகவோ, வாட்ஸ் ஆப் மூலம் குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவாகவோ புகார் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆணையரகம் தொலைபேசி எண்கள்:

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151

இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 99442 53404

இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 97905 50052

இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394

இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 91235 93971

துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825

துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011

துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423

துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343

துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011

துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865

## போலீசாருக்கு 8 மணி நேர வேலை திட்டம் கோரி வழக்கு - அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, ஜன.13:**

காவல் துறையில் போலீசாருக்கு 8 மணி நேர வேலை திட்டம் அமல்படுத்தக் கோரிய வழக்கில் அரசு விளக்கம் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக காவலர் குடும்பநல அறக்கட்டளையின் தலைவர் சத்ய பிரியா உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், 'தமிழகத்தில் பட்டாலியன் போலீசாரை சட்ட ஒழுங்கு காவல்துறையினரோடு இணைத்து பயன்படுத்துவது தொடர்பாக முடிவு எடுக்கவும், தமிழக காவல்துறையினருக்கு 8 மணி நேர வேலையையும் பயோ மெட்ரிக் வருகை பதிவேடு முறையையும் அமல்படுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "காவல் துறையில் சீருடையைக் கூட ஒரு குறிப்பிட்ட கடையில் தான் வாங்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றனர். பிரிட்டிஷ் காலத்தில் கொண்டுவரப்பட்ட பட்டாலியன் காவல்துறை பிற மாநிலங்களில் நடைமுறையில் இல்லாதபோது, தமிழகத்தில் மட்டுமே நடைமுறையில் உள்ளது அவர்களின் திறன் முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை" என தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், "வழக்கு தொடர்பாக தமிழக அரசிடம் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஜன. 28-க்கு தள்ளிவைத்தனர்.

## பொங்கல் சிறப்புத் தொகுப்பு அனைவருக்கும் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்: டிடிவி தினகரன்

**சென்னை, ஜன.13:**

அமமுக பொதுச்செயலாளர் தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருவள்ளூர், நெல்லை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள நியாயவிலை கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் பொங்கல் சிறப்புப் பரிசுத் தொகுப்பில் கரும்பு, வேஷ்டி, சேலைகள் வழங்கப்படுவதில்லை என்ற புகார் எழுந்துள்ளது. பொங்கல் திருநாளையொட்டி தமிழக அரசு அறிவித்திருக்கும் பொங்கல் சிறப்புத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் பொருட்கள், அந்தந்த மாவட்டங்களுக்கு முழுமையாக விநியோகம் செய்யப்படாததே, நியாய விலைக்கடைகளில் ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம் என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அதோடு, டோக்கன் வழங்குவதில் குளறுபடி, ஊழியர்கள் பற்றாக்குறை, கை ரேகை சரி பார்க்கும் இயந்திரத்தில் பழுது என நியாய விலைக்கடைகளில் ஏற்பட்டிருக்கும் குளறுபடிகளால், குடும்ப அட்டை தாரர்கள் பொங்கல் பரிசை பெற நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதோடு, பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கும் அறிவிக்கப்பட்ட 3 ஆயிரம் ரூபாயுடன் கூடிய பொங்கல் சிறப்புத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அனைத்து பொருட்களும் முழுமையாக விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்" என்று தினகரன் கூறியுள்ளார்.

# போகி பண்டிகை; பிளாஸ்டிக், டயர்களை எரிக்க வேண்டாம்: சென்னை விமான நிலைய ஆணையம் வேண்டுகோள்



**சென்னை, ஜன.13:**

வருகிற 15-ந்தேதி "பொங்கல் பண்டிகைகொண்டாடப்படுகிறது. இதற்கு ஒரு நாள் முன்னதாக 14ந் தேதிபோகிப்பண்டிகையின்போது பெரும்பாலானோர் வீடுகளில் உள்ள பழைய பொருட்களை தெருக்களில் போட்டு எரிப்பது வழக்கமாக உள்ளது.

இதையொட்டி இந்திய விமான நிலைய ஆணையம், விமான நிலையத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்டு உள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

பொதுமக்கள் போகிப் பண்டிகையின் போது அதிகாலை நேரத்தில், பிளாஸ்டிக் கழிவுகள், பழைய டயர்கள், அதிக அளவு புகைகளை எழுப்பக்கூடிய கழிவு பொருட்கள் போன்றவைகளை, தெருக்களில் போட்டு எரிப்பதை தவிர்த்து விடுங்கள். அவ்வாறு எரிப்பதால், அடர் மூடுபனியில், கரும் புகை கலந்து, விமான ஓடுபாதை தெரியாத அளவு, சூழ்ந்து கொள்கிறது. இதனால் விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்படுவதோடு, விமான பயணிகளும் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். எனவே குடியிருப்பு பகுதி மக்கள் விமான சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உள்ளனர். போகிப்பண்டிகையின் போது பழையபொருட்களை எரித்ததால் கடந்த 2018-ம் ஆண்டு அதிகபட்சமாக 73 புறப்பாடு விமானங்கள், 45 வருகை விமானங்கள் என மொத்தம் 118 விமான சேவைகள் புகை மூட்டத்தால் பாதிக்கப்பட்டது .இதன் பின்னர் விழிப்புணர்வுகளால் போகிப்பண் கையின் போது பழைய பொருட்களை எரிப்பது குறைந்து விமான சேவைகள் பாதிக்கப்படுவது, படிப்படியாக குறைந்து வருகிறது.கடந்த 2024-ம் ஆண்டு, போகிப் பண்டிகை புகை மூட்டம் பனிமூட்டம் காரணமாக 51 விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. கடந்த ஆண்டு போகிப் பண்டிகையின்போது இதைப்போன்ற பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி, இந்திய விமான நிலைய ஆணையம் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக, அதிகாலை 4 மணியில் இருந்து, காலை 8 மணி வரையில், சென்னை விமான நிலையத்திற்கு வரும் விமானங்கள், சென்னையில் இருந்து புறப்படும் விமானங்கள் என சுமார் 30 வருகை, புறப்பாடு விமானங்கள் நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### தூத்துக்குடியில் 159 கிலோ குட்கா புகையிலை பறிமுதல்: டீ கடைக்காரர் கைது

**தூத்துக்குடி, ஜன.13:**

தூத்துக்குடி சிப்காட் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சுப்புராஜ் மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பாளை ரோடு எப்.சி.ஐ. குடோன் அருகில் ஒரு டீ கடையில் சோதனையிட்டபோது அங்கு தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக அந்த டீ கடையை நடத்தி வரும், தூத்துக்குடி 3வது மைல், புதுக்குடியைச் சேர்ந்த செல்லசாமி மகன் செல்லப்பாண்டி (வயது 35) என்பவரை போலீசார் கைது செய்தனர். மேலும் அங்கிருந்த 159 கிலோ குட்கா புகையிலை பொருட்கள், அதனை கொண்டு வந்த ஒரு கார் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நெல்லையில் 2 பேரை வழிமறித்து, அச்சுறுத்தி பணம் பறிக்க முயன்றவர் கைது

**திருநெல்வேலி, ஜன.13:**

திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை வடக்கு கென்னடி தெருவை சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளி ரவிக்குமார் (வயது48). இவர் நெல்லை பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக்கல்லூரி சாலையில் சென்று கொண்டிருந்த பாளையங்கோட்டை கொக்கிரகுளம் பகுதியை சேர்ந்த ஒருவரையும், பாளையங்கோட்டை சமாதானபுரம் வாட்டர் டேங்க் அருகே சென்று கொண்டிருந்த திம்மராஜபுரம் பகுதியை சேர்ந்த ஒருவரையும் வழிமறித்து அச்சுறுத்தி பணம் பறிக்க முயன்றுள்ளார். அவர்கள் பணம் தர மறுத்த காரணத்தினால் அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி, ஆயுதத்தால் தாக்க முயன்றுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட 2 பேரும் கொடுத்த புகாரின் பேரில் பாளையங்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து ரவிக்குமாரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

### 16 வயது சிறுமி கர்ப்பம்: தையல் தொழிலாளி கைது

**திருப்பூர், ஜன.13:**

திருப்பூரை சேர்ந்த 16 வயது சிறுமிக்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவரை பெற்றோர், திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு அந்த சிறுமியை டாக்டர்கள், பரிசோதனை செய்தனர். அப்போது சிறுமி 3 மாத கர்ப்பமாக இருப்பதாக அதிர்ச்சி தகவலை தெரிவித்தனர். இதையடுத்து பெற்றோர், சிறுமியிடம் விசாரணை நடத்தினர். அப்போது திருப்பூர் கொடிக்கம்பம் பகுதியை சேர்ந்த பனியன் நிறுவனத்தில் தையல் தொழிலாளியாக வேலை செய்யும் அரசு (வயது 19) என்பவர் சிறுமியிடம் பழகி அவரை பாலியல் பலாத்காரம் செய்து உள்ளார். இதனால் சிறுமி கர்ப்பமாகியது தெரியவந்தது. இதுதொடர்பாக திருப்பூர் வடக்கு அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அரசுவை கைது செய்தனர்.

# சபரிமலையில் நாளை மகரவிளக்கு பூஜை: திருவாபரண ஊர்வலம் - கட்டுக்கடங்காமல் குவியும் பக்தர்கள்



**திருவனந்தபுரம்,ஜன.13:**

மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு ஐயப்ப விக்ரகத்தில் திருவாபரணம் அணிவிக்கப்படுவது வழக்கமாகும். இந்த திருவாபரணம் பந்தளத்தில் உள்ள தேவசம் போர்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வருட திருவாபரண ஊர்வலம் (12ம் தேதி) மதியம் 1 மணிக்கு புறப்பட்டது. பந்தளம் மன்னர் குடும்பத்தின் பிரதிநிதியான நாராயண வர்மா தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது. நாளை 14ம் தேதி மாலை 6.30 மணியளவில் திருவாபரணம் சன்னிதானத்தை அடையும். பின்னர் இந்த திருவாபரணம் ஐயப்ப விக்ரகத்தில் அணிவிக்கப்பட்டு தீபாராதனை நடைபெறும். இந்த சமயத்தில் தான் பொன்னம்பலமேட்டில் 3 முறை மகரஜோதி தெரியும்.

மகரவிளக்கு பூஜையை யொட்டி சபரிமலையில் பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது.

மகரவிளக்கு பூஜை தினத்தன்று சபரிமலையில் நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்காக 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் பக்தர்கள் வருகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 13ம் தேதி 35 ஆயிரம் பேருக்கும், நாளை 14ம் தேதி 30 ஆயிரம் பேருக்கும் மட்டுமே ஆன்லைன் மூலம் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைனில் முன்பதிவு செய்யாமல் வரும் பக்தர்களுக்கு இந்த நாட்களில் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று போலீஸ் அறிவித்துள்ளது.

மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு சபரிமலையில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# ஆந்திராவில் சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு ரூ.2.5 கோடி பந்தயத்துக்காக தயாரான சண்டை சேவல்கள்



**திருப்பதி, ஜன.13:**

சங்கராந்தி என்றாலே ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டத்தில் சேவல் சண்டை கொண்டாட்டங்கள் உச்சத்தை எட்டும்.

குறிப்பாக சேவல் சண்டையின் மையமாக இருக்கும் பீமாவரத்தில், இந்த முறை பண்டிகை உற்சாகம் கடந்த காலத்தை தாண்டியதாக கூறப்படுகிறது.

சேவல் சண்டை பந்தயங்களை காண ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலிருந்து ஏராளமான மக்கள் வருவதால், தங்கும் அறைகளுக்கு பெரும் தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் பீமாவரம், ஏலூரு, தடேபள்ளிகுடேம் மற்றும் தனுகு போன்ற நகரங்களில் உள்ள சுமார் 150 ஓட்டல்கள் ஹவுஸ் புல்லாக உள்ளது.

இதனை கருத்தில்கொண்டு அவற்றின் உரிமையாளர்கள் வாடகையை கடுமையாக உயர்த்தி வருகின்றனர். ஒரு அறை சராசரியாக ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை இருப்பது வழக்கம். ஆனால் சேவல் சண்டை சீசனுக்காக 3 நாள் தொகுப்புக்கு ரூ.30,000 முதல் ரூ.60,000 வரை அறை வாடகை உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக பீமாவரம் பகுதியில் உள்ள சில முக்கிய ஓட்டல்கள் 3 நாட்களுக்கு ஒரு அறைக்கு ரூ.1 லட்சம் என வாடகையை உயர்த்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த முறை, பந்தயத்தில் அதிக அளவில் பணம் கட்டுவது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பந்தய நிபுணர்களுடன் ஏற்பாட்டாளர்கள் ஏற்கனவே ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர்.

தடேபள்ளிகுடேமில் ரூ.2.5 கோடிக்கு மிகப்பெரிய பந்தயத்திற்கு ஏற்பாடு தயாராக உள்ள நிலையில், சீசாலி, நாராயணபுரம் மற்றும் சீனாமிரம் போன்ற இடங்களில் பந்தயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் சட்டப்படி சேவல் சண்டை ஏற்பாடு செய்யக்கூடாது என்றாலும் மறுபுறம் கோதாவரி மாவட்டங்களில் சேவல் சண்டை பல கோடி ரூபாய் பந்தயத்துடன் நடத்தப்படுகிறது. அதன்படி பந்தய சேவல்களை போட்டியாளர்கள் பல்வேறு வகைகளில் தயார்படுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சூரியப் புயலால் புவி காந்தப்புலத்தில் ஏற்படும் தாக்கம்: ஆதித்யா எல்-1 கண்டுபிடிப்புகள் மூலம் புதிய தகவல்



**புதுடெல்லி, ஜன.13:**

அதிசக்திவாய்ந்த சூரியப் புயலால் புவி காந்தப்புலத்தில் ஏற்படும் தாக்கம் குறித்து ஆதித்யா எல்-1 விண்கலம் புதிய தரவுகளை அளித்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சனிக்கிழமை தெரிவித்தது.

2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சூரியப் புயல் பூமியை தாக்கியது. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வு குறித்து கடந்த ஆண்டு டிசம்பா மாதம் வானியற்பியல் இதழில் வெளியானது.

இந்தியாவின் முதல் சூரிய விண்கலமான ஆதித்யா எல்-1 விண்கலத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் சாவதேச விண்வெளி மையங்களின் தரவுகளைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக இஸ்ரோ சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சூரியனில் ஏற்படும் தற்காலிக மாற்றங்கள் விண்வெளி வானிலை எனப்படுகிறது.

சூரிய வளிமண்டலத்தில் இருந்து வெளிவரும் சக்திவாய்ந்த அனல்வீச்சுசெயற்கைக்கோள்கள், தொலைத்தொடர்பு மற்றும் வழித்தட சேவைகள், எரிசக்தி உள்கட்டமைப்புகளை கடுமையாகப் பாதிக்கிறது.

சூரியப் புயலின் கொந்தளிப்பான பகுதி புவியின் காந்தப்புலத்தை கடுமையாக சுருக்கி, அதை புவிக்கு அருகில் தள்ளுகிறது.

இதனால் புவிசார் சுற்றுப்பாதையில் நிலைகொண்டுள்ள செயற்கை க்கோள்கள் கடும் விண்வெளி வானிலைகளால் பாதிப்புகளை எதிர்கொள்கின்றன.

சூரியப் புயலால் உயர் அட்சரேகைப் பகுதிகளில் நீரோட்டங்கள் மிகவும் தீவிரமடைகிறது.

இதன் காரணமாக வளிமண்டலத்தின் மேல் பகுதி வெப்பமாகி புவி வாயுக்கள் வெளியேறும் சூழல் ஏற்படுகிறது.

விண்வெளி சொத்துகளை பாதுகாக்க விண்வெளி வானிலை மற்றும் சூரியனின் செயல்பாடுகளை மிக கவனமாக கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்நாடு இ பேப்பர்.காம் மார்கழி-29

**13-01-2026**

### திருப்பாவை - பாடல் -29

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்!
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்..

**பொருள்:** கண்ணா! அதிகாலையில் உன் பொன்போன்ற தாமரை பாதங்களை வணங்க வந்திருக்கிறோம். அதற்கான காரணத்தைக் கேள்! பசுக்களை மேய்த்துப் பிழைக்கும் ஆயர்குலத்தில் பிறந்த நீ, எங்களது இந்த சிறு விரதத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடாதே! நீ தரும் சிறு பொருட்களுக்காக (அணிகலன் முதலானவை) இந்த விரதத்தை மேற்கொள்ளவில்லை. என்றும், ஏழுபிறவிகளிலும் நீ எங்கள் குலத்தில் பிறக்க வேண்டும். எங்களை உன் உறவினர்களாக ஏற்க வேண்டும். உனக்கு மட்டுமே சேவை செய்யும் பாக்கியத்தை தரவேண்டும். இது தவிர மற்ற விருப்பங்களைஎல்லாம் நீயே அழித்து விடு.

**விளக்கம்:** பெருமாளின் அருள் இந்த பிறவியில் மட்டும் இல்லாமல் இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என ஆண்டாள் குறிப்பிடுகிறார். மார்கழி மாதத்தில் அதிகாலை குளிரையும் பொருட்படுத்தாமல் கண்ணன் மீதான பக்தியே பெரிது என்றும், கண்ணனின் அருளை பெறுவதே பிறவி நோக்கம் என வேண்டி நோன்பு இருந்ததையும் ஆண்டாள் இந்த பாடலில் குறிப்பிடுகிறார். இறைவன், பக்தர்களிடம் இருக்கும் குறைகளை பார்க்க மாட்டார். அவர்களின் பக்தி, அன்பை மட்டுமே காண்பார் என்பது தெரிந்தும், தங்களின் விரதத்தில் குற்றம் குறை இருந்தாலும் அதை பெரிதாக நினைத்து அருளை வழங்காமல் இருந்து விடாதே என கண்ணனின் மன்றாடுகிறார்..

### திருப்பள்ளியெழுச்சி - பாடல்-9

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே! உன் தொழும்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தோனே!
வண் திருப்பெருந்துறையாய்! வழியடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே!
கடலமுதே! கரும்பே! விரும்பும் அடியார்
எண்ணகத்தாய்! உலகுக்கு உயிரானாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

**பொருள்:** விண்ணுலகிலுள்ள தேவர்களாலும் நெருங்க முடியாத சிறந்த பொருளான சிவபெருமானே! உன்னை வணங்கும அடியவர்களுக்காக நீ இந்த மண்ணுலகிற்கு வந்து அருள்செய்து வாழ வைத்தாய். வளம் நிறைந்த திருப்பெருந்துறையில் வசிப்பவனே! பரம்பரை பரம்பரையாக உனக்கு பணிவிடை செய்யும் அடியவர்களின் கண்களுக்கு மட்டும் தெரியும் இனிய தேனே! பாற்கடலில் கிடைத்த அமுதமே! கரும்பே! உன்னை அணுகும் அடியவர்களின் எண்ணங்களில் நீக்கமற நிறைந்திருப்பவனே! நீயே இந்த உலகின் உயிர். எம்பெருமானே! நீ கண் விழித்தால் இந்த உலகம் வாழும்..

**விளக்கம்:** சிவ பெருமான் அடி, முடி காண முடியாத, யாராலும் அணுக முடியாதவர் என்பதை திருப்பள்ளியெழுச்சியின் ஒவ்வொரு பாடலிலும் மாணிக்கவாசகர் வலியுறுத்துகிறார். வேதங்களில் மிக உயர்வான பொருளாக இருக்கக் கூடியவர் என்பதாலேயே விழுப்பொருள் என்ற சொல்லை அவர் இங்கு பயன்படுத்தி உள்ளார். சிவ பெருமானை வார்த்தைகளில் அடக்கி விட முடியாது என்பதால் தன்னால் முடிந்த வரை எவ்வளவு உயர்வர் என குறிப்பிடுகிறாரோ, அதே போல் தான் உள்ளிட்ட அடியார்கள் அனைவரையும் மிகச் சிறியவர்களாகவும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். அனைவருக்கும் இறைவனை பிடிக்கும், அனைவருக்கும் இறைவனின் அருள் வேண்டும் என்பதையே இந்த பாடலில் அவர் அழுத்தமாக சொல்லி உள்ளார்.

## வணிகச் செய்திகள்

### டாப் 7 நிறுவனங்களின் சந்தை மதிப்பு ரூ.3.63 லட்சம் கோடியாக சரிவு!

**புதுடெல்லி, ஜன.13:**

பங்குச் சந்தையில் நிலவிய மந்தநிலைக்கு மத்தியில், இந்தியாவின் அதிகமதிப்புள்ள முதல் 10 நிறுவனங்களில் முதல் 7 நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சந்தை மதிப்பு கடந்த வாரம் ரூ.3,63,412.18 கோடியாக சரிந்தது. இதில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மிகப்பெரிய இழப்பை சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், ஹெச்டிஎஃப்சி வங்கி, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், பார்தி ஏர்டெல், இன்ஃபோசிஸ், பஜாஜ் ஃபைனான்ஸ் மற்றும் லார்சன் & டுப்ரோ உள்ளிட்ட நிறுவனங்கள் சந்தை மதிப்பில் சரிவைச் சந்தித்த நிலையில், ஐசிஐசிஐ வங்கி, ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் ஹிந்துஸ்தான் யூனிலீவர் ஆகிய நிறுவனங்கள் உயர்ந்தன.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் சந்தை மதிப்பு ரூ.1,58,532.91 கோடி குறைந்து ரூ.19,96,445.69 கோடியாகவும், ஹெச்டிஎஃப்சி வங்கியின் சந்தை மதிப்பு ரூ.96,153.61 கோடி குறைந்து ரூ.14,44,150.26 கோடியாகவும், பார்தி ஏர்டெல்லின் சந்தை மதிப்பு ரூ. 45,274.72 கோடி குறைந்து ரூ.11,55,987.81 கோடியாகவும், பஜாஜ் ஃபைனான்ஸின் சந்தை மதிப்பு ரூ. 18,729.68 கோடி குறைந்து ரூ.5,97,700.75 கோடியாகவும், லார்சன் & டுப்ரோவின் சந்தை மூலதனம் ரூ.18,728.53 கோடி குறைந்து ரூ.5,53,912.03 கோடியாகவும், டிசிஎஸ்-இன் சந்தை மதிப்பு ரூ.15,232.14 கோடி குறைந்து ரூ.11,60,682.48 கோடியாகவும், இன்போசிஸின் சந்தை மூலதனம் ரூ.10,760.59 கோடி குறைந்து ரூ.6,70,875 கோடியாகவும் உள்ளது.

### ஹீரோ மோட்டோகார்ப் விற்பனை 40% உயர்வு

ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த டிசம்பர் மாதம் நிறுவனத்தின் மொத்த விற்பனை 4,56,479-ஆக இருந்தது. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே மாதத்தோடு ஒப்பிடுகையில் இது 40 சதவீதம் அதிகம். அப்போது நிறுவனம் 3,24,906 வாகனங்களை சில்லறை விற்பனையாளர்களுக்கு அனுப்பியிருந்தது.

2024 டிசம்பருடன் ஒப்பிடுகையில் 2025 டிசம்பர் மாதத்தில் நிறுவனத்தின் மோட்டார்சைக்கிள் விற்பனை 2,98,516-லிருந்து 35 சதவீதம் உயர்ந்து 4,02,374-ஆகவும், ஸ்கூட்டர் விற்பனை 26,390-லிருந்து 105 சதவீதம் உயர்ந்து 54,105-ஆகவும் உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருப்பதி: பாதாம் பாலில் மயக்க மருந்தை கலந்து கொடுத்து மூதாட்டியிடம் செயின் பறிப்பு



**திருமலை, ஜன.13:**

திருப்பதி நகரம் பழைய மாநகராட்சி அலுவலக பின்பக்க தெருவில் வசித்து வருபவர் ராதாகிருஷ்ணன். இவரின் மனைவி விஜயா (வயது 63). இவர், 2-ந்தேதி திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு சொர்க்க வாசல் தரிசனத்துக்காக வந்தார். இலவச தரிசன வரிசையில் சென்றபோது, உடன் வந்த ஒரு பெண் நைசாகப் பேச்சு கொடுத்தார். அந்தப் பெண்ணுடன் விஜயா பேசிக்கொண்டே இருந்தார். இருவரும், சகஜமாகப் பழகினர்.

3-ந்தேதி காலை வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ் 2-ல் 20-வது கம்பார்ட்மெண்டில் 2 பேரும் ஓய்வெடுத்தனர். அங்கு, ஸ்ரீவாரி சேவா சங்க தொண்டர்கள் பக்தர்களுக்கு பாதாம் பால் வினியோகம் செய்தனர். 2 கப் பாதாம் பாலை வாங்கி வந்த பெண் ஒரு கப்பில் மயக்க மருந்தை கலந்து கொடுத்து விஜயாவை குடிக்க வைத்துள்ளார். பாதாம் பாலை குடித்த சிறிது நேரத்தில் விஜயா திடீரென மயக்கமடைந்தார். அந்த நேரத்தில் விஜயா கழுத்தில் அணிந்திருந்த 7½ பவுன் தாலி சங்கிலியை பறித்துக் கொண்டு பெண் அங்கிருந்து தப்பி சென்றார்.

சிறிது நேரத்துக்கு பிறகு திடுக்கிட்டு எழுந்த விஜயா கழுத்தில் அணிந்திருந்த தாலி சங்கிலியை காணாதது கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே திருமலை 1-டவுன் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தபோது, குற்றவாளியை போலீசார் அடையாளம் கண்டு தேடி வந்தனர். நேற்று திருமலை எச்.டி.காம்ப்ளக்ஸ் குளியல் அறை அருகில் நின்றிருந்த பெண்ணை பிடித்து போலீசார் விசாரித்தனர். அவர், கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டம் சீனிவாசபுரம் தாலுகா கப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த நாகிசெட்டி சுப்பிரமணியத்தின் மனைவி நாகரத்தனம்மா (45) என்றும், விஜயாவிடம் தங்கச் சங்கிலியை பறித்ததாகவும் ஒப்புக்கொண்டார். அவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து தங்கச் சங்கிலி பறிமுதல் செய்யப்பட்டது.

## லஞ்சம் பெற்ற வழக்கு: இரு சுங்க அதிகாரிகள் உள்பட மூவருக்கு 5 ஆண்டு சிறை -குருகிராம் நீதிமன்றம் தீர்ப்பு

**புதுடெல்லி, ஜன.13:**

லஞ்சம் பெற்ற விவகாரத்தில் ஹரியாணா சுங்கம் மற்றும் வரிவிதிப்புத் துறையின் இரு அதிகாரிகள் மற்றும் ஒரு ஊழியரை குற்றவாளியாக கூடுதல் அமர்வுகள் நீதிபதி சுனில் திவான் அறிவித்ததாக ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர்.

அவர்கள் மூவருக்கும் 5 ஆண்டுகள் சிறை மற்றும் தலா ரூ.1 லட்சம் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.சரக்கு-சேவை வரி எண் வழங்க ரூ.7 லட்சம் லஞ்சம் கேட்டதைத் தொடர்ந்து, கட்டுமானப் பொருள்கள் விற்பனையாளர் மோஹித் அளித்த லஞ்ச புகாரின் அடிப்படையில் சுங்கம் மற்றும் வரிவிதிப்பு ஆய்வாளர் சுமித்ரா கோத்ரா ஆகியோர் கடந்த 2022, மே மாதம் கைதுசெய்யப்பட்டனர். இதைத்தொடர்ந்து, சுமித்ராவிடம் லஞ்சப் பணத்தை வழங்குமாறு அறிவுறுத்திய சுங்கம் மற்றும் வரிவிதிப்பு அதிகாரி ரோஷன் லால் ஃபரீதாபாதிலிருந்து ரோஹ்தக் அலுவலகத்துக்குப் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். சுமித்ரா கோத்ரா பணியிடைநீக்கம் செய்யப்பட்டார். இந்நிலையில், இந்த வழக்கில் தொடர்புடைய இரு அதிகாரிகள் மற்றும் பணியாளரை குற்றவாளியாக அமர்வு நீதிபதி சுனில் திவான் அறிவித்தார். நீதிமன்றத்தின் உத்தரவை ஆராய்ந்து வருவதாகவும் அதைத்தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுங்கம் மற்றும் வரிவிதிப்புத் துறையின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காங்கிரஸ் எம்எல்ஏ 3-வது பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது!

**திருவனந்தபுரம், ஜன.13:**

கேரளத்தில் மூன்றாவது முறையாக பாலியல் வன்கொடுமை வழக்கில் காங்கிரஸ் எம்எல்ஏ ராகுல் மாம்கூட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

காங்கிரஸ் எம்எல்ஏ-வான ராகுல் மாம்கூட்டத்தில் மீது பாலியல் வன்கொடுமை மற்றும் கருக் கலைப்பு என இரு வெவ்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருப்பினும், முதல் வழக்கில் அவருக்கு கைது நடவடிக்கையிலிருந்து இடைக்காலத் தடை விதித்து கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ந்து, இரண்டாவது வழக்கிலும் ராகுலுக்கு முன்பிணை வழங்கி திருவனந்தபுரம் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனிடையே, பாலியல் வழக்குகள் காரணமாக ராகுலை கட்சியிலிருந்து காங்கிரஸ் நீக்கி உத்தரவிட்டது.

இந்த நிலையில், ராகுல் மாம்கூட்டத்தில் மீது மூன்றாவது வழக்காக பத்தனம்திட்டாவை சேர்ந்த ஒருவர் பாலியல் புகார் அளித்தார். மூன்றாவது வழக்கில்தான், ஒரு விடுதியில் தங்கியிருந்த ராகுல் மாம்கூட்டத்திலை சனிக்கிழமை நள்ளிரவில் காவல்துறையினர் கைது செய்தனர்.

ஏற்கெனவே உள்ள இரு வழக்குகளை சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பல்கலை. தரவரிசையில் முதல் 500 இடங்களில் இந்தியா இல்லை: பிரதமர் மீது குற்றச்சாட்டு

**புதுடெல்லி, ஜன.13:**

உலகளாவிய பல்கலை. தரவரிசையில் முதல் 500 இடங்களில் இந்தியா இடம்பெறாததற்கு பிரதமர் நரேந்திர மோடி மீது சமூக ஆர்வலர் பிரசாந்த் பூஷண் குற்றஞ்சாட்டியுள்ளார்.




உலகளாவிய பல்கலைக் கழகங்களின் கல்வித் தரவரிசை சமீபத்தில் வெளியானது. இந்தத் தரவரிசையில் முதல் 500 பல்கலைக் கழகங்களில் இந்தியா இடம்பெறத் தவறியதாக பிரதமர் மோடி அரசு மீது மூத்த வழக்குரைஞரும் சமூக ஆர்வலருமான பிரசாந்த் பூஷண் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து, தனது எக்ஸ் பக்கத்தில் பிரசாந்த் பூஷண், "உலகின் முதல் 500 பல்கலைக் கழகங்களில் இந்தியாவின் ஒரு பல்கலைக் கழகம்கூட இல்லை. விஸ்வகுருவாக வேண்டும் என்ற கூற்றின் உண்மை இதுதான்.

மோடி ஆட்சியில், உயர் சிந்தனை மற்றும் அறிவியல் அறிவை அழித்த ஆர்எஸ்எஸ் துணைவேந்தர்களால் கட்டாயப்படுத்தியதால்தான், நமது பல்கலைக் கழகங்கள் சீரழிக்கப்பட்டுள்ளன" என்று பதிவிட்டுள்ளார்.

தரவரிசையில், உலகளாவிய உயர்கல்வியில் 111 பல்கலை. களுடன் அமெரிக்காவே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது. சீனா - 108 பல்கலை., ஐரோப்பிய ஒன்றியம் - 37 பல்கலை. என்றளவிலும் உள்ளன. ஹார்வர்டு பல்கலை. தான் உலகின் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

## இந்தியா, அமெரிக்காவுக்கு வியக்கத்தக்க வாய்ப்புகள் காத்திருக்கின்றன: செர்ஜியோ கோர்

**புதுடெல்லி, ஜன.13:**

'இந்தியா - அமெரிக்கா இரு நாடுகளுக்கும் வியக்கத்தக்க வாய்ப்புகள் காத்திருக்கின்றன' என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்ட சொஜியோ கோர் தெரிவித்தார்.



இந்தியாவுக்கு சனிக்கிழமை வந்திறங்கிய நிலையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு மிக நெருக்கமான அதிகாரியாக அறியப்படும் சொஜியோ கோர் வெள்ளை மாளிகையில் அதிபரின் தனி இயக்குநராக பணியாற்றி வந்தார். அவரை, இந்தியாவுக்கான புதிய தூதராக கடந்த கடந்த ஆகஸ்ட் மாதத்தில் டிரம்ப் அறிவித்தார். இந்திய பொருள்கள் மீது அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் இரு நாடுகளிடையேயான உறவில் பாதிப்பு ஏற்பட்ட சூழலில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக கோர் பதவியேற்றார். பதவியேற்ற ஒரு சில நாள்களில் அமெரிக்கா திரும்பிய அவர், இந்தியாவுக்கு சனிக்கிழமை மீண்டும் வந்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்தியாவுக்கு மீண்டும் வந்தது மகிழ்ச்சியளிக்கிறது. இந்திய தூதராக நியமிக்கப்பட்டது எனது வாழ்நாளில் மிகப் பெரிய கௌரவமாகும். இரு நாடுகளிடையேயான உறவை வலுப்படுத்துவதை எதிர்நோக்கியுள்ளேன். இந்தியா - அமெரிக்கா இரு நாடுகளுக்கும் வியக்கத்தக்க வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்றார்.

ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 500 சதவீத வரியை விதிக்க வகை செய்யும் வகையில் அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாம் அறிமுகம் செய்த மசோதாவுக்கு அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ள சூழலில், சொஜியோ கோரின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். இந்த மசோதா சட்டமானால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்கா தற்போது விதித்து வரும் 50 சதவீத வரி, 500 சதவீதமாக உயர்த்தப்படக்கூடும்.

# விளையாட்டு செய்திகள்

## தேசிய சீனியர் கூடைப்பந்து: இறுதிச் சுற்றில் தமிழகம்-ரயில்வே ஆடவர்

**சென்னை, ஜன.13:**

75-ஆவது தேசிய சீனியர் ஆடவர், மகளிர் கூடைப்பந்து போட்டியில் ஆடவர் இறுதிச் சுற்றில் தமிழகம்-இந்திய ரயில்வே அணிகள் மோதுகின்றன.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் சனிக்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. ஆடவர் பிரிவில் நடப்பு சாம்பியன் தமிழகம் 102-53 என்ற புள்ளிக் கணக்கில் உத்தர பிரதேசத்தை வீழ்த்தியது. தமிழகத் தரப்பில் முயின் பெய்க் 22, அரவிந்த் குமார் 18, பிரணவ் பிரின்ஸ் 12 புள்ளிகளையும், உபி தரப்பில் ஹர்ஷ் டாகர் 13, தியாகி 15 புள்ளிகளையும் குவித்தனர். மற்றொரு அரையிறுதியில் இந்தியன் ரயில்வே 65-53 என டில்லியை வீழ்த்திஇறுதிக்குள் நுழைந்தது.

மகளிர் பிரிவில் ரயில்வே-கேரளம் மோதல்: அரையிறுதியில் கேரளம் 87-58 என மத்திய பிரதேசத்தை வீழ்த்தியது. இரண்டாவது அரையிறுதியில் இந்தியன் ரயில்வே 88-54 என தமிழக மகளிரை வீழ்த்தினர். இறுதியில் கேரளம்-இந்தியன் ரயில்வே மோதுகின்றன.

## தேசிய குத்துச்சண்டை: சர்வீசஸ் சாம்பியன்

**சென்னை, ஜன.13:**

தேசிய சீனியர் எலைட் ஆடவர், மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் ஆடவர் பிரிவில் சர்வீசஸ் அணியின் ஜாதுமணி தங்கம் வென்றார்.

50-55 கிலோ பிரிவில் ஜாதுமணி 5-0 என சக வீரரான பவன் பர்த்வாலை வீழ்த்தி முதல் தேசிய தங்கத்தை வென்றார். ஆதித்ய பிரதாப் 60-65 கிலோ பிரிவில் 3-2 என ஹிமாசலின் அபினாஷை வீழ்த்தி தங்கம் வென்றார். 75-80 கிலோ பிரிவில் அங்குஷ் மலஸ்துலங்காவை வீழ்த்தி தங்கம் வென்றார். மகளிர் பிரிவில் 51-54 கிலோ பிரிவில் ப்ரீதி, 60-65 கிலோ பிரிவில் பிரஞ்சல் யாதவ், 57-60 கிலோ பிரிவில் ரயில்வேயின் பிரியா, 80 பிளஸ் பிரிவில் அல்பியான் கான் முதல் தங்கத்தை வென்றனர்.

45-48 பிரிவில் மீனாட்சி, 48-51 கிலோ பிரிவில் தெலங்கானாவிந் நிகாத் ஸரீன் 70-75 கிலோ பிரிவில் அஸ்ஸாமின் லவ்லினாபோரோகைன் ஆகியோர் தங்கம் வென்றனர்.

12 தங்கத்துடன் சர்வீசஸ் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது.

## டி20 உலகக் கோப்பையை வெல்ல தென்னாப்பிரிக்காவுக்கு சிறிது அதிர்ஷ்டம் வேண்டும்: ஜாக் காலிஸ்

**சென்னை, ஜன.13:**

ஐசிசி டி20 உலகக் கோப்பையை வெல்ல தென்னாப்பிரிக்க அணிக்கு சிறிது அதிர்ஷ்டம் வேண்டுமென அந்த அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் ஜாக் காலிஸ் தெரிவித்துள்ளார்.

ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வருகிற பிப்ரவரி 7 ஆம் தேதி தொடங்கி மார்ச் 8 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. போட்டிகள் அனைத்தும் இந்தியா மற்றும் இலங்கையில் நடத்தப்படுகிறது. தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாடுகின்றன.

கடந்த 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இந்த நிலையில், ஐசிசி டி20 உலகக் கோப்பையை வெல்ல தென்னாப்பிரிக்க அணிக்கு சிறிது அதிர்ஷ்டம் வேண்டுமென அந்த அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் ஜாக் காலிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: எதிர்வரும் டி20 உலகக் கோப்பைத் தொடரில் தென்னாப்பிரிக்க அணி நன்றாக விளையாடி வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

டி20 உலகக் கோப்பையை வெல்ல அவர்களுக்கு சிறிது அதிர்ஷ்டமும் தேவைப்படுகிறது. இந்த முறை டி20 உலகக் கோப்பையை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

டி20 உலகக் கோப்பைத் தொடரில் பிப்ரவரி 9 ஆம் தேதி நடைபெறும் தனது முதல் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி, கனடாவை எதிர்த்து விளையாடவுள்ளது.

## கிரிக்கெட் வீரர் குறித்து அவதூறு கருத்து: ரூ.100 கோடி கேட்டு நடிகை மீது வழக்கு

**காசிப்பூர், ஜன.13:**

இந்திய கிரிக்கெட் வீரர் சூரியகுமார் யாதவ் தனக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாக நடிகை குஷி முகர்ஜி கூறிய புகாரால், அவர் மீது ரூ.100 கோடி மதிப்பிலான அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் பிரபலமான நடிகை குஷி முகர்ஜி என்பவர் சமீபத்தில் வெளியிட்ட கருத்து ஒன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதில், 'நான் கிரிக்கெட் வீரர்களை காதலிக்க விரும்பவில்லை; ஆனால் பல வீரர்கள் என்னை பின்தொடர்கின்றனர்' என்று தெரிவித்திருந்தார்.

குறிப்பாக இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சூரியகுமார் யாதவ், தனக்கு கடந்த காலங்களில் அடிக்கடி குறுஞ்செய்தி அனுப்பியதாக அவர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.





திருமணமான ஒரு வீரரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடிகை வெளியிட்ட இந்தத் தகவல் சமூக வலைதளங்களில் காட்டுத்தீ போல பரவியது.

ஆதாரமற்ற இத்தகைய புகார்களைக் கூறி விளம்பரம் தேடுவதாகக் கூறி ரசிகர்கள் பலரும் நடிகைக்கு தங்களது கடும் கண்டனங்களை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சூரியகுமார் யாதவின் சொந்த ஊரான உத்திரப்பிரதேச மாநிலம் காசிப்பூரைச் சேர்ந்த ஃபைசான் அன்சாரி என்பவர் நடிகை குஷி முகர்ஜி மீது சட்டப்பூர்வ நடவடிக்கையை தொடங்கியுள்ளார்.

தவறான தகவலை பரப்பியதற்காக நடிகை மீது ரூ.100 கோடி நஷ்ட ஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக காசிப்பூர் காவல் கண்காணிப்பாளர் டாக்டர் இராஜ் ராஜாவிடம் அளிக்கப்பட்டுள்ள புகாரில், 'பொய் குற்றச்சாட்டுகளை கூறி சூரியகுமார் யாதவின் புகழை சீர்குலைத்த நடிகையை உடனடியாக கைது செய்ய வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே சூரியகுமார் யாதவ் தனது மனைவி தேவிஷா ஷெட்டியுடன் திருப்பதி கோயிலில் சுவாமி தரிசனம் செய்த புகைப்படங்கள் வெளியாகியுள்ள நிலையில், இந்த வழக்கு விவகாரம் குறித்து இன்று வரை இருவரும் அதிகாரப்பூர்வமாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாஜக ஆட்சியில் மட்டுமே வளர்ச்சி சாத்தியம்: அமித் ஷா

**திருவனந்தபுரம், ஜன.13:**

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் பாஜக கூட்டத்தில் அமித் ஷா பேசுகையில், "உலகெங்கிலும் கம்யூனிசம் முடிவுக்கு வந்துவிட்டது; அதேபோல, இந்தியா முழுவதும் காங்கிரஸும் முடிவுக்கு வந்துவிட்டது.

பாஜக ஆட்சியில் மட்டுமே கேரளத்தின் வளர்ச்சி சாத்தியமாகும். எல்டிஎஃப் - யுடிஎஃப் கூட்டணியால், கேரளம் முன்னெப்போதும் இல்லாதவகையில் தேக்க நிலையை அடைந்துள்ளது. அவர்களின் கூட்டணி, ஊழலை அடிப்படையாகக் கொண்டது. மேலும், ஊழல்வாதிகளையும் அவர்கள் பாதுகாக்கின்றனர்.

கேரளத்தில் எழுச்சி பெறுவது கடினமாக இருந்தது. எங்களிடம் அதிகாரம் இல்லை; கொள்கைக்காக வேலைசெய்யும் தொண்டர்கள் மட்டுமே இருந்தனர். எங்கள் நம்பிக்கையை உடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், கேரளத்தில் பாஜக தொண்டர்கள் வலுவாக நின்று, வெற்றியும் பெற்றனர்.

கேரளத்தில் அரசாங்கத்தை அமைப்பது மற்றும் தேச விரோத சக்திகளிடமிருந்து கேரளத்தை காப்பது மட்டுமே எங்கள் தீர்மானம். கேரளத்துக்கு எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃபால் வளர்ச்சியைக் கொண்டுவர முடியாது என்பது மக்களுக்குத் தெரியும். கேரளத்தில் பாஜக முதல்வரைப் பார்க்கும் நேரம் நாளை வரும்." என்று தெரிவித்தார்.

# வெனிசுலாவின் செயல் அதிபர் நான் தான்: அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடி



**வாஷிங்டன், ஜன.13:**

வெனிசுலாவின் செயல் அதிபர் 'நான் தான்' என்று எடிட் செய்யப்பட்ட புகைப்படத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப் பொருள் கடத்துவதாக குற்றச்சாட்டை முன்வைத்து, அந்நாட்டின் மீது கடந்த 3ம் தேதி படையெடுத்த அமெரிக்கா, அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்து நாடு கடத்தினர். தற்போது இருவரும் அமெரிக்க சிறையில் உள்ளனர். இதனைத் தொடர்ந்து, வெனிசுலாவில் புதிய அரசு தேர்ந்தெடுக்கப்படும் வரை அமெரிக்கா நிர்வகிக்கும் என்றும், அந்நாட்டின் எண்ணெய் உற்பத்திக்கு அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்யும் என்றும் டிரம்ப் அறிவித்திருந்தார். ஆனால் வெனிசுலாவின் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, அந்நாட்டின் துணை அதிபராக இருந்த டெல்சி ரோட்ரிகஸ் இடைக்கால அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனிடையே, வெனிசுலாவுக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுக்கும் வகையில் கடந்த சில நாள்களாக அதிபர் டிரம்ப் உத்தரவுகளை வெளியிட்டு வருகிறார். இந்நிலையில் விக்கிபீடியா தளத்தில் 'வெனிசுலா செயல் அதிபர் டொனால்ட் டிரம்ப்' என்று எடிட் செய்யப்பட்ட தனது புகைப்படத்தை ட்ரூத் சோசியல் தளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ளார். இடைக்கால அதிபராக டெல்சி ரோட்ரிகஸ் செயல்பட்டு வரும் நிலையில், தன்னை செயல் அதிபராக டிரம்ப் அறிவித்துக் கொண்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மார்ச் 3-ல் 'பிளட் மூன்' - 2026-ன் முதல் சந்திர கிரகணம்!



**நியூயார்க், ஜன.13:**

2026ஆம் ஆண்டின் முதல் சந்திரகிரகண நிகழ்வு மார்ச் மாதம் நிகழவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்த கிரகணத்தின்போது சந்திரன் 82 நிமிடங்கள் ரத்த சிவப்பு நிறத்தில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஆகியவை ஒரே நேர்கோட்டில் வரும்போது, பூமியின் நிழல் சந்திரனின் மீது விழுவதால் ஏற்படும் ஒரு வான்நிகழ்வே சந்திர கிரகணம். அப்போது சூரிய ஒளி சந்திரனை அடைவதைத் பூமி தடுக்கிறது, இதனால் நிலவு மங்கலாகத் தோன்றும் அல்லது சிவப்பு நிறத்தில் தெரியும். காரணம் பூமியின் வளிமண்டலத்தின் வழியாக சூரிய ஒளி பயணிக்கும்போது, நீல நிற ஒளி சிதறடிக்கப்படுகிறது, ஆனால் சிவப்பு நிற ஒளி வளைந்து (REFRACTED) சந்திரனை அடைகிறது. இதனால் நிலவு சிவப்பு நிறத்தில் காணப்படும். இதையே உலகம் முழுவதும் BLOOD MOON என அழைக்கின்றனர்.

இந்த சந்திர கிரகணம் மூன்று வகைப்படுத்தப்படுகின்றன. புறநிழல் சந்திர கிரகணம், பகுதி சந்திர கிரகணம், முழு சந்திர கிரகணம் என வகைப்படுத்தப்படுகின்றன. முதலில், புறநிழல் சந்திர கிரகணம் (PENUMBRAL ECLIPSE) ஏற்படும்; அப்போது நிலவு பூமியின் வெளிப்புற நிழல் பகுதிக்குள் நுழைவதால் சற்றே மங்கலாகத் தெரியும். அடுத்ததாக, நிலவு பூமியின் முழுமையான கருநிழலுக்குள் (UMBRA) நகரத் தொடங்கும் போது பகுதி கிரகணம் (PARTIAL ECLIPSE) ஏற்படும். இறுதியாக, முழுமை நிலையின் (TOTALITY) போது, நிலவு முழுவதுமாக பூமியின் கருநிழலுக்குள் இருப்பதால் அது சிவப்பு நிறத்தில் ஒளிரும்.

தற்போதைய வானியல் தரவுகளின்படி, மார்ச் நிகழ்வில் இந்த முழுமை நிலை சுமார் 58 நிமிடங்கள் மற்றும் 19 வினாடிகள் நீடிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், வளிமண்டல நிலைமைகளைப் பொறுத்து, நிலவு சிவப்பு நிறத்தில் தோன்றும் அந்த நிலை சுமார் 82 நிமிடங்கள் வரை நீடிப்பது போன்ற உணர்வைத் தரக்கூடும் என சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாத தளங்கள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல்



**வாஷிங்டன், ஜன.13:**

சிரியாவில் உள்ள ஐஎஸ் பயங்கரவாதிகளின் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாத தளங்கள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல்குறிவைத்து அமெரிக்க படைகள் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் 13-ம் தேதி ஐஎஸ் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 35 இடங்களைக் குறிவைத்து 90-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. மொத்தம் 20 விமானங்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன. இந்தத் தாக்குதல்கள் சிரியாவின் எந்தப் பகுதியில் நடத்தப்பட்டது அல்லது இதில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற விவரங்களை அமெரிக்க ராணுவம் இன்னும் வெளியிடவில்லை. இருப்பினும், பயங்கரவாத மையங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# புதினின் முட்டாள்தனம்... அமெரிக்காவால் மட்டுமே முடியும் - ஜெலன்ஸ்கி



**கீவ், ஜன.13:**

ரஷியா மற்றும் உக்ரைன் இடையே நடந்து வரும் போரானது 3 ஆண்டுகளை கடந்து 4-ம் ஆண்டை நோக்கி செல்கிறது. நேட்டோவில் சேரும் முடிவை உக்ரைன் கைவிட கோரியும், ராணுவ நடவடிக்கை என்ற பெயரிலும் ரஷியா போரில் ஈடுபட்டு வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி உள்ளனர்.

இந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ரஷிய போரை ஒன்று சேர்ந்து தடுத்து நிறுத்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் இன்று கூறும்போது, கடந்த டிசம்பரில் இருந்து இதுவரை ரஷியா, தினமும் ஆயிரம் பேருக்கு குறையாமல் போரில் வீரர்களை இழந்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வராமல் ரஷியா நீட்டிப்பதன் பலனாக இது நடக்கிறது. இது முட்டாள்தனம். இதனை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் படைகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே தடுக்க முடியும் என கூறியுள்ளார்.

ஒவ்வொரு நாளும் நடைபெறும் இந்த போரானது, முட்டாள் மனிதர்களிடம் இருந்து உலகம் தன்னை பாதுகாக்க முடிவில்லை என்றே நினைவூட்டுகிறது. அதனை நாம் பாதுகாக்க வேண்டும். ரஷியா தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். உக்ரைன் மக்களுக்கு பாதுகாப்பாக, உதவியாக மற்றும் அவர்களை மீட்பதற்காக உள்ள ஒவ்வொருவருக்கும் அவர் நன்றியும் தெரிவித்து கொண்டார்.

# உக்ரைன் மீது ரஷியா ஒரே வாரத்தில் 1,100 டிரோன்கள் தாக்குதல்



**கீவ், ஜன.13:**

ரஷியா மற்றும் உக்ரைன் இடையே நடந்து வரும் போரானது 4-ம் ஆண்டை நெருங்கி உள்ளது. நேட்டோவில் சேரும் முடிவை உக்ரைன் கைவிட கோரியும், ராணுவ நடவடிக்கை என்ற பெயரிலும் ரஷியா போரில் ஈடுபட்டு வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி உள்ளனர். இந்நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் பேசும்போது, உக்ரைன் மீது ரஷியா கடந்த வாரத்தில் 1,100 டிரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது என குற்றச்சாட்டாக கூறினார். இதன்படி, வான்வழியே 890-க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியும், குறுகிய ரக, நடுத்தர ரகம் என பல்வேறு வகையான 50-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளது.

ராணுவ நோக்கம் இல்லாத எரிசக்தி உட்கட்டமைப்புகள், குடியிருப்புகள், கட்டிடங்கள் மீதே இந்த தாக்குதல்கள் நடந்தன என அவர் வேதனையுடன் கூறியுள்ளார்.

உக்ரைனின் பல்வேறு பகுதிகளில் கடந்த சனிக்கிழமை இரவில் ரஷியா நடத்திய தாக்குதலில் 2 பேர் பலியாகி உள்ளனர். 15 பேர் காயமடைந்தனர். அதற்கு முன்தினம் இரவில் நடந்த தாக்குதலில் தலைநகர் கீவில் மட்டுமே ஆம்புலன்ஸ் ஊழியர் உள்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

# ஈரானில் கலவரத்தைத் தூண்ட அமெரிக்கா, இஸ்ரேல் சதி: அதிபர் பெசெஷ்கியான் குற்றச்சாட்டு

**சிரியா, ஜன.13:**

ஈரானில் நிலவி வரும் பதற்றமான சூழலுக்கு அமெரிக்காவும், இஸ்ரேலுமே காரணம் என்றும், இவ்விரு நாடுகளும் திட்டமிட்டு கலவரங்களைத் தூண்டி வருவதாகவும் ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் ஞாயிற்றுக்கிழமை குற்றஞ்சாட்டினார். மேலும், 'மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார்; அதேநேரம், வன்முறையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் அவர் எச்சரித்தார்.

ஈரான் மீது சர்வதேச நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் மற்றும் அந்த நாட்டின் அணுசக்தித் திட்டம் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய போராட்டம், தற்போது ஆட்சி மாற்றத்தைக் கோரும் மாபெரும் மக்கள் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

203 பேர் உயிரிழப்பு: தலைநகர் டெஹ்ரான், புனித நகரான மஷ்ஹாத் ஆகிய இடங்களில் போராட்டங்கள் மிகவும் தீவிரமடைந்துள்ளன. 2-ஆவது வாரத்தை எட்டியுள்ள இந்தப் போராட்டத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் தாக்குதல்களில் இதுவரை 203 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆட்சிக்கு எதிரான போராட்டம் தொடங்கிய பிறகு முதல்முறையாக அரசுத் தொலைக்காட்சியில் நாட்டு மக்களிடையே உரையாற்றிய அதிபர் மசூத் பெசெஷ்கியான் கூறியதாவது: ஈரானில் குழப்பத்தை ஏற்படுத்த அமெரிக்காவும் இஸ்ரேலும் துடிக்கின்றன. வெளிநாடுகளில் அமர்ந்துகொண்டு இங்கிருக்கும் போராட்டக்காரர்களுக்கு அவர்கள் உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றனர். நாட்டின் மீது நேரடித் தாக்குதல் நடத்தியவர்களே, தற்போது போராட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு வன்முறையைப் பரவச் செய்கின்றனர்.

# ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுங்கள்: டிரம்புக்கு முன்னாள் இளவரசர் வேண்டுகோள்

**பாரீஸ், ஜன.13:**

ஈரான் நாட்டில் அதிகரித்துள்ள பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் போராட்டம் பரவியுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். ஈரானின் மறைந்த அரசர் முகமது ரெசா பஹ்லவி. இவருடைய மகன் ரெசா பஹ்லவி (வயது 65). முன்னாள் இளவரசரான பஹ்லவி அந்நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். இந்நிலையில், வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ள அவர், ஈரானில் நடந்து வரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். அவர், மக்கள் தெருக்களில் இறங்கி, அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடுங்கள் என கூறினார்.

இந்த நிலையில், அவர் பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியின்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப். நீங்கள் அமைதிக்கான மனிதர் என முன்பே ஒரு மரபை உருவாக்கி வைத்து விட்டீர்கள். உங்களுடைய ஆதரவான வார்த்தைகள், விடுதலைக்காக போராடும் வலிமையை ஈரானியர்களுக்கு தந்துள்ளது. ஒபாமா, பைடன் போன்று நீங்கள் கைவிட்டு விடமாட்டீர்கள் என அவர்களுக்கு தெரியும். இந்த பயங்கரவாத அரசாட்சியின் வீழ்ச்சிக்கு பின்னர், ஈரான் மக்கள் அமைதி, வளத்திற்காக உங்களுடைய சிறந்த நண்பராக மாறுவார்கள். அவர்களை இதில் இருந்து விடுபட உதவி செய்து, ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுங்கள் என கூறினார்.

# லெபனானில் ஹிஸ்புல்லா ஆயுத கிடங்கு மீது இஸ்ரேல் தாக்குதல்

**ஜெருசலேம், ஜன.13:**

இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டு உள்ள செய்தியில், தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் பல்வேறு ராணுவ தளங்கள் கண்டறியப்பட்டு உள்ளன. சமீப மாதங்களாக அவற்றில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்துள்ளது. இந்த தளங்களில் ஹிஸ்புல்லா அமைப்பை சேர்ந்தவர்களின் நடவடிக்கைகள் கண்டறியப்பட்டன. இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையேயான புரிந்துணர்வை அத்துமீறும் வகையில், இந்த ஆயுத கிடங்குகளில் ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பயங்கரவாத செயல்கள் இருந்தன என தெரிவித்து உள்ளது. கடந்த 2024-ம் ஆண்டு நவம்பரில் இருந்து இஸ்ரேலுக்கும், லெபனானுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ளது. எனினும், லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் நடவடிக்கைகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 400-க்கும் மேற்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பினர் கொல்லப்பட்டதுடன், அவர்களுடன் தொடர்புடைய தளங்களை இலக்காக கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்துள்ளன.

# ஈரானில் அரசியல் மோதலாக மாறிய மக்கள் எழுச்சிப் போராட்டங்கள்



**தெக்ரான், ஜன.13:**

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில், அதன் நேரடி தாக்கம் மருத்துவமனைகளில் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

தெக்ரான் உள்ளிட்ட நகரங்களில் உள்ள மருத்துவமனைகள், உயிரிழந்தும் கடுமையாக காயமடைந்தும் வரும் போராட்டக்காரர்களால் நிரம்பி வழிகின்றன. பிபிசியிடம் பேசிய மூன்று மருத்துவமனைகளின் பணியாளர்கள் தெரிவித்த தகவல்கள், நிலைமையின் தீவிரத்தை வெளிச்சம் போடுகின்றன.

தெக்ரானில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையின் மருத்துவ ஊழியர், "இளைஞர்களின் தலை மற்றும் இதயப் பகுதிகளில் நேரடியாக சுடப்பட்ட குண்டு காயங்கள் அதிகம்" எனக்கூறியுள்ளார். இது கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையைத் தாண்டி, உயிரைப் பறிக்கும் ராணுவ நடவடிக்கைகளாக மாறிவிட்டதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டும் சூழலை உறுதி செய்கிறது. தலைநகரில் உள்ள ஒரு கண் மருத்துவமனை கூட 'நெருக்கடி நிலை' அறிவித்திருப்பது நினைவூட்டத்தக்கது.

பிபிசியிடம் பேசிய மருத்துவர்களில் இருவர், நேரடி குண்டுகள் (LIVE AMMUNITION) மற்றும் பெல்லட் குண்டுகளால் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு காயங்களுக்கு சிகிச்சை அளித்ததாக கூறியுள்ளனர். இது, போராட்டக்காரர்களை கலைப்பதற்கான நடவடிக்கைகள் எவ்வளவு கடுமையாக உள்ளன என்பதைக் காட்டுகிறது.

சர்வதேச அரசியல் மோதல்:

இந்த உள்நாட்டு நெருக்கடியுடன் இணைந்து, சர்வதேச அரசியல் அழுத்தங்களும் அதிகரித்துள்ளன. வெள்ளிக்கிழமை, போராட்டக்காரர்களைக் கொல்வது "ராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்" என அமெரிக்கா மீண்டும் எச்சரித்தது. அதற்கு பதிலளித்த இரான், அமைதியான போராட்டங்களை "வன்முறையான சீர்குலைவு நடவடிக்கைகளாக" மாற்றியதற்கு அமெரிக்காவே காரணம் என குற்றம்சாட்டியுள்ளது. இதன் மூலம், போராட்டங்கள் இனி வெறும் உள்நாட்டு பிரச்னை அல்ல; அது சர்வதேச அரசியல் மோதலின் ஒரு பகுதியாக மாறிவருவதை உணர முடிகிறது. சமீபத்திய முன்னேற்றங்களுக்கு எதிர்வினையாற்றிய அமெரிக்க அதிபர் டிரம்ப், "ஈரான் இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் சுதந்திரத்தை எதிர்நோக்குகிறது; அதற்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது" என்று சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார். இந்த கருத்து, போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக தோன்றினாலும், ஈரான் அரசின் பார்வையில் அது வெளிநாட்டு தலையீட்டின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது இந்த போராட்டங்களின் பின்னணி முழுக்க பொருளாதார சிக்கல்களே. விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, அரசு செலவுக் கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் இரண்டு வாரங்களுக்கு முன்பு டெஹ்ரானில் தொடங்கிய போராட்டங்கள், தற்போது ஈரானின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் ஊர்களுக்கு பரவியுள்ளது.